திருக்கோயில்

ன் கடன்
பணிசெய்து கிடப்பதே

OFFICE OF THE STATE EDITOR
GAZ...
130/வ/72
9-DEC 1972
9/12/72
170



மாலை 15] பரிதாபி — கார்த்திகை, மார்கழி — டிசம்பர், 1972 [மணி 3

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசின்

திருவேற்காடு தேவிகருமாரியம்மன் கோயில் திருப்பணி
கனைத் தொடக்கி வைத்து, அறநிலைய அமைச்சர்
மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள்
உரைநிகழ்த்துதல். (4-11-72).

பொருளடக்கம்

1. திருவாசகமும் திருவருட்பாவும்
2. திருவண்ணாமலைக் கார்த்திகைத்தீபம்
3. அருட்பெருங் காப்பியம்
4. " எட்டுக் கொலாம் அவர் ஈறில் பெருங் குணம் "
5. கடவுளின் வடிவநிலை
6. அறைகூவி வீடருளும் ஆத்மநாதன்
7. உமாபதி சிவாசாரியரின் சதரத்தின சங்கிரகம்
8. வெள்ளிவிழாப் பேருரை
9. சிவபிரானின் திருவடையாளம்
10. சிரிக்கும் திறம்
11. சிவபூசை
12. படிமப்பாதம் வைத்த அப்பரிசு

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும்   தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புவர்கள் " திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை–34 " என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.—ஆசிரியர்.



மாலை 15] பரிதாபி — கார்த்திகை, மார்கழி டிசம்பர் 1972 [மணி 3

திருவாசகமும் திருவருட்பாவும்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின்கண் உள்ள அரும்பெறல் நூல்கள் பலவற்றுள், சமயத்துறையில் ஒப்புயர்வற்ற தொன்றெனச் சிறந்து திகழ்வது திருவாசகம். ''ஓதி ஓதி உணரும்தொறும் உணர்ச்சியுதவும்'' தெய்வநலஞ் சான்ற திருவாசகத்தின், சிறப்பிற்கு ஓர் எல்லையேயில்லை. தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகத் தோன்றியருளிய சான்றோர்கள் பலரும், மணிவாசகர் அருளிய திருவாசகத்தினைத் தம் உயிரினும் இனிய மிக மேலான அருளியல் நூலாகப் போற்றிப் பாராட்டியுள்ளனர்.

இராமலிங்க அடிகளார் :

அவர்களுள் எல்லாம் தலைசிறந்த ஒருவராகத் திகழ்பவர், திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகளார் ஆவர். திருவாசகத்தின்பால், திருவருட்பிரகாச வள்ளலார் கொண்டிருந்த ஈடுபாடு, நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பினை விளைவிப்பதாகும்.

''சாத்திரங்களில் சிறந்தது திருமூலர் திருமந்திரம்; தோத்திரங்களில் சிறந்தது திருவாசகம்'' என்பது வள்ளலார் திருவுள்ளம். திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான் வெளியிட்டருளிய சிவானுபவத் திறங்களைத் தாமும் ஒரு சிறிதாவது அநுபவித்து உய்தல் வேண்டும் என்பது அடிகளின் வேணவா.

தேசகத்தில் இனிக்கின்ற
    தெள்ளமுதே! மாணிக்க
வாசகனே! ஆனந்த
    வடிவான மாதவனே!
மாசகன்ற நீ, திருவாய்
    மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அநுபவம்நான்
    அநுபவிக்க அருளுதியே!

திருவொற்றியூர் நெடுஞ்சாலை, அருட்டிரு அல்லமாப்பிரபு தேவர் திருமண மண்டபத்தில் நிகழ்ந்த இராமலிங்க வள்ளலார் பிறந்தநாள் விழாவில் ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது (8-10-72). —ஆசிரியர்.

JL Q2m2U, N59T15 N72.1M.15.3

திருவாசக இன்பம்:

திருவாசகத் திருமறையினை ஓதும்பொழுதெல்லாம், தாம் பெற்ற இன்ப அநுபவம், ''கற்பிற் சிறந்த கன்னிப்பெண் ஒருத்தி, தான் காதலித்து மணந்து கொள்ள இருக்கும் கணவனின் ஒப்புயர்வற்ற அழகையும், குண நலன்களையும் எல்லாம் பற்றித், தனது அரும்பெறல் ஆருயிர்த் தோழி ஒருத்தி, ஆராய்ந்து அறிந்து வந்து புகழ்ந்துரைக்கக் கேட்கும்போது, எத்தகைய இன்பத்தை அடைந்து மகிழ்வாளோ, அத்தகைய ஒரு சிறந்த இன்ப அநுபவத்தினும் மேலானது'' என்று இனிதெடுத்து இயம்பி மகிழ்கின்ருர் இராமலிங்க அடிகளார்.

148704

''தேசமிகும் திருவாத
வூர்த்தேவுஎன்று உலகுபுகழ்
மாமணியே! நீ உரைத்த
வாசகத்தை எண்ணுந்தோறும்,
காமமிகு காதலன்தன்
கலவிதனைக் கருதுகின்ற,
ஏமமுறு கற்புடையாள்
இன்பினும்இன் பெய்துவதே''

இதன்கண் இராமலிங்க அடிகளார், தம்மை ஒரு கற்பிற்சிறந்த காதற் கன்னிப்பெண் ஆகவும்; சிவபெருமானை அக்காதற் கன்னிப் பெண் காதலித்துக் கடிமணம் புரிந்து கொள்ள விரும்பும் கணவனுகவும்; மணிவாசகப் பெருந்தகையைத் தம் உள்ளத்திற்கியைந்த உணர்ச்சியொத்த உயிரினும் இனிய தோழியாகவும்; அம்மணிவாசகர் சிவபெருமானின் பலவகைச் சிறப்புகளையும் பண்பு நலன்களையும் தண்ணளித் திறன்களையும் புகழ்ந்து போற்றிப் பாடுவதை, ஒரு காதற் கன்னிப்பெண்ணுக்கு, அவள் மணக்கப்போகும் காதற் கணவனின் அழகையும் குண நலன்களையும் பற்றித் தோழி விவரித்துரைத்து மகிழ்ச்சி விளைவிப்பதாகவும், உருவகம் செய்து பாடுகின்ருர். இதனுல், அவர் திருவாசகத்தின்பாற் கொண்டிருந்த பெரும்பற்று இணத்தென நாம் எண்ணியுணரலாம்.

திருவருட்பா :

திருவாசகத்தை ஓதி ஓதி மகிழ்ந்து தாம் பெற்ற இறையருள் இன்ப அநுபவ நலனையே, இராமலிங்க அடிகளார் தமது திருவருட்பாவில் விரித்துரைத்து விளக்கிப் பாடியிருக்கின்ருர் எனலாம். திருவாசகத்தின் எளிமை இனிமை தெளிவு உருக்கம் தெய்விகம் ஆகிய பண்பு நலன்கள், திருவருட்பாவிலும் சிறப்புறஅமைந்து ஒளிமிக்குத் திகழ்கின்றன. ஓதுவோர் உள்ளங்களையெல்லாம் திருவாசகம் உருக்கிக் கொள்ளை கொள்ளுதல்போல, இராமலிங்க அடிகள் அருளிய திருவருட்பாவும், கல்லாரும் கற்ருேருமாகிய எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்து ஈர்த்து உருக்கிக் கொள்ளை கொள்ளுகின்றது. திருவாசகக்கருத்துக்களையும்சொற்கள் சொற்ருெடர்களையும் திருவருட்பிரகாச வள்ளலார் தம்முடைய திருவருட்பாவில் ஆங்காங்கே பெரிதும் போற்றி அமைத்துப் பாடியருளியிருக்கக் காண்கின்ருேம். இவ்வுண்மைக்குரிய ஒரு சில சான்றுகளை மட்டும் இங்கு இயன்ற அளவு சுருக்கமாகக் காண்போம்.

(1) எந்தை எழுத்து ஐந்தே :

திருவாசகம் 'நமச்சிவாய வாழ்க' என்று தொடங்குகின்றது. அந் நமச்சிவாய மந்திரத்தின் இயல்புகளையெல்லாம், திருவருட்பிரகாச வள்ளலார் திருவருட்பாவில் ஆங்காங்கே வியந்து போற்றி இன்புறுகின்ருர். ''நமச்சிவாயம் காண், தாம் பெறுந் துணையே'' என்றும், ''நமச்சிவாயத்தை நான் மறவேனே'' என்றும், ''சிவாயநம என்று இடு நீறே''என்றும், இனிய தொடர்கள் ஈற்றில் அமைந்த பதிகங்கள் பலவற்றை, நாம் திருவருட்பாவில் காணலாம். பேராயிரம் உடைய பெருமானுகிய இறைவனுக்கு உரிய மூலமந்திரம், அவனுடைய எல்லையற்ற பெருமைக்கு ஏற்ப, மிகப்பல ஆயிரம் எழுத்துக்களாலோ, அல்லது நூறுபல எழுத்துக்களாலோ, மிக நீண்டதாக இல்லாமல், நம்மனோர் அனைவரும் எளிதில் ஓதி உய்தற் பொருட்டு ஐந்தே எழுத்துக்களால் அமைந்துள்ள திறன், மிகவும் வியந்து போற்றுதற்குரிய தொன்றன்ருே? என, இராமலிங்க அடிகளார் இறும்பூதெய்துகின்ருர். ''ஆயிரம் அன்றே! நூறும் அன்றே! ஈரைந்து அன்றே! ஆயிரம்பேர் எந்தை எழுத்து ஐந்தே காண்! நீ இரவும் எல்லும் நினைத்தியென ஏத்துகினும், எந்தாய்! வீண் செல்லும் மனம் என்செய்கேன்? செப்பு'' என வரும் திருவருட்பாச் சிவநேச வெண்பா, தாம் சிந்தித்து இன்புறற்பாலது.

(2) பிஞ்ஞகன்:

திருவாசகத்தின் தொடக்கத்தில் அமைந்துள்ள சிவபுராணம் என்னும் பகுதியில்

''பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கல்ழகள் வெல்க'' என்னும் வரியினை நாம் அனைவரும் நன்கறிவோம். திருவாசகத்தின் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும் ஆழ்ந்து ஆராய்ந்து உணர்ந்தவராகிய வள்ளலார், இவ் வரியில் வரும் பிஞ்ஞகன் என்னும் சொல்லை நீள நினைந்துணர்ந்து சிந்தித்துப் போற்றியருள் கின்றார். 'பிஞ்ஞகன்' என்னும் சொல் ஞகரம் ஆகிய மெல்லின எழுத்தில் அமைந்து திகழ் கின்றது. இறைவனுக்குரிய திருப்பெயர்களுள், மெல்லின எழுத்தில் அமைந்த பிஞ்ஞகன் என் னும் சொல்லை ஒலிப்பதனால், மெல்லின எழுத் துக்கள் பிறந்து ஒலிப்பதற்குரிய நம்முடைய மூக்கு புனிதமுற்றுச் சிறப்பு எய்துகின்றது. இல்லையேல், மூக்கின் துளைகள் எச்சிறப்பும் பயனும் அற்று, அழுக்குகள் வடிகின்ற சாக் கடைத் துளைகளுக்கும், பாம்புகள் உள்ளும் புறம் பும் செல்கின்ற புற்றின் துளைகளுக்கும், பசுமட் பாண்டங்களின் துளைகளுக்குமே சமமாகும் என்பது வள்ளலார் கூற்று. ''புல் அங்கண நீர்ப் புழை என்கோ? புற்றென் கோ? சொல்லும் பசுமண்துளையென்கோ? வெல்லுஞ்சீர் வியாத பிஞ்ஞகப்பேர் மெல்லினத் தில் நல்லிசை தான் தோயாத நாசித்துளை'' என வரும் திருவருட்பாப் பாடல், திருவாசகத்தில் வரும் பிஞ்ஞகன் என்னும் சொல்லில் இராமலிங்க அடிகளார் எவ்வளவு ஈடுபட்டுச் சிந்தித்திருக்கின்றார் என்பதனைத் தெற்றென வுணர்த்தும்.

(3) அறம்பாவம் எனும் அருங் கயிறு:

இவ்வாறே, சிவபுராணப் பகுதியில் ''அறம் பாவம் எனும் அருங்கயிற்றால் கட்டி'' என்னும் அழகிய தொடர் வருகின்றது இவ்வழகிய இனிய தொடரின் பொருளை அழுந்திச் சிந்தித்து ஈடுபட்டு நின்ற இராமலிங்க அடிகளார்,

தீவினைநல் வினைஎனும்வன் கயிற்றால் இந்தச்
சீவர்களை ஆட்டுகின்ற தேவே! நாயேன்
ஏவினைநேர் கண்மடவார் மையற் பேயால்
இடருழந்தும் சலிப்பின்றி, என்னே? இன்னும்
நாவினைஎன் பால்வருந்திக் கறண்டு கின்ற
நாய்க்கும்நகை தோன்றநின்று நயக்கின்
றேன்; நான்
ஆவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லும்
அறிவிலிக்கும் அறிவிலியேன் ஆனவாறே!

எனவரும் மகாதேவ மாலைச்செய்யுள் (86) முதலடிகளில், அவ்வரியின் கருத்தினை அமைத் துப் பாடியிருத்தல் காணலாம்.

(4) மூர்க்கனும் முதலையும்:

திருவாசகத்தில் போற்றித் திருவகவல் என்னும் பகுதியில் ''கொடிறும் பேதையும் கொண்டது விடா'' என்னும் உலகியற் பழமொழி ஒன்று பயின்று வருகிறது. அவ்வரி யின் அரும் பொருளில் ஆழ்ந்து ஈடுபட்ட அடி களார், ''முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா என்று, பெரியோர்கள் கூறுவர். மூடனாகிய யான் நின் திருப்பெயரை நன்றாகக் கூறி வந்தேன். ஆயினும், அதனையே உறுதியாகக் கடைப்பிடித்துக் கொள்ளாமல், இடையிற் கை விட்டு மறந்திருக்கின்றேன். நாணமற்ற என் வரையில் அந்தப் பழமொழி ஒருவகையில் பொய்த்துவிட்டது போலும்'' என்னும் கருத்து அமைய, மேலைத் திருவாசகவரியின் பொருளைப் பின் வரும் திருவருட்பாச் செய்யுளில் அமைத் திருத்தல் காணலாம்.

வென்றே முதலையும் மூர்க்கரும்
கொண்டது மீளவிடார்
என்றே உரைப்பர்; இங்கு என்போன்ற
மூடர் மற்றில்லை; நின்பேர்
நன்றே யுரைத்துநின்று அன்றே
விடுத்தனன்; நாணில் என்மட்டு
இன்றேஅக் கட்டுரை இன்றே,
என் சொல்வது? இறையவனே!.

(5) நச்சுமா மரம்:

திருவாசகத்தில் திருச்சதகம் என்பது ஒரு சிறந்த பகுதி. திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் தம்மை ஆட்கொண்டருளி மறைந்த ஞானாசிரியராகிய சிவபெருமானைப் பிரிந்த பிரி வாற்றாமையால் விளைந்த துயர மேலீட்டால், மாணிக்கவாசகர் பாடிய நூறு பாடல்களைக் கொண்ட பகுதியே, திருச்சதகம் என்பர். துயரம் மிக்க நினைவுகளைப் பற்றிச் சொல்லும் கவிதைகளே, மிகவும் இனிமை வாய்ந்த கவிதைகள் ஆகும் (''The sweetest songs are those that tell of the saddest thoughts''—P.B. Shelley) என்று அறிஞர்கள் கூறுவதுண்டு. அதன்படி ஞானாசிரியரின் பிரிவாகிய துயர மேலீட்டால் அருளிச் செய்யப்பெற்ற திருச்

சதகப் பாடல்களின் சிறப்பும் இனிமையும் பெரிதும் போற்றத்தக்கவை.

அதன்கண் ஒரு பாடலில் மாணிக்க வாசகர் "விதையில்லாமலே விளைவு செய்பவனே! விண்ணும் மண்ணுமாகிய எல்லா உலகங்களையும் தோற்றிக் காத்து ஒடுக்குபவனே! வஞ்சகப்பெரும் புலையனாகிய என்னை, உன் கோயில் வாயிலில் இருக்கும் பிச்சனாக்கினாய்! என்னைப் பெரிய அன்பருக்கு உரியனாக்கினாய்! தாம் நல்லதென்று கருதி வைத்தது, பின்னர் ஒரு பெரிய நச்சுமரமாக மாறினாலும், வைத்து வளர்த்தவர்களே அதனை வெட்டி அழித்தொழிக்க முற்படமாட்டார்கள். ஆதலின் என்னைத் தோற்றுவித்த நீயே, நான் எத்துணைக் கொடியவனாயினும், என்னை ஒறுத்து அழிக்க முற்படாமல் காத்தருளல் வேண்டும்'' என இறைவனிடம் வேண்டிக் கொள்ளுகின்றார். "தாம் வளர்த்ததோர் நச்சு மாமரம் ஆயினும் கொலார்; நானும் அங்ஙனே உடைய நாதனே'' என வரும் திருவாசகவரியின் பொருளில் அழுந்திய இராமலிங்க அடிகளார், "எச்சம் பெறும் உலகோர் எட்டி மரம் ஆனாலும், பச்சென் றிருக்கப் பகர்வர்காண்; வெச்சென்ற நஞ்சனை; யேன் குற்றம்எலாம் நாடாது நாதாஎனை அஞ்சல் நையேல் என்பாய் அமர்ந்து'' என்றும்,

"பாம்பாயினும் உணப் பால்கொடுப்பார்;
வளர்ப்பார்; மனைப்பால்
வேம்பாயினும் வெட்டல் செய்யார்;
வளர்த்த வெருட்சிக் கடாத்
தாம்பாயினும், ஒரு தாம்புஆயினும்
கொடு, தாம் பின்செல்வார்;
தேம்பாய் மலர்க்குழற்கு ஆம்பாக!
என்னையும் சேர்த்துக் கொள்ளே''

என்றும் வரும் திருவருட்பாப் பாடல்களில், அத் திருவாசக வரியின் கருத்தினைத் தழுவிப் போற்றி அமைத்திருத்தல், அறிந்து மகிழ்தற் குரியது.

(6) பட்டி மண்டபம் ஏற்றினை:

மாணிக்கவாசகர், தம்மை இறைவன் கட்டறுத்து ஆண்டுகொண்டான்; கண்ணார நீறிட்ட அன்பர்களும் பிறரும் காணும்படி, எட்டும் இரண்டும் கூடச் சேர்த்து எண்ணத் தெரியாத இழிந்த தம்மை, உயர்ந்த புலவர்கள் கூடி, ஆராய்ச்சிச் சொற்போர்கள் நிகழ்த்து கின்ற பட்டிமண்டபத்தில் ஏறவைத்துவிட்டான் என்கிறார். தமக்கு இறைவன் செய்த அருள் நலத்தினைப் "பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை'' என்றும்; தம்முடைய தகுதியற்ற தன்மையினை "எட்டினோடு இரண்டும் அறியேன்''. என்றும், மணிவாசகர் குறிப்பிட்டிருக்கும் திறன்' நெஞ்சையள்ளும் சிறப்புமிக்க செஞ்சொல்வரிகளாகும். இவ்வரிகளில் ஈடுபட்ட வள்ளலார் "எட்டிரண்டும் என்? என்றால் மயங்கிய என்றனக்கே எட்டாத நிலையெல்லாம் எட்டுவித்த குருவே''—"ஓதியுணர்ந்தவர் எல்லாம் எனைக் கேட்க எனைத்தான் ஓதாமல் உணர்ந்து உணர்வுறச்செய் உறவே''— "நாட்டார்கள் சூழ்ந்து மதித்திட மணிமேடையிலே நடுவிருக்க என்றனையே நாட்டிய பேரிறைவா'' என்றெல்லாம் பலவாறு போற்றிப் பாடியருளியிருக்கின்றார்.

(7) திருவெம்பாவை:

திருவாசகத்தில் வரும் திருவெம்பாவை என்னும் பகுதியின் சிறப்பை அனைவரும் அறிவர். இராமலிங்க அடிகளார் அதன்கண் தனிச்சிறப்பான ஈடுபாடு கொண்டிருத்தல் வேண்டும். "அருட் பெருஞ் சோதி, தனிப்பெருங் கருணை'' என வள்ளலார் எழுப்பிய அருள் முழக்கம், "கேழில் பரஞ்சோதி கேழில் பரங் கருணை''என்னும் திருவெம்பாவை வரியினையே அடிஒற்றி அமைந்ததாகத் தெரிகின்றது. மேலும், திருவெம்பாவை வரிகளுள் "ஓத உலவா ஒருதோழன் தொண்டர் உளன்'' என்பது ஒரு சிறந்த வரியாகும். இதன்கண் வரும் "தோழன்'' என்னும் சொல் சுந்தரரைக் குறித்ததாகல் வேண்டும் என அறிஞர்கள் சிலர் கூறுவர். மற்றுஞ் சில ஆராய்ச்சியாளர்களோ, அற்றன்று; தோழம் என்பது எண்ணற்ற பல கோடிகளைக் கொண்ட ஒரு பேரெண் என்பர். இத்தகைய ஆராய்ச்சிக் கருத்துக்களுக்கு அடிப்படையும் நிலைக்களமுமாக அமைந்த அத் திருவாசக வரியினை, வள்ளலார் தமது திருவருட் பாவில் "ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன், சாதல் ஒழித்தென்னைத் தானாக்கிப்— பூதலத்தில் ஐந்தொழில் செய்கென்றே அருட் சோதிக் கோல் அளித்தான், வெந்தொழில் போய் நீங்க விரைந்து'' என்னும் பாடலில் முழுவதாகத் தழுவி எடுத்துப் போற்றி அமைத்துக் கொண்டிருக்கும் திறம், சிந்தித்து இன்புறுதற்குரியது.

(8) பேதித்து வளர்த்த பெய்வளை:

திருவெம்பாவையின்கண் போதரும் ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன் பாதத் திறம்பாடி'' என்னும் வரி, அனைவரும் அறிந்ததொன்று; அது மிகவும் பொருட் சிறப்பு வாய்ந்தது. அம்பிகையே மறைப்பாற்றல் என்னும் திரோதான சக்தியாகவும், அருளாற்றல் என்னும் அநுக்கிரக சக்தியாகவும் அமைந்து விளங்கும் திறனை, இவ்வரி விளக்குவதாகப் பெரியோர்கள் கூறுவர். திரோதான சக்தியாவது, ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும், தத்தம் தொழில்களை உயிர்கள்பால் இயற்றுமாறு, ஏவுகின்ற சக்தி என்று சிவஞானசித்தியார் (சு, 2. 87) கூறும். திரோதை எனப்படும் அச்சக்தி, உயிர்கள் உலகியலில் அழுந்தி வினைகளை நுகருங்கால் இருளாக மயக்கியும், வினைகளின் நீங்கித் தூய்மை அடைந்து உயிர்கள் அருளியலில் ஈடுபடுங்கால் ஒளியாக மாறித் தெளிவு நல்கியும் நிற்கும். ''முற்சினம் மருவு திரோதாயி கருணையாகித் திருந்திய சத்திநிபாதம் திகழும் அன்றே'' என்பது சிவப்பிரகாசம் (30). இங்ஙனம் திரோதை என்னும் சக்தி முதலில் இருளாக இருந்து உயிர்களுக்கு வினையை நுகர்வித்தும், பின்னர் ஒளியாக மாறி உயிர்களை அருளியலில் செலுத்திச் சிவத்தை நுகர்வித்தும் நலம்புரியும் திறனையே, ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை'' என்னும் அழகிய தொடர் அறிவுறுப்பதாகப் பெரியோர்கள் கூறுவர். 'மதுரைச் சிவப்பிரகாசர்' என்னும் சைவசித்தாந்தப் பேருரை ஆசிரியர், 'சிவப்பிரகாசம்' என்னும் நூலுக்குத் தாம் வரைந்த விரிவுரையில் திரோதான சக்தி பற்றிய செய்யுட்கண் (71), உரிய அரிய மேற்கோளாக இவ்வரியினை எடுத்துக் காட்டியிருக்கின்றார். பொருள் நலம் பொதிந்த இச்சிறந்த அழகிய வரியின் பொருளில் ஈடுபட்ட வடலூர் வள்ளலார், '' அம்மை திரோதை அகன்றாள்; எனைவிரும்பி அம்மை அருட்சத்தி அடைந்தனளே; இம்மையிலே மாமாயை நீங்கினள்; பொன்வண்ண வடிவு உற்றது; என்றும் சாமாறு இலை தான்'' என்ற திருவருட்பாவில், அதனைத் தழுவி அருளிச் செய்திருத்தல், அறிஞர்களுக்கெல்லாம் ஆராப் பெருவிருந்தாகும்.

(9) வன்பராய் முருடு:

மாணிக்கவாசகர் இறைவன் தமக்குச் செய்த இன்னருட் டிறனை வியந்து பின்வருமாறு போற்றுகின்றார்; ''திருப்பெருந்துறை மேவிய சிவனே; தென்பராய்த் துறையில் உறைபவனே; சிவலோகத்தில் விளங்குபவனே; உனக்கு அன்புடையவர்களாய், உன்னை அடைவதற்காக அரிய தவத்தினைப் புரிபவர்களும், அயனும் மாலும், மற்றும் அழலிற்பட்ட மெழுகு போல உன்னை நினைந்து உருகுபவர்களும், உடல் இளைத்து என்பெழுந்து தோன்றும்படி உனக்குப் பணி செய்து தியானிப்பவர்களும், ஆகிய எத்தனையோ பலர் இருக்கும்பொழுது, இங்கு என்னை எது குறித்துக் கருணையுடன் ஆண்டுகொண்டாய்? என் சிந்தை வன்பராய் முருடு ஒக்கும். என் கண்கள் மரக்கண்கள். என் செவியோ இரும்பினும் வலியது'' (371) என்னும் கருத்தமைய மாணிக்கவாசகர் பாடியுள்ள திருவாசகம், எவருள்ளத்தையும் உருக்க வல்லதாகும். இதன்கண் வரும் ''வன்பராய் முருடு ஒக்கும் என்சிந்தை; மரக்கண்; என் செவி இரும்பினும் வலிது'' என்னும் வரிகள், இராமலிங்க வள்ளலாரின் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொண்டன போலும்!

அதனால்தான், அவர் தாம் பாடிய மகாதேவமாலையின்கண் (92), ''பொன்மலையோ சிறிது எனப் பேராசை பொங்கிப், புவி நடையிற் பற்பல காற் போந்து போந்து, நென்மலையோ நிதிமலையோ என்று தேடி நிலைகுலைந்த தன்றி, உனை நினைந்து நேடி, மன்மலையோ மாமணியோ மருந்தோ என்று வழுத்தியது இல்லை; இந்த வஞ்ச நெஞ்சம், கன்மலையோ-இரும்போ-செம்மரமோ-பாறைக் கருங்கல்லோ, பராய் முருட்டுக் கட்டையேயோ?'' என்று பாடியிருக்கின்றார். கோணலும் மாணலுமான முடிச்சுகள் பல நிறைந்து, கோடரியாலும் பிளக்க முடியாததாய், மிக்க கடினம் வாய்ந்த பராய் மரத்தின் முருட்டுக் கட்டையினை, உருக்கம் சிறிதும் அற்ற கடின உள்ளத்திற்குத் தக்க உவமையாக மாணிக்கவாசகர் குறிப்பிட்டருளிய சிறப்பினை, இராமலிங்க வள்ளலார் இனிதெடுத்துத் தமது பாடலில் போற்றிக் கொண்டுள்ள திறம், பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது.

(10) ஒறுத்தால் ஒன்றும் போதும் :

திருவாசகத்தில் வரும் பதிகங்களுள் 'குழைத்தபத்து' என்பது ஒன்று. அஃது 'ஆத்தும நிவேதனம்' என்னும் அரிய பெரிய கருத்தினை உட்கொண்டு இருப்பதாகப் பெரியோர்கள் கூறுவர். அதன்கண், மாணிக்க

வாசகர் இறைவனைப் பெரிதும் போற்றிப் பணிந்து, பின்வருமாறு விண்ணப்பித்துக் கொள்ளுகின்றார்- ''கொடி போலும் இடையை உடைய அம்மையை ஒருபாகத்துக் கொண்டவனே! எங்களுடைய தலைவனே! அடியேனுடைய அல்லல்கள் எல்லாம் அகலும்படி, முன்னரே என்னை ஆண்டுகொண்டாய் என்று யான் நம்பி இருந்தேன். எங்கள் சிவலோகனே! ஆவா (ஐயோ பாவம்)என்று அருளி, என்பால் இரக்கங் கொண்டு, நீ 'என்னுடைய தீமை நிறைந்த உடலைச் சிதைத்துப் போக்கியருளாமல் இருப்பது எதற்காக? என்னை உடைய தலைவனே! எனக்கு அருள்செய்து நலங்கள் பலவும் புரிந்து, நீ என்பாற் பணி கொள்ளாது ஒழியினும், என்னைக்கூவி அழைத்து, நீ கடுமையாகத் தண்டித்தால், அத்தண்டனையும் கூட, எனக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் அளிக்கப் போதியதாகும்! அருள் செய்யாமற் போயினும், கடிய கொடிய தண்டனையையாவது எனக்கு நீ தரலாகாதா?'' எனமணிவாசகர் குழைத்த பதிகத்தில் (2) பாடியிருப்பது, எவருள்ளத்தையும் உருக்கிக் குழைவிக்க வல்லதாகும்.

சிறந்த இந்த திருவாசகப் பாடலின் கருத்தினைத் தழுவி, இராமலிங்க அடிகளார், தாம் பாடிய திருவருள் முறையீடு (174) என்னும் பகுதியில்,

''கோபம் கண்டார்க்கு அருள்செய்வோம்;
மதிக்கன்றிச் சூழ்ந்திடுவெம்
தீபம் கண்டாலும் இருள்போம்;
இவ்ஏழை தியங்கும்பரி
தாபம் கண்டாய்; அருள் செய்யாது
என்குற்றம் தனைக்குறித்துக்
கோபம் கொண்டாலும்நன்று, ஐயா!
என்துன்பக் கொதிப்பு அறுமே''

என்று அழகுறப் பாடியிருத்தல் அனைவர் உள்ளத்தையும் உருக்கி மகிழ்விக்கத் தக்கதாகும். ''உடையாய் கூவிப்பணி கொள்ளாது. ஒறுத்தால் ஒன்றும் போதுமே'' எனவரும் திருவாசகவரியினை அடியொற்றி ''என் குற்றம் தனைக் குறித்துக் கோபம் கொண்டாலும் நன்று ஐயா! என் துன்பக் கொதிப்பறுமே'' எனவரும் திருவருட்பா வரி அமைந்திருக்கும் ஒற்றுமை நயம், கற்றுணர்ந்தோர்க்கு எல்லாம், கழிபெரும் உவகையினைப் பயக்க வல்லதாகும்.

முடிவுரை :

இத்தகைய பல அருமையான ஒப்புமைக் கருத்துக்கள் எத்தனையோ பல, திருவாசகத்திலும் திருவருட்பாவிலும் காணக் கிடக்கின்றன. திருவாசகமே திருவருட்பாவாகச் சிறப்புற அமைந்தது; திருவாசகத்திற்கு ஒரு வகையில் விரிவுரை போல விளங்குவதே திருவருட்பா என்பன போன்ற செவ்விய உண்மைகளை, இவ்வாற்றால் நாம் உன்னி உணரலாம். சன்மார்க்கநெறிச் சான்றோர்களாகிய மாணிக்கவாசகரும், இராமலிங்க வள்ளலாரும் அருளிச் செய்த திருவாசகம், திருவருட்பா என்னும் இரு பெரு நூல்களும், ஈடு இணையற்ற தெய்விக அருள் நூல்களாகும். அவற்றை நாம் அன்புடன் இடையறாது ஓதி இறைவனை வழிபட்டு, இம்மை மறுமை நலங்களையெல்லாம் எய்தி இன்புற்று உய்வோமாக! —ஆசிரியர்

போற்றி வாழ்வாம்!

செம்மைமிகு சன்மார்க்கச் சிவநெறிநற் சான்றோருள், சிறந்து யர்ந்தோர்,
நம்மருமை மணிமொழியார், இராமலிங்கர் எனும் இருவர்; ஞாலம் உய்ய
மெய்ம்மை அவர் வழங்கு திருவாசகம், சீர்த் திருவருட்பா மிகவும் போற்றி,
இம்மைநலம் மறுமைநலம் எனைத்தும்எய்தி, இறையருளால் இனிது வாழ்வாம்!

—ஆசிரியர்.

திருவண்ணுமலேக் கார்த்திகைத்தீபம்

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.B.L., I.A.S.,

ஆணையர்

அறநிலேய ஆட்சித்துறை, சென்னே.

முன்னுரை :

நமது அருமைத் தமிழ் நாட்டிற்குப் பெருமைதரும் எண்ணற்றபல திருத்தலங்களுள் திருவண்ணுமலே மிகவும் தலேசிறந்த தொன்ருகும். பஞ்சபூதக் தலங்களுள் நெருப்புத்தலம் எனவும், ஆறு ஆதாரத் தலங்களுள் மணிபூரகத் தலம் எனவும், இதனேப் பெரியோர்கள் விதந்து கூறுவர். சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம், எனச் சைவ சமய இலக்கியங்கள் இதனேப் பெரிதும் புகழ்ந்து கூறுகின்றன.

திருவண்ணுமலேயை அப்பர் சம்பந்தர் மாணிக்கவாசகர் முதலிய சைவ சமய குரவர்கள், தமது திருப்பாடல்களிற் போற்றித் துதித்துள்ளனர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், இத்தலத்திலேயே தோன்றி வாழ்ந்து அருள் பெற்று விளங்கியவராவார். குகைநமச்சிவாயர், குருநமச்சிவாயர் முதலிய அருட்பெருஞ் சான்ருேர்களும் இங்கு வாழ்ந்து இத்தலத்தைப் போற்றியிருக்கின்றனர். சேரர், சோழர், பாண்டியர், இராட்டிரகூடர், ஒய்சளர், துளுவர் முதலிய அரசர்கள் பலர், திருவண்ணுமலேக் கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர். இத்தலத்தில் மொத்தம் 360 தீர்த்தங்களும், 400 இலிங்கங்களும் உள்ளன என்பர். கோயிற் பரப்பும் கோபுரச் சிறப்பும் கண்டு களிக்கத் தக்கவை.

திருவண்ணுமலேச் சிறப்பு :

திருவண்ணுமலேயின் தன்னிகரற்ற பெருஞ் சிறப்பினே நம் சமயச் சான்ருேர்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். பிறக்க முத்தி தருவது திருவாரூர்; தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம்; இறக்க முத்தி தருவது காசி. ஆனல் நினேத்த அளவிலேயே முத்தி தருவது திருவண்ணுமலே என்பது, நம் பண்டைப் பெரியோர்களின் நம்பிக்கை.

> "துவக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்,
> துயர்ந்திடாது அடைந்துகாண் மன்றும்,
> உவப்புடன் நிலேத்து மரிக்கும்ஓர் பதியும்
> ஒக்குமோ நினேக்கும் நின் நகரை?"

என இத்தலத்தின் சிறப்பினேத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், திறம்தெரிந்து புகழ்ந்து பாடித் துதித்துள்ளார். அவர் தாம் இயற்றிய 'சோணசைலமாலே' என்னும் சிறந்த நூலில் திருவண்ணுமலேயின் சிறப்புக்களே அழகுற விளக்கிப் பாடியிருக்கின்ருர். "அண்ணுமலே தொழுவார் வினே வழுவா வண்ணம் அறுமே" என்று திருஞானசம்பந்தரும், "ஆடிப் பாடி அண்ணுமலே கைதொழ ஓடிப்போம் நமது உள்ள வினேகளே" என்று திருநாவுக்கரசரும் பாடியிருப்பது, திருவண்ணுமலேயின் பெருமையை விளக்கும்.

கார்த்திகைத் தீபம் :

இத்துணேச் சிறப்புவாய்ந்த திருவண்ணுமலேக் கோயிலில் நிகழும் விழாக்களுள், கார்த்திகைத் தீபவிழா என்பது, நமது தமிழக விழாக்களிலேயே, தன்னிகரற்ற ஒரு பெருஞ் சிறப்பு விழாவாகத் தொன்று தொட்டு நிலவி வருகின்றது. தமிழகத்திலுள்ள எல்லாக் கோயில்களிலுமே கார்த்திகைத் தீபவிழாக் கொண்டாடப்படுகின்றதாயினும், திருவண்ணு

மலைக்கே அவ்விழா மிக்க சிறப்புரிமை உடைய தாகத் திகழ்கின்றது. தமிழகத்தின் பலபாகங் களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர் கள் ஆண்டுதோறும் மிக்க அன்புடன் திரண்டு இவ்விழாவைத் தரிசித்து மகிழ்கின்றனர். புகழ் மிக்க இப்புனிதப் பெருவிழாவைப் பற்றிய பல சிறுசிறு குறிப்புகள், ஏறத்தாழ 2000 ஆண்டு கட்கு முற்பட்ட நமது பழந்தமிழ்ச் சங்க இலக் கியங்களிலும் அமைந்து காணப்படுகின்றன.

(1) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக் கானது புற இருளை மட்டுமேயன்றி, அதனைக் கண்டு வழிபடும் அன்பர்களின் அகஇருள் ஆகிய அறியாமையையும் போக்கி, மெய் யுணர்வு ஒளியை நல்கி நலம் புரிந்து விளங்கு கின்றது.

கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து,
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்த்துநின் றெழுந்து, விளங்குறும் சோண
சைலனே! கைலைநா யகனே!

(2) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக் கானது, அவரவர் இல்லங்களில் ஏற்றப்பெறும் சிறுசிறு விளக்குப்போல் இல்லாமல், உலகம் முழுவதற்கும் இடப்பெற்ற ஒருபெரும் ஒளி விளக்கு எனும்படி சிறந்து திகழ்கின்றது.

சீர்தரும் மணியின் அணிந்தன எனக்கட்
செவியும், ஒண் கேழலின் மருப்பும்,
கார்தரும் உலக விளக்கு எனும்சோண
சைலனே! கைலைநா யகனே!

(3) திருவண்ணாமலையில், கார்த்திகை மாதத்தில், முழுநிலா நாளில் மலையுச்சியின் மீது பேரொளி விளக்கு ஏற்றப்படும் இனிய காட்சி யானது எவருள்ளத்தையும் கவர்ந்து கொள்ளை கொள்ளும் மாட்சிமை உடையதாகும். மலை உச்சியில் தண்மை மிக்க முழுவெண்ணிலாத் தோன்றித் திகழ்தலும், அதனருகே செழுஞ் சுடர்ப் பேரொளி விளக்குச் சுடர்விட்டு எரி தலும் கவின் மிகுந்து, காண்பவர் உள்ளத்தைக் களி துளும்பச் செய்யும். திருவிளக்கின் ஒளிச் செழுஞ்சுடர் செந்தாமரை மலரைப் போலவும், அதனை அடுத்து விளங்கும் முழு வெண்ணி லாவின் தோற்றம் அத்தாமரை மலரின் அருகே சென்று அணையும் அழகிய வெள்ளை அன்னம் போலவும், அமைந்து காணப்படுகின்றது.

மடல்அவிழ் மரைமாட்டு எகின்என அருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி இலங்க வளர்ந்தெழும் சோண
சைலனே! கைலைநா யகனே!

(4) திருவண்ணாமலைக் கார்த்திகை விளக் கீடு, ஒரு கலங்கரை விளக்குப் (Light house) போல, உயர்ந்து எரிந்து ஒளிதந்து விளங்குகின் றது. அது பிறவி ஆகிய கடலைக் கடந்து வீடு பேறு ஆகிய கரையினை அடைய விரும்புபவர், வழிதெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தவவொழுக்கம் ஆகிய கப்பலைச் செலுத்தி உய்யும்படி செய்து உதவுகின்றது.

"பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே."

முடிவுரை :

இத்தகைய பல சிறப்புக்களை உடைய திருவண்ணாமலைக் கோயிலையும், அங்கு நிகழும் கார்த்திகை விளக்கீட்டு விழாவினையும், நாம் அனைவரும், அன்புடன் கண்டு வழிபட்டு, அண்ணாமலை அண்ணலின் அருளைப்பெற்று உய்ய முற்படுவோமாக.

o-o-o

அருட்பெருங் காப்பியம்

'சித்தாந்தக் கலைமணி'

மகாவித்துவான், திரு சி. அருணை வடிவேல் முதலியார், தருமபுரம்.

தமிழில் 'பெருங்காப்பியம்' எனப்படுவன சிலப்பதிகாரம் மணிமேகலை சீவகசிந்தாமணி வளையாபதி குண்டலகேசி என்னும் ஐந்து என்பது பலரும் அறிந்தது. இவற்றை 'ஐம் பெருங்காப்பியம்' என்பர். இவற்றுள் வளையா பதி, குண்டலகேசி, என்பவற்றுள் சிற்சில பாடல்கள் அன்றி, நூல்கள் முழுமையாகக்' கிடைத்தில. ஏனைய மூன்றுள் இன்று சிலப்பதி காரம் சிறப்புப்பெற்று விளங்குகின்றது. எனினும் சீவக சிந்தாமணி தோன்றிய காலத்தில் அதுவே மக்கள் மனத்தைப் பெரிதும்கவர்ந்தது. அதற்குக் காரணம், ஏனைச் சுவைகளைப் பார்க் கிலும் இன்பச்சுவை அதில் மிக்குத் தோன்று தலே. அதன் ஆசிரியர் திருத்தக்கதேவர் இன்பச் சுவையோடு சிறிதும் தொடர்பில்லாத சமணத் துறவியராயினும், தமது புலமைத் திறம் ஒன்றுனே அச்சுவைமிக்கு விளங்கப்பாட வல்லவர் என்பதனை நிறுவுதற் பொருட்டே, அந்நூலை அவர் அத்தன்மைய தாகப் பாடி னுர் என்பது, அது பற்றிக் கூறப்படும் வரலாறு. சமணக் காப்பியமாகிய அதனை, அதன் இன்பச் சுவை காரணமாகச் சைவ மன்னனுகிய அந பாயச் சோழனும் விரும்பிக் கேட்டு அதில் ஈடு பட்டிருந்தான் என்பது சேக்கிழார் புராணத் தால் அறியப்படுவது.

சிந்தாமணிக் காப்பியத்தால் இன்பச்சுவை யில் ஈடுபட்டிருந்த அநபாயச் சோழனைச் சேக்கிழார், தாம் அவனுக்கு முதல் அமைச்ச ராய் இருந்த வாய்ப்பினுல், சிவனடியார் களாகிய அறுபான்மும்மை நாயன்மார்களது அருள் வரலாறு கொண்டு பத்திச் சுவையில் ஈடுபடச் செய்தார்; அதன்பின் அம்மன்னனது வேண்டுகோளின்படியே அவர் 'பெரியபுராணம்' என வழங்கும் திருத்தொண்டர் புராணத்தை அருளிச் செய்தார் என்பதும் அப்புராணத் தாலே அறிய நிற்பது.

பெருங்காப்பியம், சிறுகாப்பியம், என்னும் இருவகைக் காப்பியங்களுக்கும் உரிய இலக் கணங்களை, தண்டியலங்கார நூல் கூறுகின்றது. அந்நூல் வடமொழிக் காவ்யாதர்சத்தின் மொழி பெயர்ப்பாயினும், அதற்கு இலக்கியமாகத் தமிழில் அமைந்த காப்பியங்களும் அந்நூற்கு முன்னரே தோன்றி விளங்கின. அதனுல், சங்க காலத்திற்குப் பின்னர்த், தமிழ் மக்களும் இத் தகைய காப்பியச் சுவையில் ஈடுபட்டனர் என்புது புலனுகும். ஆகவே, புலவர்கள் தமிழில் இத்தகைய காப்பியங்கள் பலவற்றை இயற்ற லாயினர்.

புலவர்கள் தம் புலமைத் திறத்தால் மக்களைச் செய்யுள் இன்பத்தில்—தமிழ்ச்சுவை யில்—திளைக்கச் செய்தற்குக் காப்பியங்களை இயற்றினர். அவ்வாறு இயற்றும்பொழுது, காப்பியங்களில் கூறப்படும் நிகழ்வுறுப்பினரை (பாத்திரங்களை) முதன்மையாகக் கருதாமல், அந்நிகழ்ச்சி பற்றிப் பிறக்கும் சுவையையும், அச்சுவையினுல் மக்கள் உள்ளம் எய்தும் திருத்தத்தையுமே முதன்மையாகக் கருதினர். ஆதலின் இல்லதைக் கூறுதலாகிய புனைந் துரைகள் காப்பியங்களில் மிகுதியும் இடம் பெற்றன. அதனுல், (1) இல்லோன் தலைவனுக இல்லது புணர்த்தல் (2) இல்லோன் தலைவனுக உள்ளது புணர்தல் (3) உள்ளோன் தலைவனுக இல்லது புணர்த்தல்; (4) உள்ளோன் தலைவனுக

உள்ளது புணர்த்தல்,என்னும் இவை காப்பிய இலக்கணங்களாகக் கொள்ளப்பட்டன. இவற்றுள் இல்லது கூறலே மிக்கிருத்தல் காணலாம்.

சீவகசிந்தாமணிக் காப்பியமும் இவ்விலக்கணத்தை உடையதே. அக் காப்பியத்தில் ஈடுபட்டிருந்த அநபாயனது உள்ளத்தைத் திருப்பிய சேக்கிழார், அதன் பொருட்டு அவனுக்கு உரைத்த நாயன்மார்களது உண்மை வரலாறுகளை அவனது வேண்டுகோளின்படியே புராணமாகப் பாடியருள விழையும் பொழுது, அவற்றையும் மக்கள் உள்ளத்தைக் கவரும் பெருங் காப்பியமாகச் செய்யக் கருதினர். அங்ஙனம் கருதிச் செய்யுமிடத்து அதற்கு உரியன பலவும் இயற்கையிலே அமைந்தமை திருவருட் செயலேயாகும். அவ்வமைப்பைத் திருவருள் உணர்த்த உணர்ந்து செய்தமையே சேக்கிழார்க்கு உள்ள தனிச்சிறப்பு.

சிந்தாமணிக்கு முதனூல் வடமொழியில் 'வாதீபசிம்மன்' என்பான் காப்பியமாக இயற்றிய, 'க்ஷத்ர சூடாமணி' 'கத்திய சிந்தாமணி' என்னும் நூல்கள், திருத்தொண்டர் புராணத்திற்கு முதல் நூல்கள். இறைவனது திருவருள்பெற்று அவனையும், அவன் அடியார்களையும் தமிழால் துதித்த பத்தித் திருப்பாடல்களாகிய சுந்தரரது திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பிகளது திருத்தொண்டர் திருவந்தாதி, மற்றும் திருவாசகம், பதினொன்றுந் திருமுறைப் பிரபந்தங்கள் முதலியன. சிந்தாமணி வடநாட்டு வரலாறு போலப் புனையப்பட்ட கதை. திருத்தொண்டர்புராணம் தமிழ்நாட்டில் நிகழ்ந்த உண்மை வரலாறு.

திருத்தொண்டரது வரலாறு, நூல் வடிவில் தோன்றக் காரணமாய் இருந்தவர் நம்பியாரூரர் என்பது முன்பே கூறப்பட்டது. எனவே அவரது வரலாறே ஏனைய நாயன்மார்களது வரலாறுகளுக்கு மூலமாக இயல்பாய் அமைந்தது. அதனை உணர்ந்த சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் என்னும் பெருங்காப்பியத்திற்கு அவரையே காப்பியத் தலைவராக வைத்துச் செய்தார்.

'காப்பியத் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாதல் வேண்டும்' என்பது இலக்கணம். தன்னிகரில்லாமையாவது, காப்பியத்திற்கு உயிராய் விளங்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களைப் பெறுவதில் ஒப்பின்றி விளங்குதல். இத்தன்மை வாய்ந்த தலைவனையே 'நம்பி' என்றல் தமிழ் மரபு. அதுபற்றியே தமிழ்ச் சிந்தாமணி சீவகனை, சீவக நம்பி என்கின்றது. ஆனால் சேக்கிழார் சுந்தரரைத் தாமாகவே, 'நம்பி' என்று கூறவேண்டாதவாறு, அவரது பெயரே 'நம்பியாரூரர்' என அமைந்தது. இதனை அந்நாயனாரை முதல்முதலாக நமக்கு அறிமுகப்படுத்துகின்ற நம்பியாண்டார் நம்பிகள் அவரை அப் பெயரால் பின்வருமாறு கூறுமாற்றால் அறியலாம்:

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ்
சோதி சென்றுங்
கெழுதுந் தமிழ்ப்பழ ஆவணங் காட்டி
எனக்குன் குடி
முழுதும் அடிமை வந் தாட்செய் எனப்பெற்
றவன் முரல்தேன்
ஒழுகும் மலரின்நற் றாரெம்பி ரான் நம்பி
யாரூரனே.

சீவகனது பிறப்பிலும், வளர்ப்பிலும் தோன்றுவது 'சோகரசம்' எனப்படும் அவலச் சுவை; நம்பியாரூரது வரலாற்றில் அவற்றால் தோன்றுவது மக்கட் செல்வம் பற்றிய உவகைச் சுவை. சீவகன் நாடாளும் மகனாயினும் நாட்டுக் குடிமக்கள் பலருள் ஒருவனாகிய வணிகனொருவன் மகனாய்த் தன்னிலையைத் தான் அறியாது வளர்ந்தான். சுந்தரர் நாட்டுக் குடிகளுள் ஒன்றாகிய ஆதிசைவ அந்தணர் குடிஒன்றில் அவதரித்து, நாடாளும் மன்னனால் ஏற்றுப் பெறப்பட்டு மன்னவ குமாரராய், மன்னவர் திருவும், தங்கள் வைதிகத் திருவும் ஆகிய இரண்டும் நாடறிய விளங்க வளர்ந்தார். சீவகன் நாட்டில் பகையும் போரும் மலிந்த அரசியல் குழப்பத்தில் வாழ்ந்தான். சுந்தரர் தமிழ்நாட்டு வேந்தராகிய சேரர் சோழர் பாண்டியர் பல்லவர் அனைவரும் அவர்பால் அன்பும் மதிப்பும் கொண்டு அவரை வழிபட்டு நின்றனர்.

செல்வச் சிறப்புடையோர்க்கு வாழ்மனை ஒன்றன்றிப் பல இருத்தலும், நில உரிமையாக ஓர் ஊர் அன்றிப் பல ஊர் இருத்தலும் பெருமையாக மதிக்கப்படுதல் போல, மனைவியும் ஒருத்தியன்றிப் பலர் இருத்தல் பெருமை தருவதாக அக்காலத்தில் மதிக்கப்பட்டது. அதன் பொருட்டே பண்டை மன்னர்கள் பல மனைவி

யரை மணம் செய்து கொண்டனர். காப்பியங்களில் ஒரு தலைவனுக்கு நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் மனைவியர் இருந்ததாகக் கூறப்படும். அம்முறையில் சீவகன் எண்மர் மனைவியரை மணந்து கொண்டவனாகக் காட்டப்படுகிறான். கல்வியையும் ஆளும் நாட்டையும் கூட மனைவியர்போலவே ஆசிரியர் கூறுகின்றார். உலகியலில் ஓர் ஆடவனுக்கு இரு மனைவியர் இருத்தல் காணப்படுவதே. அதனால் உண்மைக் காப்பியத் தலைவராகிய சுந்தரர் இரு மனைவியரை உடையவராயிருந்தார்.

சீவகன் பல நிகழ்ச்சிகள் நிமித்தமாக யாத்திரை செல்லுதலும், அங்ஙனம் செல்லும் இடங்களில் எல்லாம் அருகக் கடவுளை வணங்கி அக் கடவுளது புகழைப் பாடுதலும், தன்னை அடுத்தவர்கட்கு அக் கடவுள் சொன்ன அறங்களை உபதேசம் செய்தலும் உடையவனாய் இருந்தான் என்று கூறப்படுகின்றது. சுந்தரர் உண்மையாகவே தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்குள்ளவர் அடிபணிந்து வரவேற்க யாத்திரை செய்து, சிவபெருமான் திருக்கோயிலை அடைந்து வணங்கி, அப்பெருமானது புகழைப் பாடியும், அப்பாடல் வாயிலாகவே "பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்று புலவர் முதலாக அனைவருக்குமே அருளுபதேசங்கள் பலவற்றைச் செய்தலையுமே தமக்குக் கடமையாகக் கொண்டு வாழ்ந்தமையை, அவரது திருப்பாடல்களே இன்றும் நின்று நிலவிச் சான்று பகர்கின்றன. அவற்றுள் தலையாய உபதேசம் திருத்தொண்டத்தொகை. அதனை நம்பியாரூரர் திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் ஒவ்வொரு நாயனார்க்கும் தனித்தனியே தாம்அடிமை என்பதை அடியார் பலரும் கேட்க அருளிச் செய்தார் என்றால், அத் திருப்பதிகத்தில் குறிக்கப்பட்ட நாயன்மார்களது வரலாற்றை ஓரள வேனும் விளங்கக் கூறி, 'இத்தகைய அடியார்கட்கு அடியாராவதே பிறப்பெடுத்ததன் பயன் என்பதை அனைவருக்கும் அறிவுறுத்தினர் என்பது தானே பொருள்! அதுபற்றியே சேக்கிழார் நாயன்மாரது வரலாறுகளைச் சுந்தரரது வரலாற்றில் இடைப்புகுந்த இயைபுடையனவாகவே கொண்டு, அவற்றை விரித்துரைத்தார்.

சீவகன் எண்மர் மனைவியரை மணந்து அவரோடு இன்பம் துய்த்தமை, தன் பகைவனை வென்று தனது ஆட்சியை மீட்டுக் கொண்டு முடிசூடி அரசாண்டமை முதலியவைகளை எல்லாம் தனது வாழ்நாளை வீணாளாகச் செய்து கொண்ட தவறான செயல்களாக, ஒரு சோலையிலிருந்த இரண்டு குரங்குகளின் செயலால் உணர்ந்து, தனது தவற்றை நினைந்து கழிவிரக்கங் கொண்டான். பின்பு வாழ்நாள் இறுதியில் தன் அன்னையால் ஓரளவு நல்லறிவு பெற்றுப் பின்பு, சாரணர் தலைவனால் முற்பிறப்புணர்வும், மெய்யுணர்வும் பெற்றுத் துறவு பூண்டு நோற்றுத்தான் தனியே வீட்டுலகு எய்தினான். நம்பியாரூரர் தம் திருமணக் காலமாகிய வாழ்வின் முதல் நாளிலே இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பெற்று முற் பிறப்புணர்வும் திருவருட்பேறும் பெற்றுத் திருத்தொண்டு பூண்டு அடியார்க்கடியாராகி இரு மனைவியராற்பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் வாழ்நாள் முழுவதும் மிகப்பயனுள்ள நாட்களாகவே, 'மண்ணிலே வந்தவாலி தாம் இன்பமாய்க்' கழிய, முடிவில் இறைவன் இடமாகிய திருமலைக்குக் களையா உடலோடே அவன் அனுப்பி அழைத்த வெள்ளை யானை மேல் தம் தோழராகிய சேரமான் பெருமாள் குதிரையில் உடன்வரச் சென்றருளினார். சீவகன் வரலாற்றை, அவனைச் சுட்டிக் கேட்ட 'சேணிகன்' என்னும் மன்னனுக்குச் சுதன்மர்' என்னும் கணத்தலைவர் கூறினார். சுந்தரரது வரலாற்றை அவரது வரவினை இன்னார் வரவென்று அறியாது கேட்ட முனிவர்கட்கு உபமன்னிய முனிவர் கூறினார்.

இனிச் சுந்தரர் வரலாறு கூறும் பெருங் காப்பியமாகிய திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் காப்பிய இலக்கணங்கள் பலவும் உரிய இடங்களில் அமைந்து விளங்கச் செய்திருத்தல் வியக்கத்தக்கதாய் உள்ளது. நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு என்னும் இரண்டில் நகரச் சிறப்பாகத் திருவாரூரில் மனுச்சோழன் வரலாற்றை அமைத்திருத்தல் அரியதொரு செயல்.

சுந்தரர் வரலாற்றிலும், ஞானசம்பந்தர் வரலாற்றிலும் மகப்பேற்று நிகழ்ச்சிகளும், திருமண நிகழ்ச்சிகளும் சிறக்கக் கூறப்படுகின்றன. சுந்தரர் வரலாற்றில் ஊடலும், கூடலும் காணப்படுதல் தெளிவு. புகழ்ச்சோழர் வரலாற்றில் போர் நிகழ்ச்சி பொலிவுறுகின்றது. கண்ணப்பர் வரலாற்றில் வில்விழா எடுத்தலும், உண்டாட்டும், முடிபுனைதலும், வேட்டஞ்செய்தலும் நன்கமைந்துள்ளன. அப்பூதியடிகள் வரலாறு, சிறுத்தொண்டர் வரலாறு, பூம்பாவை வரலாறு இவற்றில் அழுகைச் சுவை சிறிதே தோற்றுவிக்கப்படுகின்றது.

மகளிரைக் கேசாதி பாதம் அழகுபட வருணிக்கும் வருணனைக்குச் சேக்கிழார் தக்க இடத்தை அறிந்து பூம்பாவை உயிர் பெற்றெழுந்த வரலாற்றில் அமைத்திருத்தல் அருமையினும் அருமையாய் உள்ளது. மற்றும் சூரிய சந்திரரது தோற்றம் மறைவுகளின் வருணனை, பெரும்பொழுது, சிறுபொழுதுகளின் வருணனை, நால்வகை நிலத்தொடு பாலை வருணனை, முதலியவற்றின் அழகினை வரையறுத்து உரைத்தல் இயலாது. இவ்வாற்ருல் பெருங்காப்பிய நிலை பெரிதும் பெற்று விளங்கச் சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணம், பத்திச் சுவையே எங்கும் பரந்து விளங்க, அறம் முதலிய நான்கிற்கும் உயிராய் விளங்கும் இறைவனது அருள் நிலையை உணர்தலையே பயனுகக் கொண்ட அருட்பெருங் காப்பியமாகத் திகழ்கின்றது. அதனை அத்தகைய காப்பியமாக உணர்ந்து சுவைத்துப் பயனைப் பெறுதற்கும் அருளே துணை நிற்கவேண்டும் போலும். இக் காப்பியத்தின் தலைவராகிய சுந்தரரது வரலாறு அறம் முதலிய நான்கும் பெற்று விளங்குதலை,

> ''சுரர்முனிவர் பரவலுறும்
> பெருஞ்சீர்த் தொண்டத்
> தொகைசெய்தோய்! அறம்முதல்
> நால்வகை செய்தோயே''

என்னும் நால்வர் நான்மணி மாலையால் அறியலாம்.

குழந்தைகளுக்குப் பாவைப் பாசுரங்களைப் பயிற்சி அளித்தல்.

தெய்வீகப் பாசுரங்களாகிய ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிச் செய்த ''திருவெம்பாவை'' ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த ''திருப்பாவை'' இப்பாசுரங்களைச் சிறு குழந்தைகளின் மனதில் பதியச்செய்ய வேண்டும். அவர்கள் அறநெறியில் திகழ வேண்டும் என ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் திருவுள்ளம் கொண்டு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாகப் பாவை இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அது தொடர்ந்து அன்பர்களின் ஒத்துழைப்பாலும், சென்னை அறநிலைய இலாகாவின் ஊக்கத்தாலும் வளர்ந்து லட்சக்கணக்கான குழந்தைகள் மார்கழி மாதத்தில் இப்பாவைப் பாசுரங்களை மனப்பாடம் செய்து வந்துள்ளார்கள்

மார்கழி மாதத்தில் இப்பாசுரங்களை ஆரம்பப் பள்ளிகளில் 5வது படிவம் பயிலும் குழந்தைகளுக்கு மனப்பாடம் செய்வித்தால், அவர்களுடைய ஊக்கத்தால் மற்ற மாதங்களிலும் இதர சமய சம்பந்தமான பாசுரங்களை மனப்பாடம் செய்து கொள்ள வழிவகை செய்யும். ஆதலால் வரும் மார்கழி மாதத்தில் சிறு குழந்தைகள் பாவைப் பாசுரங்களை மனப்பாடம் செய்து கொண்டு அதிகாலையில் ஊர்வலம் வருவதற்கு இப்போது முதலே முயற்சி எடுத்துக்கொள்ள வேணுமாய் ஆங்காங்கு உள்ள சமய சங்கங்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள், திருக்கோயில்களின் அறங்காவலர்கள், நிர்வாக அதிகாரிகள் இவர்களை வேண்டிக் கொள்கிருேம். ஆரம்பப் பள்ளிகளில் 5வது படிவம் பயிலும் குழந்தைகளில் எவ்வளவு பேர்கள் பாவைப் பாசுரங்களைப் பாராயணம் செய்ய ஆர்வமுள்ளவர்களாக இருக்கிருர்களென்று தெரிவித்தால், பாவை புஸ்தகங்கள் இலவசமாக அனுப்பி வைக்கிருேம். குழந்தைகளை முன்னிட்ட இத்தெய்வீகத் தொண்டை அனைவரும் அன்புடன் செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்கிருேம்.

செயலாளர்,
திருப்பாவை—திருவெம்பாவை மத்தியக்குழு,
19, பெரியகடைத் தெரு,
மாயூரம்.

"எட்டுக்கோலாம் அவர் ஈறில் பெருங்குணம்"

திரு. கே. எம். வேங்கடராமையா, M.A.

திருப்பனந்தாள்

திருநாவுக்கரசர் சமண சமயம் நீங்கிச் சைவசமயம் புகுந்தார். சமணர் தூண்டுதலால் சமணச் சார்பினனாகிய பல்லவ அரசன் திருநாவுக்கரசரை அழைத்து வருமாறு, தன் அமைச்சர்களை ஏவினன். அன்னோரும் அரசன் உங்களை வரச் சொன்னான் என்று பணிந்து வேண்டினர். திருநாவுக்கரசர் ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்ற மறுமாற்றத் திருத்தாண்டகத்தைப் பாடிப், 'பாராண்டு பகடேறித் திரிவார் சொல்லும் பணிகேட்கக் கடவோமோ பற்றற்றோமே' என்றின்னோரன்னவாறு கூறி, 'யாம் வரக் கடவோம் அல்லோம்' 'யாம் எண் குணத்துளோம்' என்று விடை பகர்ந்தார். அவ்விறுதிப் பாடல்.

''நாவார நம்பனையே பாடப் பெற்றோம். நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம். ஆவா என்று எமையாள்வான் அமரர் நாதன் அயனெடுமாற்கு அறிவரிய அளவாய் நீண்ட தேவாதி தேவன் சிவனென் சிந்தை சேர்ந்திருந்தான். தென்திசைக்கோன் தானே வந்து கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலும், குணமாகக் கொள்ளோம் எண்குணத்து ளோமே'' என்பது. இதன் கண், எண் குணத்தனாகிய சிவபெருமானுக்கு ஆட்பட்டதனால், சிவபெருமானுடைய தன்மை எய்தினோம் என்பார், ''எண்குணத்துளோம்'' என்றார்.

ஒரு சமயம் திருநாவுக்கரசர் திருவையாற்றுக்குச் செல்பவர், அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில், ஒரு தண்ணீர்ப் பந்தர் தன்பெயரில் அமைக்கப் பெற்றிருப்பதைக் கண்டார். 'இப்பந்தர் இப்பெயரிட்டு இங்கமைத்தார் யார்?' என்று கேட்டார். அருகிருந்தோர் அப்பூதியடிகள் என்றனர். அப்பூதியடிகளும் திருநாவுக்கரசரைத் தம் குடும்பத்துடன் வழிபட்டுத் தம்வீட்டில் அமுதுண்ண வேண்டும் என்று வேண்டினர். அப்பூதியடிகளின் மூத்தமகன் தோட்டத்திற்குச் சென்று வாழையிலையை அரியும்பொழுது அராத் தீண்டி இறந்தனன். இதனை அறிந்த திருநாவுக்கரசர் உயிர்நீத்த அப்புதல்வனைச் சிவாலயத்துக்குக் கொணரச் செய்து ''ஒன்றுகொலாம்'' என்ற பதிகம் பாடினார். அப்பூதியடிகளாரது மகனும் உயிர்பெற்றெழுந்தார். அப்பதிகத்தின் எட்டாவது திருப்பாடல், ''எட்டுக் கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்'' என்பதாகும். இதன் கண்ணும் இறைவனது இறைமைக் குணங்கள் எட்டு என்று சொல்லியிருக்கிறது. இவ்வாறே ''தனிக்குறுந்தொகை'' என்னும் திருப்பதிகத்தின் எட்டாம் பாடலிலும், ''எட்டு வான்குணத்து ஈசன்'' எனச் சிவபெருமான் குறிப்பிடப் பெற்றுள்ளார்.

திருவிடைமருதூர்-'திண்குணத்தார்'என்று தொடங்கும் திருத்தாண்டகத்தில், ''எண் குணத்தார் எண்ணாயிரவர் போலும்-இடைமருது மேவிய ஈசனாரே'' என்றும், திருத் தென்குரங்காடுதுறை-'மணவன்காண்' என்ற திருக்குறுந்தொகையில், ''கலைஞானிகள் காதல் எண் குணவன்காண்'' என்றும் கூறப்பெற்றுள்ளது. ''கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத்தலை'' என்ற திருக்குறளில் இறைவன் எண்குணத்தான் என்று பேசப்படுகிறார்.

இக்குறட்குரிய பரிமேலழகருரையில் ''எண் குணங்களாவன: தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை; இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது'' என்று காணப் படுகிறது. திருநாவுக்கரசர் திருவிடைமருதூர் ''பிரியாத குணமுயிர்கட்கு'' என்று

தொடங்கும் திருத் தாண்டகத்தில் "விரியாக் குணமொருகால் நான்கே என்பர், விரிவிலாத குண நாட்டத்து ஆறே என்பர்" என்று குணம் நான்கும் ஆறும் என்று அருளிச் செய்துள்ளார்.

விரியாத குணம் என்பது, இறைவனுக்குத் தொகுத்துக் கொள்ளப்படும் குணம். அவை நான்காவன: உண்மை அறிவு இன்பம் அருள் என்பன. விரிவிலா என்பதும் 'தொகுத்துக் கூறப்படுகிற' என்று பொருள்படும். எனவே தொகுத்துக் கூறுமிடத்து நான்காகக் கூறுதல் ஒருமுறை எனவும், அவைகளை ஆராயுமிடத்து ஆறாகக் கூறுதல் மற்றொரு முறை எனவும் கொள்ளப்பெறும். (தருமையாதீனப் பதிப்பு-ஆறும் திருமுறை-பக்கம்127) அவ் ஆறுகுணங்களாவன: மேல் எட்டாகக் கூறப்பெற்றவற்றுள், தூய உடம்பினன் ஆதலே இயல்பாகவே பாசங்களின் நீங்குதற்கண்ணும், இயற்கையுணர்வினனாதலை முற்றுமுணர்தற்கண்ணும் அடக்கி ஆறாகக் கொள்ளலாம். திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத் திருத்தாண்டகத்தில் மேலே கூறியவாறு ஆறு குணம் கூறப்பெற்றுள்ளது. அப்பாடல். "ஏவியிடர்க் கடலிடைப் பட்டிளைக்கின்றேனை இப் பிறவி அறுத்தேற வாங்கி ஆங்கே கூவி அமருலகனைத்தும் உருவிப் போகக் குறியில் அறு குணத்து ஆண்டு கொண்டார் போலும்" என்பது.

இனி, தன்வயத்தனாதல் முதலிய எட்டையும் முறையே சுவதந்திரத்துவம், விசுத்ததேகத்துவம், அநாதிபோதம், சர்வஞ்ஞத்துவம், நிராமயத்துவம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, திருப்தி என்று வடமொழியாளர் பகர்வர்.

'எண்குணத்தான்' என்பதற்குரிய விசேடவுரையில் பரிமேலழகர், "அணிமாவை முதலாக உடையன எனவும், கடையிலா அறிவை முதலாக உடையன எனவும் உரைப்பாருமுளர்" என்று எழுதியுள்ளார்.

அணிமாவை முதலாக உடையன அஷ்டசித்தி அல்லது அஷ்ட ஐசுவரியங்கள் எனப்பெறும். அவையாவன: அணிமா-மிகவும் நுண்ணியதாதல்; மகிமா-மிகவும் பருத்தல்; கரிமா-மிகவும் கனத்தல்; லகிமா-மிகவும் நொய்தாதல்; பிராத்தி-வேண்டுவன அடைதல்; பிராகாம்யம்-குறைவின்றி நிறைவுள்ளவனாதல்; ஈசத்வம்-யாவர்க்கும் மேம்பட்டிருத்தல்; வசித்துவம்-எல்லாவற்றையும் தன்வசம் ஆக்க வல்லவனாதல் என்பனவாம்.

கடையிலா அறிவை முதலாக உடையன பின்வருமாறு: கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலாவீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரம் இன்மை, ஆயு இன்மை, அழியா இயல்பு என இவை. வடமொழியில் முறையே அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்கோத்திரம், நிராயுஷ்யம், நிர்நாசம் எனப்படும். இவ்வாறு ஆருகதநூலிற் கூறப்பெற்றது.

எண்குணத்தான் என்று திருமாலும் வைணவரால் கூறப்பெறுவார் ஆகலின் வைணவநூல்களுட் கூறப்படும் எண்குணங்களாவன: வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்யம், ஞானம், சக்தி, பிராப்தி, பூர்த்தி என்பனவாம். சாமவேத சாந்தோக்கியோபநிடதத்தில் 'அபஹதபாப்மத்வம், விஜரத்வம், விம்ருத்யுத்வம், விசோகத்வம், விஜிகத்ஸத்வம் அபிபாஸத்வம், ஸத்யகாமத்வம், ஸத்யஸங்கல்பத்வம்' என்ற எட்டுப் பண்புகள் கூறப்பெற்றன. "இந்தப் பரமாத்மா பாவமில்லாதவர், ஜரையில்லாதவர், மரணமில்லாதவர், சோகமில்லாதவர், பசியில்லாதவர், தாகமில்லாதவர், சத்தியகாமர், சத்தியசங்கற்பர்" என்பது இந்தச் சுலோகத்தின் மொழிபெயர்ப்பு (ஓங்கார விளக்கம் பக்கம் 73).

"முழுதுணர் ஞானம், எல்லா முடைமை,
முழுதனுக் கிரகம், கெழுவரம், அநாதி,
பாச மிலாமை, மாசறுநிட் களம்,
அவிகா ரக்குறி ஆகிய தன்குணம்
எட்டும் தரித்து"

என்பன கல்லாடம் 89-ஆம் பாடலில் கூறப்பெற்ற எண்குணங்களாம்.

கடவுளின் வடிவநிலை

திருமுறைக்கலைஞர், வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்,

திருச்சிராப்பள்ளி

பரசிவம்–சிறப்பியல்பு :

ஆதியும் அந்தமும் நடுவும் இல்லாததாய், எங்கும் நிறைந்த பூரணமாய், ஒன்ருய் சச்சிதானந்தப் பொருளாய் கற்பனை கடந்த சோதியாய், குறி குணம் இல்லாததாய், மன வாக்குகளுக்கு எட்டாததாய், தனக்குமேல் தலைமை இல்லாததாய் விளங்குவது பரசிவம்— பரமசிவம். பரமசிவத்தின் சக்தி (வல்லமை) அருட்சக்தி ஆகும். இது சுத்த ஞானவடிவம். அருட்சக்தி சிற்சக்தி எனவும், சிவசக்தி எனவும் பெயர்பெறும். இந்த அருட்சக்தி பரமசிவத்தினிடம் சூரியனில் கிரணமும், பூவில் மணமும், அக்கினியில் சூடும் போலப் பிரிவின்றி இருக்கும் தாதான்மிய சத்தியாம். உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் போகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற பெருங் கருணை கொண்டு பரசிவம் தனது அருளையே பெண்ணுகக் கொண்டு விளங்குகின்ருர்.

சுத்த ஞானமான அருட்சத்தியானது பரமசிவத்தின் ஆயிரத்தில் ஒருகூருன நிட்கள (அருவ) சிவத்துடன் கூடி ஐந்தொழிலை நடத்தத் திருவுளங்கொள்ளும் போது பராசத்தியாக விளங்குகிருள். அப்போது நிட்கள சிவம் பராபரன் எனப்பெயர் பெறுகிருன். இப்பராசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு வலிமையுடையதாக ஆதிசக்தி விளங்குகிருள். இச்சத்தி திரோதான சக்தி எனவும் பெயர் பெறுவள். இவ்வாதி சத்தியின் ஆயிரத்தில் ஒருகூறு வலிமையுடையதாக இச்சாசத்தி விளங்குகின்ருள். இவ்விச்சாசத்தியின் ஆயிரத்தில் ஒருகூறு வலிமையுடையதாக ஞானசக்தி விளங்குகிருள். இந்த ஞான சத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு வலிமையுடையதாகக் கிரியா சத்தி விளங்குகிருள். இந்த ஐவகைச் சத்திகளும் பரமசிவத்தின் அருள் வடிவான நிட்கள சத்திகள் ஆவர். இச்சத்திகள் ஐவரும் முறையே சாந்தியதீதகலை, சாந்திகலை, வித்தியாகலை பிரதிட்டாகலை நிவிர்த்திகலை என்ற ஐந்து கலைகளின் அம்சமாக உள்ளவர்கள்.

பரசிவத்தின் தடத்த இயல்பு

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நின்ற பரமசிவம்-சுத்தசிவம் ஒவ்வோர் தத்துவங்களிலும் நின்று கொண்டு ஐந்தொழில்களைச் செய்து ஆன்மாக்களின் மும்மலங்களைப் போக்கி வீடு பேறு அருள வேண்டும் என்ற பெருங்கருணையினுல் அருவம் அருவுருவம் உருவம் என்ற மூவகைத் திருமேனி கொண்டருளுவர். அப்போது அருவத் திருமேனியுடன் கூடிய பரமசிவம் சத்தர் எனவும், அருவுருவத் திருமேனியுடன் கூடிய பரமசிவம் உத்தியுத்தர் எனவும், உருவத் திருமேனியுடன் கூடிய பரமசிவம் பிரவிருத்தர் எனவும் பெயர் பெற்று விளங்குவர். இம் முத்திற வேறுபாடுகள் எல்லாம் சத்தி வடிவமாகும். மரமும் வயிரமும் போலச் சிவத்திேைடு சத்திபிரிவின்றி இருக்கும். (மரம்-சத்தி, வயிரம்-சிவம்).

அருவத்திருமேனி சிவம் சத்தி நாதம் விந்து என்று நான்காயும், அருவுருவத் திருமேனி சதாசிவன் என்ற ஒன்ருயும், உருவத் திருமேனி மகேசன் உருத்திரன் விட்டுணு பிரமன் என்ற நான்காயும், ஆக இறைவனின் முத்திறத் திருமேனியும் ஒன்பது பேதமாக இருக்கும்.

''சிவம்சக்தி நாதம் விந்து
சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்தி ரன்தான்
மால்அயன் ஒன்றின் ஒன்ருய்ப்

பவந்தரும் அருவம் நால்இங் (கு);
உருவம்நால்; உபயம் ஒன்ருய்;
நவந்தரு பேதம் ஏக
நாதனே நடிப்பன் என்பர்.
— சிவஞான சித்தியார்.

அருள் வடிவான இந்த ஒன்பது சிவபேதமும் ஒன்றின் ஒன்ருகத் தோன்றி வேற்றுமை இன்றி விளங்கும்; பேதத்துள் சத்தி விந்து என்ற இரண்டும் சத்திபேதம். மற்றைய ஏழும் சிவபேதம். சிவத்திற்குச் சத்தியும், நாதத்திற்கு விந்துவும், சதாசிவனுக்கு மனோன்மணியும், மகேசுவரனுக்கு மகேசுவரியும், உருத்திரனுக்கு உமையும், விட்டுணுவுக்கு இலக்குமியும், பிரமனுக்குச் சரசுவதியும் துணையாக இருந்து செயல்புரியும் சத்திகள் ஆவர்.

அருவத் திருமேனி :

இச் சிவவடிவம், சுத்த (சிவ) தத்துவத்தில் உள்ளது. இது சிவம் சத்தி நாதம் விந்து என்ற நான்காயினும் சிவம் ஒன்றேயாம். இவ்வருவத் திருமேனி நிட்கள சிவம் எனவும், நின்மலசிவம் எனவும் பெயர்பெறும். இங்கு ஞானசக்தி தனித்து நின்றும், கிரியாசத்தி தனித்து நின்றும், பொருந்தி வியாபிக்கும் நிலையில் இச்சிவம் இலயசிவம் எனப்பெயர் பெறும். இச்சிவம் ஞானசத்தியைப் பொருந்தி நிற்கும் போது சிவன் என்றும், கிரியாசத்தியைப் பொருந்தி நிற்கும் போது சத்தி என்றும் பெயர் பெறும். இச்சாசத்தி மட்டும் எங்கும் எப்பொழுதும் ஒருதன்மையாகவே பொருந்தி வியாபித்து நிற்கும். நிட்களசிவம் கண்ணுல் காண இயலாதது; மனத்தினுல் தியானித்து வழிபடத்தக்கது. (நிட்களம்-வடிவு இல்லாதது),

அருவுருவத் திருமேனி :

இச்சிவ வடிவம் சாதாக்கிய தத்துவத்தில் உள்ளது. இது சதாசிவன் என ஒன்ரும். இவ்வுருவத் திருமேனி சகள நிட்கள சிவம் எனப்படும். (களம்-வடிவு. சகளம்-வடிவுடையது. வடிவுடையதும் வடிவில்லதும் ஆகிய இருதன்மையும் கூடி நிற்பதே சகள நிட்களம்). நிட்களசிவம் தம்மை ஆன்மாக்கள் அன்பினுல் நினைத்துப் பூசிக்கும் பொருட்டுச் சகளத்தில் கலத்தலே சகள நிட்களம் என்பதாம். இங்கு ஞானசத்தியையும் கிரியா சத்தியையும் சமமாகப் பொருந்தி வியாபிக்கும் நிலையில் இச்சிவம் போகசிவம் எனப்பெயர் பெறும்.

தூய்மையான ஆகாயவெளியில் வானவில் தோன்றுதல்போல, நிட்களத்தில் சகளம் நிறைந்திடுதலால், அது சாதாக்கியம் எனப் பெயர் பெற்றது.

" நிட்களம் அதனில் சகளம் நிறைந்திடும்
அப்பெயர் சாதாக் கியம்என வாகும் "

எனச் சதாசிவரூபம் எனும்நூல்கூறும். சதா ஆக்கியம், சாதாக்கியம். சதா—எப்பொழுதும் ஆக்கியம்-புகழப்படுவது. ஆகவே, வடிவம் நிறம் பெயர் முதலியன இல்லாத நிட்கள (அருவ) சிவம், வடிவம் நிறம் பெயர் முதலியன உடையதாய் அன்பர்களால் புகழப்படுவது என்பதாம். சாதாக்கியம் தத்துவம் எனவும், மூர்த்தி எனவும் பெயர் பெறும்.

சாதாக்கியம் சிவசாதாக்கியம் அமூர்த்தி சதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் கர்த்திரு சாதாக்கியம் கன்ம சாதாக்கியம் என ஐந்து வகைப்படும். இந்தஐந்து சாதாக்கியங்களும் முறையே பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசத்தி என்ற ஐவகைச் சிவ சத்திகளிடமாகத் தோன்றியவை. விறகில் தோன்றிய அக்கினி விறகின் மேற்பட்டுத் திகழ்தல்போல, சத்திகளிடமாகத் தோன்றிய சாதாக்கியங்கள் சத்திகளுக்கு மேற்பட்டுத் திகழும். இந்த ஐந்து சாதாக்கியங்களுக்கும் முறையே சிவன் ஈசன் பிரமீசன் ஈசுரன் ஈசானன் என்ற ஐவரும் அதிபமூர்த்திகள் ஆவர். சாதாக்கியம் நிட்களம் எனவும், அதிப மூர்த்தி சகளம் எனவும் நூல் கூறும். ஆகவே, சாதாக்கியமும் அதிபமூர்த்தியும் கூடியநிலையே சகள நிட்களம் என்பதாம். சகள நிட்களத் திருமேனி சிவலிங்க வடிவாகும்.

சிவலிங்கத்தில் கண்ணுல் காணவல்லது உருவம் (சகளம்). இன்னது என்று கூறமுடியாமலும் உறுப்புகள் இல்லாமலும் இருத்தல் அருவம் (நிட்களம்). ஆகவே, உருவம் உண்டு; உறுப்புகள் இல்லை. இந்த இரண்டு தன்மைகளும் பெற்றதால் சிவலிங்க வடிவம் அருவுருவத் திருமேனியாம்.

" காணுத அருவினுக்கும்
உருவினுக்கும் காரணமாய்

நீள்நாகம் அணிந்தார்க்கு

நிகழ்குறியாம் சிவலிங்கம் ''

—சாக்கியர் – பெரியபுராணம்.

சிவலிங்கம் என்பது சிவமே. சிவத்தின் பெயராகிய இலிங்கம் என்ற சொல் உபசாரம். இலிங்கம்–சங்காரகாலத்தே சகல உலகும் ஒடுங்குவதற்கும், பின்பு சிருஷ்டி காலத்தே யாவும் தோன்றுவதற்கும் இடமாக இருப்பது. (லிங்–லயம், ஒடுக்கம். கம்—தோற்றம்). படைத்தல் காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரித்தலாகிய பரமசிவத்தின் பிரபாவமே இலிங்கம் (இலிங்கம்-சித்திரித்தல்). இலிங்கம் கல் மணி படிகம் உலோகம் மரம் மண் முதலியவற்றால் அமைக்கப்பெற்ற ஒரு சிவ வடிவம்.

சிவலிங்க வடிவில் சிவநாபம் (உருத்திர-மாகிய குழவி) ஞானசக்தி; சிவநாபத்தின் கீழே உடுக்கைபோல் அமைந்திருக்கும் பீடத்தின் மேல்பாகம் (அதாவது ஒருபக்கமாக நீண்ட கோமுகி பொருந்திய ஆவுடையாளாகிய பீடம்) கிரியாசக்தி; வட்டமாகிய கீழ்ப்பீடம் இச்சாசத்தி. இன்னும் சிவநாபம் சிவவடிவும், பீடம் சத்தி வடிவுமாம். கீழ்ப்பீடம் பிரம வடிவுமாம். கீழ்ப்பீடம் பிரமவடிவும் மேலுள்ள ஆவுடையாள்பீடம் விட்டுணு வடிவும், சிவநாபம் உருத்திர வடிவுமாம். சிவலிங்கம் கிழக்கு அல்லது மேற்கு முகமாக இருந்தால், அதன் கோமுகி வடக்கு நோக்கியும், தெற்கு அல்லது வடக்கு முகமாக இருந்தால் அதன் கோமுகி கிழக்கு நோக்கியும் அமைந்திருக்கும் என நூல் கூறும்.

சிவலிங்கச் சிவநாபத்தில் ஈசானம் சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தற்புருடம் என்ற ஐந்து முகங்கள் உள்ளன வாகக் கற்பிக்கப்படுதலால் சிவலிங்கத்தைச் சதாசிவ மூர்த்தியாகவே தியானிக்கப்படும். சதாசிவமூர்த்தி ஈசானாதி ஐந்து திருமுகங்களையும் பத்துத் திருக்கரங்களையும் உடையவர் ஆவர். (சதா+ஈசர்=சதேசர்-சதாசிவர், சதா சிவமூர்த்தி).

சிவநாபத்தின் மேல் நோக்கிய சிரசின் வட்டம் சிவசாதாக்கியமாகிய ஈசானமுகம். சிவநாபத்தின் மேற்குப்பாகம் அமூர்த்தி சாதாக்கியமாகிய சத்தியோசாதமுகம். சிவ நாபத்தின் வடக்குப்பாகம் மூர்த்தி சாதாக்கிய மாகிய வாமதேவமுகம். சிவநாபத்தின் தெற்குப் பாகம் கர்த்திருசாதாக்கியமாகிய அகோரமுகம். சிவநாபத்தின் கிழக்குப்பாகம் கன்மசாதாக்கிய மாகிய தற்புருடமுகம். சிவசாதாக்கியம் முதலிய நான்கும் ஒன்றை ஒன்று பற்றி முடிவில் ஐந்தாவதாகிய கன்மசாதாக்கியத்தை அடைந்து ஒன்றாய் நிற்கும். ஆகவே, கன்ம சாதாக்கியமாகிய தற்புருடமுகம் மிகமிக விசேடமாம்.

சிவலிங்கச் சிவநாபத்தில் ஐந்து நான்கு மூன்று இரண்டு ஒன்று அமைந்த முகங் கொண்டவையும் உள்ளன. சிவநாபத்தின் மேல்பாகத்தில் ஒருமுகமும், கிழக்கு முதலிய நான்கு பக்கங்களில் நான்கு முகமும் ஆக ஐந்து முகமுடைய இலிங்கம் பஞ்சமுகலிங்கம் எனப்படும். கிழக்கு முதலிய நான்கு பக்கங் களில் நான்கு முகமுடைய இலிங்கம் சதுர்முக லிங்கம் எனப்படும். கிழக்கு தெற்கு வடக்கு என்ற மூன்று பக்கங்களில் மூன்று முகமுடைய இலிங்கம் திரிமுகலிங்கம் எனப்படும். கிழக்கு மேற்கு என்று இருபக்கங்களில் இரண்டு முகமுடைய இலிங்கம் துவிமுகலிங்கம் எனப்படும். கிழக்குப் பக்கத்தில் மட்டும் ஒரு முகமுடைய இலிங்கம் ஏகமுகலிங்கம் எனப்படும்.

சிவநாமமாகிய உருத்திரத்திலேயே திருமுகம் சேர்ந்து அமைந்து இருக்கும். கிரீடம் முகம் கழுத்து தோள்கள் மார்பு இவைமட்டும் நன்கு வெளிப்பட்டும், மற்றைய உறுப்புகள் மறைந்தும் இருக்கும். ஆகவே, முகலிங்கம் அருவுருவத் திருமேனியே ஆகும்.

உருவத்திருமேனி :

இச் சிவவடிவம் மகேசுவர (ஈசுவர)தத்து வத்தில் உள்ளது. இது மகேசுவரன் உருத்திரன் விட்டுணு பிரமன் என நான்காம். மகேசுவரனிடத்தில் உருத்திரனும் விட்டுணுவும், விட்டுணுவிடத்தில் பிரமனும் தோன்றியவர். இவர்களுள் மகேசுவரனே முதன்மையானவர். மகேசுவரரின் அதிகாரத் தால் உருத்திரன் அழித்தலையும் அருளலையும் செய்வர். பிரமன் படைத்தலையும், விட்டுணு காத்தலையும், மகேசுவரன் மறைத்தலையும் சுத்த வித்தையில் நின்று செய்வர். விட்டுணு பிரமன் இவ்விருவரிடத்தும் முதல்வனது சிவசத்தி பதிந்து நின்று செலுத்துதலால் இவர்கள் மகேசு வரரோடு ஒப்பாக வைக்கப்பெற்றார்கள்.

இவ்வுருவத் திருமேனி சகளசிவம் எனப்படும். இங்கு ஞானசக்தி குறைந்து கிரியா சத்தி மிக்கு நின்றும், ஞானசத்தி மிக்குக் கிரியா சத்தி குறைந்து நின்றும் வியாபிக்கும் நிலையில் இச்சிவம் அதிகாரசிவம் எனப் பெயர் பெறும். ஞானசத்தி குறைந்து கிரியா சத்திமிக்கு நின்றபோது மகேசுவரன் என்றும், ஞானசத்தி மிக்குக் கிரியாசத்தி குறைந்து நின்றபோது சுத்தவித்தை என்றும் பெயர் பெறும்.

மகேசுவர மூர்த்தியும்

அவரை வழிபடும் பயனும் :

மகேசுவர வடிவம் இருபத்தைந்து பேதமாகும். இவ்வடிவத்தில் எல்லா உறுப்புகளும் கண்ணால் காணும்படி இருக்கும். அதனால் சகளம் ஆயிற்று. சந்திரசேகரர் உமா மகேசுவரர் இடபாரூடர் சபாபதி கலியாண சுந்தரர் பிட்சாடனர் காமாரி காலாரி திரிபுராரி சலந்தராரி மாதங்காரி வீரபத்திரர் ஹரியர்த்தர் அர்த்தநாரீசுவரர் கிராதர் கங்காளர் சண்டேசானுக்கிரகர் நீலகண்டர் சக்கரப் பிரதானர் கஜமுகானுக்கிரகர் சோமாஸ்கந்தர் ஏகபாதர் சுகாசீனர் தட்சிணாமூர்த்தி இலிங்கோற்பவர் என்று இருபத்தைவரும் மகேசுவர மூர்த்தி ஆவர். இம்மகேசுவர மூர்த்திகளே அன்றி இவற்றின் பேதமாக விளங்கும் சரப மூர்த்தி வடுகமூர்த்தி க்ஷேத்திரபாலகமூர்த்தி ஏகபாதத்திரிமூர்த்தி முதலிய பல சிவமூர்த்திகளும் மகேசுவர மூர்த்திகள் எனவும் பெயர் பெறுவர்.

இம் மூர்த்திகள் யாவரும் சதா சிவமூர்த்தியின் (சிவலிங்க மூர்த்தியின்) ஈசானாதி ஐந்து முகங்களின் அம்சத்தையும், படைத்தல் காத்தல் முதலிய ஐந்தொழில் அதிகாரத்தையும் பெற்றவர். சிவாலய உற்சவாதிகளில் மூலஸ்தானச் சிவலிங்க மூர்த்தியின் பிரதிநிதியாகவே இம்மகேசுவர மூர்த்திகளில் ஒருவர் நாடோறும் வீதி உலாவிற்கு எழுந்தருளுவதை அறியலாம்.

மகேசுவரமூர்த்திகள் போகமூர்த்தி கோர மூர்த்தி யோகமூர்த்தி என மூன்றுவகைப்படும். அம்மையாரோடு கூடி இன்ப நிலையில் எழுந்தருளிய சந்திரசேகரர் உமாமகேசுவரர் இடபாரூடர் சோமாஸ்கந்தர் முதலியோர் போகமூர்த்தியாகும். அம்மையார் இன்றி வீர நிலையில் எழுந்தருளிய காமாரி காலாரி கங்காளர் வீரபத்திரர் முதலியோர் கோர மூர்த்தியாகும். யோக நிலையில் எழுந்தருளிய சுகாசீனர் தட்சிணாமூர்த்தி முதலியோர் யோக மூர்த்தியாகும்.

இம்மை மறுமை இன்பங்களைப் பெறவிரும்புவோரும் உலகப்புகழ்களைப் பெறவிரும்புவோரும்போக மூர்த்தியையும், உலகில் பகையினை வெல்லவிரும்புவோரும் வினையினைப் போக்கக் கருதுவோரும் கோரமூர்த்தியையும், வீடு பேற்றைப் பெறவிரும்புவோர் யோக மூர்த்தியையும் வழிபடுதல் வேண்டும் என நூல்கள் கூறும்.

முடிவுரை :

பரமசிவம் தம்மை மெய்யன்புடன் வழிபடும் தேவர்களுக்கும் மானுடர்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும் அருள்புரியும் பொருட்டுத் தமது அருவநிலையிலிருந்து இறங்கி அருவுருவத் திருமேனி அல்லது உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளிய இடமே ஆலயம் அல்லது திருக்கோயில் எனப் பெயர்பெறும். (ஆ+லயம்—ஆலயம். ஆ-ஆன்மா, லயம்-(கடவுளிடம்) லயிப்பதற்கு அல்லது சேர்தற்கு உரிய இடம் : ஆணவமலம் அடங்குதற்குரிய இடமுமாம். கோ+இல்—கோயில். கோ-கடவுள்).

பழத்தின் இரசம் போலவும், விறகில் தீ போலவும், எள்ளில் எண்ணெய் போலவும், பாலில் நெய்போலவும் எங்கும் நிறைந்து மறைந்து நின்ற பரமசிவம் ஆலயத்தில் தயிரில் நெய்போல நின்று ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றார். ஆகவே, மக்களாகியோர் எளிதில் இறைவனின் திருவருளைப் பெறும் இடமாக விளங்குவது ஆலயமே-திருக்கோயிலே ஆகும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற ஔவையார் அமுதமொழிப்படி ஆலயத்தில் இறைவனைத் தொழுது வழிபடலே எளிதும் சிறந்த பயனும் ஆகும்.

அறைகூவி வீடருளும் ஆத்மநாதன்

திரு ச. முத்துக்குமாரசாமி சேர்வை அவர்கள்,
திருப்பெருந்துறை.

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய்—
அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய
சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

கயிலை மாமலை மேவிய கடல்; கருணை மழை பொழியும் கொண்டலாய், அருள் பொங்கும் அமுத வெள்ளமாய், பிறவிக் கடல் தாண்ட உதவும் பேரருள் தோணியாய், அவனியில் வந்து குருபரனாகி, நிறை மலர்க்குருந்தின் நீழலில் உவந்துஇனிதிருந்து, அருளும் புனிதத் தலமே தண்ணார் தமிழளிக்கும், தண் பாண்டி நன்னாட்டின் செல்வத் திருப்பெருந்துறையாகும்.

வாதவூரராக; தென்னவன் பிரமராயராக, அரிமர்த்தன பாண்டியரின் நல்லமைச்சராகப் படை வலிமையைப் பெருக்குதற்குப் பரிமா வாங்க வந்த தவச் செல்வருக்குக், குருமணி காட்சி தந்து தீட்சை செய்து தம் அருள் நோக்கினாலும், திருவாக்கினாலும் தம்மை உணருமாறும், உரைக்குமாறும், உணர்த்தி, மாணிக்க வாசகராக மாற்றியதும், திருப்பெருந்துறைத் தலத்திலேதான்.

உயிர்க்குலமனைத்தும் உய்யும் வண்ணம், நினைத்தொறும் காண்தொறும், பேசுந் தொறும் எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் தமிழ்மாமறையும் எட்டாந் திருமுறையும் இறைவன் திருக்கரத்தாலே எழுதப் பெற்றதுமாகிய அருள்நூலாம் திருவாசகமெனும் ஞானக் கருவூலம் தோன்றியதும் திருப்பெருந்துறையேயாகும்.

வான்பழித்து இம்மண்புகுந்து, வாதவூரரை வாழ்விக்க வந்த வள்ளல், கொற்றக் குதிரையின் மேல் வந்தருளித் தன்னடியார் குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி, அவர் தம் சித்தம் புகுந்து தித்திக்கவல்ல சிவபெருமான், மணிவாசகர் அமைத்த கற்கோயிலையும் சொற்கோயிலையும் ஏற்று இனிதிருந்து அருள் பாலிப்பதுடன், தனக்குரிய விழாச் சிறப்புகள் அனைத்தையுமே மணிவாசகப் பெருந்தகைக்கு வழங்கிய சிறப்புப் பெற்ற தலம் திருப்பெருந்துறையாகும்.

இத்தலத்திற்கு; ஆவுடையார்கோவில், சிவபுரம், தட்சிணா கயிலாயம், குருந்தவனம், ஞானபுரம், பராசக்திபுரம், தேசுவனம், பவித்திரமாணிக்கம், யோகபீடபுரம், யோகவனம், உபதேசத்தலம் ஆகிய காரணப் பெயர்களும் உள்ளன.

இத்தலத்தில் இறைவன் திருப்பெயர் திரு ஆத்மநாதர். இறைவியின் திருப்பெயர் திரு சிவயோகநாயகி. இரண்டு சந்நிதிகளும் தெற்கு நோக்கி அமைந்துள்ளன. இறைவன் திருமுன்னர் எல்லா ஆலயங்களிலும் அமைந்துள்ள நந்தி, பலிபீடம், கொடிக்கம்பம் ஆகிய அமைப்புக்கள் இன்றியே இத்தல அமைப்புச் சிறப்புப் பெறுகிறது. எனவே, சோதியாய்ச் சுடராய்ச் சூழொளிவிளக்காய், விளங்கும் ஆதியை, நீதியை, அருள்நிதி தர வரும் ஆனந்த மலையைத், தீதிலா நன்மைத் திருவருட்குன்றைத் திரு ஆத்மநாதரைத் திருவீதியில் நின்றவாறே எவ்விதத் தடையுமின்றித் தரிசிக்கும் பேறு, இத்தலத்தில் மட்டுமே கிடைக்கும் பெரும் பேரின்பக் காட்சியாகும்.

இறைவனுக்குரிய அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளுள், உயிர்நாதனும் யோகநாயகியும் அருவத்திருமேனி கொண்டு அருள்பாலிப்பது இத்த

திலேதான். இறைவனையும், இறைவியையும் அருவ நிலையிலே தரிசித்த நாம் மணிவாசகர் உபதேசம் பெற்ற தெய்வீகக் காட்சியைக் குருந்த மூலத்திலே கண்டு மன நிறைவு பெறலாம். குரு சிஷ்ய வடிவத்தின் அற்புதக் கோலத்தைக் கண்டுமகிழலாம்.

குருநாதன் வாதவூரரின் சிரமீது கரந் தொட்டு ஆசிவழங்குவதையும், அத்தன் மாமலர்ச் சேவடிக்கண் மணிவாசகரின் சென்னி மன்னித்திகழும் காட்சியையும் காணலாம்.

முதற் பிராகாரத்தை முழுமையாக வலம் வந்தபின் திரு மணிவாசகரின் அருள் மூலத் தானத்திற்கு வருகிறோம். உற்சவ மூர்த்தியாக விளங்கும் இந்த மூர்த்தமே எல்லா விழாக் களுக்கும் உரிமை பெற்ற மூர்த்தி. இத்தலத் தில் மணிவாசகர் அதிகார நந்திகேசுவரராக வும், அனுக்கிரக சண்டிகேசுவரராகவும் விளங்குகிறார்.

நந்தீசுவர மாணிக்கவாசகர், சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதிகள் தனித்தனியே உள்ளன. சிவபிரானுக்குரிய, இடபவாகனம், மகாரதம், கைலாச வாகனம் மற்றுமுள்ள சிறப்பு வாகனங்களும் மணிவாசகர்க்கே உரியனவாகத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஆனிமாதம் நடைபெறும் விழா, திருவாசகம் திருக்கோவை யார் உற்சவமாகவும், மார்கழி மாதம் நடை பெறும் விழா, 'யாவருமறிந்த திருவெம்பாவை உற்சவமாகவும் நடைபெறுவது மாணிக்கவாச கருக்கு, இறைவன் இத்தலத்தில் வழங்கியுள்ள உரிமையையும் பெருமையையும் எடுத்துக் காட்டுவதாகும்.

அம்பிகையின் சந்நிதிக்கு நேர் எதிரே மாணிக்கவாசகரின் அருள் மூலத்தான சந்நிதி வடக்கு நோக்கி அமைந்துள்ளது. ஆறுபூசைக் காலங்களிலும் இரண்டு சந்நிதிகளிலும் ஒரே சமயத்தில் வழிபாடுகள் தீபாராதனை நடை பெறுங்காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

மணிவாசகரின் அருள் மூலத்தானம் சந்நிதிக்கும் அம்பிகையின் சந்நிதிக்கும் மத்தி யில் மேற்கு நோக்கிய முகமாக, வீரபத்திரர் சந்நிதி உள்ளது. வீரபத்திரர் அம்பிகையின் யோகத்தைப் பாதுகாக்கும் காவலராய் விளங்கு கிறார். எத்தகைய கொடிய சங்காதோஷங் களையும் (பேய், பிசாசு) போக்கும் வல்லமை பெற்றவர்.

இரண்டாம் பிராகாரத்தில் நடனசபையில், பதஞ்சலி, வியாக்கிரபாதர்; சங்கநிதி, பதும நிதி ஆகிய திருவுருவங்களையும், பஞ்ச பூதத் தலங்களான, காஞ்சி, திருவானைக்கா, திரு வண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் ஆகிய வற்றின் மூல வடிவங்களையும், சோமாசி மாறனாரின் யாகத்திற்கு அவிர்ப்பாகம் வாங்க இறைவன், இறைவி இருவரும் புலையர் வேடம் பூண்டு வந்த கோலத்தையும், அர்ச்சுனர்க் குப் பாசுபதம் கொடுக்க இறைவனும், இறை வியும் வேட்டுவ உருத்தாங்கி வந்த வேடத் தையும் அற்புதச் சிலைவடிவுகளில் காணலாம். திருவாதவூரரது அமைச்சர் கோலத்தின் கம் பீரத் தோற்றத்தையும் அமைதியும், சாந்த மும், சிவப்பொலிவும் தோன்ற நிற்கும் மணி வாசகரின் துறவுக் கோலத்தையும் ஒருசேரக் கண்டு நாம் செம்மை நலம் பெற்றுச் சிறப்படை கிறோம்.

இந்த நடன சபையில்; உமையவள் மட் டுமே காண இறைவன் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் இக்காட்சி பதஞ்சலி, வியாக்கிர பாதர்க்கும் காணக்கிடைக்காதது. தில்லையிலே செம்பொன் அம்பலத்தில் கூத்துகந்து ஆடி அடியவர்களை இறைவன் மகிழ்வித்தார். இதனை யொட்டியே, அறையிலே ஆடிய பின்னரே அம்பலத்திற்கு வரவேண்டும் என்ற முதுமொழி விளங்குகிறது.

இம்மண்டபத்தின் முகப்பிலே திருப்பணி யாளர்களான சேதுபதி மன்னரையும், தொண்டமான் வேந்தரையுங் கண்டு வணங்கி மகிழலாம்.

மூன்றாம் பிராகாரத்தில் பஞ்சாட்சர மண்ட பம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில், சைவ சமயத்தில் கூறப்பெறுகின்ற, மந்திரம் பதி னொன்று, பதம் எண்பத்தொன்று, அட்சரங்கள் ஐம்பத்தொன்று, புவனம் இருநூற்றி இருபத்து நான்கு, தத்துவம் முப்பத்தாறு, கலை ஐந்து ஆகிய ஆறு அத்துவாக்களையும் விளக்கிச் சிற்ப வடிவில் அமைத்துள்ளனர். எனவே இம் மண்டபம் மகாமந்திர மண்டபமாக விளங்கு கிறது.

இதனுள் பிரவேசித்தவர்கள், சமய தீட்சை ஆகி, பஞ்சாட்சர உபதேசம் பெற்ற உயர் தன்மை அடைந்து, திரு ஆத்மநாதப் பெருமானை வழிபடும் தகுதி பெறுகிறார்கள். இம்மண்டபத்தைக் குதிரை மண்டபம் என்றே

கூறுகிறார்கள். மணிவாசகர் பொருட்டு இறைவன், குதிரைச் சேவகனுகி வந்த கோலத்தைப், பரிவீரனுக, பரிமேல் அழகனுக வீற்றிருக்கும் கம்பீரத் தோற்றத்தைத் தாவிவரும் பரிமீது இங்கே காணலாம்.

மற்றும் வாதவூரர் திருவுருவையும், அரிமர்த்தன பாண்டியரின் அமர்ந்த கோலத்தையும் குறுநில மன்னனுகிய குறும்ப வேளாளர் நின்று கரங்கூப்பித் தொழுங் காட்சியையும் காணலாம். இம் மண்டபத்தின் மேல் பக்கம் திரு சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதி அமைந்துள்ளது.

இப்பிராகாரத்தின் தென்மேற்கில் திருத்தமாம் பொய்கை ''அக்கினி தீர்த்தம்'' அமைந்துள்ளது. பொய்கையின் தென் கிழக்கில் வெயிலுகந்த விநாயகப் பெருமான் மும்மூர்த்தியாக அமர்ந்து அருள் பாலிக்கிருர். அடுத்துள்ள தியாகராசமண்டபம் சிற்பச் செல்வங்கள் நிறைந்த அற்புதக் கலைக்கூடமாகும். இம் மண்டபத்தின் வடக்கில் தல விருட்சமாகிய குருந்தம் நிற்கிறது. இப்பிராகாரத்திலே இராச கோபுரத்தின் மீது கோபுரகுமாரர் சந்நிதி உள்ளது. வானுறவோங்கி நிற்கும் இராசகோபுரத்தை யொட்டித் திருமதிலைச் சுற்றி நான்காம் பிராகாரம் அமைந்துள்ளது.

திருவீதியாகிய ஐந்தாம் பிராகாரத்திற்கும் இராசகோபுரத்திற்கும் இடையில் அமைந்திருப்பது இரகுநாத பூபால மண்டபம். இதனை ''சுவத்திக'' மண்டபம் எனச் சிற்பக்கலை வல்லுநர்கள் விளக்கிக் கூறுகிருர்கள். இம் மண்டபத்தின் மேற்கில் நந்தீசுவர மாணிக்க வாசகர் சந்நிதி அமைந்துள்ளது.

இப்பெரிய மண்டபத்திலுள்ள தூண்களில் வீரபத்திரரின் இருபெரிய திருவுருவங்கள் தக்கனையும், எச்சனையும், வதைத்தருளும் கோலத்தில், காண்போர் மனம் கலங்கும் வண்ணம் அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் முகப்பில் அமைந்துள்ள நரசிம்மம், காளி, ஊர்த்துவதாண்டவர், பிட்சாண்டவர், வில்லேந்திய வேலவர், சந்திரசேகரர், சங்கரநாராயணர் ஆகிய திருவுருவங்களின் சிற்பக்கலைச் சிறப்பினை, உணர்ச்சிகளை வெளிக்காட்டும் முகபாவத்தின் கலைத்திறனை எழுத்தில் வடிக்கவோ எண்ணில் அடக்கவோ இயலாது. நேரிற் கண்டுதான் நிறைவு பெறவேண்டும். இரண்டே தூண்களில் ஆயிரக்கால் மண்டபத்தை இங்கு அமைத்த சிற்பியின் மதிநுட்பத்தை உணர்ந்து போற்றலாம்.

இத்துடன் நாம் மணிவாசகரின் அருள் பெற்று வெளியே வந்து திருவீதியில் நின்றவாறு திரு ஆத்மநாயகனை நோக்கி வணங்கி ''எது எமைப் பணிகொளும் ஆறு'' எனக் கேட்டுக் கொண்டு அனைத்துலகும் வாழ அறப்பணிகளைத் துவக்கிப் பிறவியின் பயனைத் தேடி வெற்றி கொள்வோமாக. இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்த திருத்தலம் தஞ்சை மாவட்டத்தின் தென் பகுதியில் அறந்தாங்கி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒன்பதுகல் தொலைவில் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் தமிழகத்தின் பேரரசர்களாலும், சிற்றரசர்களாலும் விரிவு செய்யப் பெற்று ஏராளமான இறையிலி நிலங்களைத் தனதுடைமையாகக் கொண்டிருந்தது.

சைவமுந் தமிழும் தழைத்தினி தோங்க நற்பணி பற்பல ஆற்றிவரும் திருக்கயிலாய பரம்பரை, திருவாவடுதுறை ஆதீனத்தின் சீரிய பராமரிப்பிலும், கண்காணிப்பிலும் இத் திருக்கோயில் சிறந்து விளங்குகிறது.

சிற்ப நுட்பச் சிறப்புக்களும், ஆலய அமைப்புக்கலையின் அற்புதப்பணியும், இத் தலத்தில் மட்டுமே காணக்கூடிய ''கொடுங்கை'' எனும் கல்வளைவு வேலையும் இக்கோயிலின் தனி உரிமையாகும்.

இக்கோயில் திருப்பணி, பெருந்தொகை மதிப்பீட்டுத் திட்டத்துடன் வேலை துவங்கிப் பழுதுபார்த்தல், விரிவு செய்தல், மாற்றியமைத்தல் ஆகிய இன்றியமையாத பணிகள் நடைபெற்றுவருகின்றன. அனைவரும் இத்தெய்வத் திருப்பணியில் பங்கு கொண்டு திரு ஆத்மநாதப் பெருமானின் பேரருள் பெற்று அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்று மகிழுமாறு வேண்டுகிருேம்.

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை
மாய்ப்பாரும்
தாழ்ந்துலகும் ஏத்தத் தகுவாரும்—
சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார்
பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர்.

உமாபதி சிவாசாரியரின் சதரத்தின சங்கிரகம்

பேராசிரியர் திரு பெ. திருஞானசம்பந்தம், M.A.,L.T.,
பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.

வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத்தைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் வாழும் மக்கள் கற்றறிந்து உய்தற்பொருட்டு, தமிழில் எழுந்த சாத்திர நூல்கள் பதினான்கு. அவற்றுள் எட்டு நூல்களின் ஆசிரியர் என்ற பெருமைக்குரியவர் தில்லையம்பதியின் எல்லையில், கொற்றவன் குடியில் வாழ்ந்த சிவநெறிச் செல்வர் உமாபதிசிவாசாரியார் என்பதைச் சைவஉலகம் அறியும். தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் பொதுவாகலான், தமிழ் பயிலாத பிற பகுதிகளில் வாழும் பிற மக்கள் உய்தற்பொருட்டும், தமிழ் பேசப்படாத பிற பகுதிகளில் வாழும் பிற சமயசாத்திர அறிஞர்கள் தெளிதற்பொருட்டும், உமாபதி சிவாசாரியார் பல்வேறு ஆகமங்களின் பிழிவாக நூற்றுக்கு மேற்பட்ட ஆகம வாக்கியங்களைத் தொகுத்து, சைவ சமயத்தில் கூறப்படும் முப்பொருள் உண்மைக்கு விளக்கம் தரும் வகையில் சம்ஸ்கிருத மொழியில் அவ்வாக்கியங்களுக்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார். பொறுக்கி எடுக்கப்பட்ட மணி (ரத்தினம்) போன்ற நூறு (சதம்) ஆகமவாக்கியங்களைக் கொண்டுள்ளதால் இந்நூலுக்குச் சதரத்தின சங்கிரகம் என்ற பெயர் வழங்கி வருகிறது. ஒளி பொருந்திய மணி இருளைப்போக்குவது போல இம்மணிக்கோவை நமது அகவிருளைப் போக்கி உள்ளொளி பெருக்கும் இயல்பினைக் கொண்டதாகும். இந்நூலாசிரியர் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலும், பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தார் என்று சமய வரலாற்று அறிஞர் கூறுவர்.

இந்நூலில் எடுத்தாளப்படும் ஆகமங்களுள் சுவாயம்புவம், நிசுவாசம், மாதங்கம், தேவியாமளம், மிருகேந்திரம், கிரணம், பராக்யம், தேவீகாலோத்தரம், விசுவசாரம், ஞானோத்தரம் முதலானவை இடம்பெற்றுள்ளன. ஞானம், தீக்கை இரண்டுமே இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன.

பதி, பசு பாசம் என்னும் முப்பொருள் உண்மையை அழகுற அளவைநூல் முறைப்படி விளக்கிச் செல்கிறார் ஆசிரியர். வாக்கிறந்த பூரணமாய் விளங்கும் பரம்பொருள் பிரமம் என்பர் வேதாந்திகள். அப்பரம் பொருள் சிவனே என்பது சைவசித்தாந்திகளின் துணிபு. அச்சிவன் மனோவாக்குகளுக்கு மட்டுமின்றிச் சாந்தி நிலைக்கும் அப்பாற்பட்டவன் என்று ஒருபடி மேலே நம்மை இட்டுச் செல்கிறது சைவ சித்தாந்தம்.

அத்வைதிகள் பிரமமே இவ்வுலகத் தோற்றத்திற்கு உபாதான (மூலப்பொருள்) காரணமாயும் இருக்கிறது என்று கூறுவர். சித்தாந்தத்தை நிறுவுதற்கு முற்பட்டுள்ள ஆசிரியர் இக்கூற்றை மறுக்கிறார். ஒவ்வொரு காரியத்திற்கும் உரிய மூலப்பொருள், அதைத் தோற்றுவிக்கும் முதற் பொருள், அதைத் தோற்றுவிக்கும் முதல்வன், அவனுக்குத் துணைபுரியும் கருவிகள் ஆகியவை ஒன்றுதல் இயலாது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். குடத்திற்கு முதற்பொருளான மண்ணும், அதை உண்டு பண்ணும் குயவனும், அவனுக்குத் துணைபுரியும் சக்கரம் முதலானவையும் வெவ்வேறுதல் போல, இவையும் வெவ்வேறாக இருத்தல்தானே இயல்பு. கடவுளே மூலப்பொருள். ஆனால் அதனினின்றும் விளைந்த உலகப் பொருள்கள் யாவும் முற்றறிவல்லவோ பெற்றிருத்தல் வேண்டும்? ஒரு சில சிற்றறிவு பெற்றவையும் பிற சடமாத

லும் எங்ஙனம்? காரணத்தின் தன்மை காரியத்திலும் காணப்படுதல்தானே நியதி? ஆதலின் சிவன் நிமித்தகாரணன், அவனது சக்திகள் துணைக் காரணங்கள், மாயை மூலப்பொருளாம் காரணம் என்பதே ஏற்புடையது.

பகுக்கப்படும் பொருள் அனைத்துமே அநித்தியமானவை, காரிய நிலையில் உள்ளவை, ஒவ்வொரு காரியத்திற்கும் அதைத் தோற்றுவிக்கும் முதல்வன் இருந்தே ஆகவேண்டும். குடத்திற்குக் குயவன் இருப்பதுபோல, அம்முதல்வனும் மூலப்பொருளின் தன்மையையும் செயல்முறைகளையும் அறிந்தவனாகவும், செயலாற்றுதற்குத் தேவையான கருவிகளைப் பெற்றிருப்பவனாகவும் இருத்தல் இயல்பு: அத்தகைய முதல்வன்தான் உலகெலாம் உணர்ந்த முழுமுதற்பொருளான சிவன்.

பிரம்மத்தை நிலைநிறுத்த ''ஜன்மாத்ய ஸ்யயத'' என்ற பிரம்மசூத்திரத்தினால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முச்செயல்களையும் புரிபவன் அம்முதற் பொருள் என்று கூறுகிறது. பிரம்மசூத்திரம் குறிப்பிட்ட முச்செயல்களுக்கும் மேலாகத் திரோபவம், விமுத்தி என்ற இரு நிலைகளுக்கும் அவனே முதல்வன் என்று கூறும் சைவசித்தாந்தத்தின் ஏற்றத்தைச் சுட்டுகிறார் நமது ஆசிரியர். இப்பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பதுதான் நடராசப் பெருமானின் தாண்டவ நிலையின் குறிப்பு என்பதைச் சைவப் பெருமக்கள் அறிவர்.

பிரம்மம் வேறு ஆத்மாவேறு என்பதை மறுப்பவர் அத்வைதிகள். பசுவையும் பாசத்தையும் பதியுடன் ஒருங்குவைத்து எண்ணுகின்ற அத்வைதிகள் 'பசுபாசேசுவரவாதிகள்' என்றும், 'கர்மமே' முதற்காரணம் என்று கூறும் மீமாம்சகர் 'பாசேசுவரவாதிகள்' என்றும் குறிப்பிடுகிறார். உண்மை நிலையை உள்ளவாறு உணர்ந்து போற்றும் சைவசித்தாந்திகள் சிவனையே பரம்பொருளாக ஏற்றுக் கொண்ட போதிலும் பசுபாசங்களையும் உண்மைப் பொருளாகவே ஏற்றுக் கொள்கின்றனர் என்பது பிரமாணங்களுக்கு ஒத்தது என்னும் சிறப்பினை உடையது.

உயிரின் இலக்கணத்தைப் பராக்யாகமத்திலிருந்து மேற்கோள் காட்டி, சுருங்கக் கூறி விளங்கவைக்கிறார் ஆசிரியர்.

'தேஹாந்ய: அநச்வர: வ்யாபீ
விபின்ன: ஸமல; அஜட;
ஸ்வகர்மபலபுக் கர்த்தா கிஞ்சிக்ஞ:
ஸேச்வர; பசு;'

'ஆன்மா உடம்பினின்றும் வேறானது, அழிவற்றது, எங்கும் நிறைந்திருப்பது, வெவ்வேறானது, மும்மலங்களோடு கூடியது, சடமல்லாதது, தன் வினைப்பயனை நுகர்வது, வினைபுரிவது, சிற்றறிவினது, இறைவனைத் துணையாகக்கொண்டது'.

அத்வைதிகள் கூறுவது போல ஆத்மா ஒன்றேயானால், ஒருயிருக்கு முத்தி கிடைக்கும்போது அனைவருமே முத்தியின்பத்தைப் பெறும்படியாகுமே, இப்பொருந்தா நிலையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மும்மலங்களின் தொடர்பு தொடர்பின்மை காரணமாக ஆத்மா, சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்ற மூவகையினர் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். அத்வைதிகள் கூறுவதுபோல ஆத்மா நிரஞ்சனம் (அழுக்கற்றது). ஆனால், சுகதுக்கங்களில் அதற்கு நாட்டம் எப்படி ஏற்படக்கூடும் என்று யுக்திபூர்வமாகக் கேட்கிறார். ஆகவே ஆத்மாவுடன் மலர்ச் சேர்க்கை ஒப்புக்கொள்ள வேண்டியதாகிறது.

இன்பத்திலும் துன்பத்திலும் மோகத்திலும் உழலும் ஆன்மா, துய்த்தலின் பயனாக வினை நீங்கப்பெற்றுப் பக்குவம்பெற்ற நிலையில் சிவபெருமானின் அநுக்கிரகசக்திக்கு ஆட்படும் விதத்தையும், குருவருள்பெறும் வண்ணம் அவன் திருவருள் புரிவதையும் 'சத்திநிபாதம்' என்னும் அருட்செயலை விளக்கும்போது கூறிச் செல்கிறார். குருவினால் தீட்சைசெய்யப்பெற்ற ஆன்மா விரைவில் முத்தியைப் பெறும் நிலையை அடைகிறது. தீட்சை ஒன்றே முத்தியைப் பெறும் வழி' என்று வலியுறுத்துகிற பௌஷ்கராகமம்—'தீக்ஷைவ மோக்ஷதா பும்ஸாம் சிதபிவியக் திகாரணீ'.

வகுப்பில் தூங்கும் மாணவனைப் பிரம்பினால் தட்டி எழுப்பி அறிவுறுத்தும் ஆசிரியரைப் போல, சிவபெருமான் மோகத்தில் ஆழ்ந்திருக்கும் உயிரைத் தனது அநுக்கிரக சக்தியால் தட்டி உண்மையை உணரச்செய்து சிவசாயுஜ்யத்தை வழங்குகிறார். சிவமாம் தன்மையைப் பெற்றவருக்குக் கிரியைகள் தேவையற்றவை. முத்தியடைதல் என்பது ஓரிடத்தைவிட்டுப் பிறிதோர் இடத்தை அடைவதில்லை. ஆன்மா எங்கும் வியாபித்திருக்கும் இயல்பினதாகலின்

இடமாற்றம் பொருந்தாது. தன்னைத்தான் அறியும் நிலையே முத்திநிலை.

மலங்கள் மூன்றெனக் கூறுவாருளர். உமாபதிசிவம் ஐந்து மலங்களைக் குறிப்பிடுகின்றார். அவை மலம் (ஆணவம்), திரோதானம்; மகாமாயை, மாயை, கர்மம் என்பன. விரிவஞ்சி இவற்றின் விளக்கம் விடப்பட்டுள்ளது.

ஆத்மாவிற்கு இயல்பாகவே உள்ள ஞான சக்தியையும் கிரியாசக்தியையும் மறைப்பதே மலம் எனப்படுவது. மலம் ஒன்றே ஆயினும் அதன் சக்திகள் எண்ணிறந்தவை, பலதரப்பட்டவை. ஒவ்வொரு உயிரிலும் ஒவ்வொரு சக்தி பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றது. ஆதலின் ஓருயிர் முக்தி பெறும்போது மலத்தின் ஒரு சக்தியே அழிக்கப்படுகிறது. மலத்தின் பிற எண்ணிறந்த சக்திகள் பிற உயிர்களைப்பற்றி நிற்பதால் எல்லா உயிர்களுக்கும் ஒரே காலத்தில் முத்தி ஏற்படுவதில்லை. இச்சக்திகளையெல்லாம் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு, தனுகரணபுவனாதிகளின் மூலம் நெறிப்படுத்தும் சக்திதான் இறைவனின் 'திரோதசக்தி'. பசு ஞானமும், பாச ஞானமும் தளையை வலுப்படுத்துவன. சிவஞானம் தளையை நெகிழ்விப்பது என்று கூறுவதன் மூலம் நாம் எந்த ஞானத்தில் நாட்டம் செலுத்த வேண்டும் என்பதை உய்த்துணர வைக்கிறார் ஆசிரியர்.

கர்மம் என்பது வினைப்பயன். தருமம் என்றும் அதருமம் என்றும் கூறப்படுவது. நல்வினை தீவினைப்பயனை ஒவ்வோருயிரும் தக்க உடலும் பொறிகளும் வாய்க்கப்பெறுகின்றன. இன்ப துன்ப மோகங்களைத் துய்க்கின்றன. துய்ப்பதன் மூலம் வினைப்பயன் தேய்கிறது. உயிர் ஞானவிளக்கம் பெறுகிறது. இறுதியில் சிவமாம் தன்மையைப் பெறுகிறது.

இன்னோரன்ன சித்தாந்தக் கருத்துக்கள் ஆகம மேற்கோள், யுக்தி ஆகியவற்றால் இந் நூலில் ஆசிரியரால் தெளிவுற நிலை நிறுத்தப்படுகின்றன.

திருவிடைமருதூர் மூகாம்பிகையும், மேருச் சக்கரமும்



9-10-1972 அன்று திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், கல்லக்குறிச்சி திரு. கலியுகவரத ராஜப் பெருமாள் கோயிலின் சித்தவைத்திய இலவச மருத்துவமனையைப், போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு. உயர்திரு. எஸ். இராமச்சந்திரன் பி. இ. (ஆனர்ஸ்) அவர்கள் தலைமையில், அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு. உயர்திரு. மு. கண்ணப்பர் அவர்கள் திறந்து வைத்தார்கள். கோவைத் துணையாணையர் திரு. எஸ். சூரியராஜ். B.A.,B.L., அவர்களும் திருச்சி உதவியாணையர் திரு. பெ. புலியூருடையான் அவர்களும் உடன் உள்ளனர்.



திருப்பெருந்துறைக் கோயிலில், தமிழக ஆளுநர் மேதகு திரு. கே. கே. ஷா அவர்கள் உரை நிகழ்த்துதல். உடன் இருப்பவர் திரு. சா, கணேசன் அவர்கள், M.L.C

தமிழக ஆளுநர் மேதகு திரு. கே. கே. ஷா அவர்கள் திருபபெருந்துறை ஆத்துமநாத சுவாமி கோயிலுக்கு வருகை தந்தபோது, காரைக்குடி திரு சா. கணேசன் M.L.C. அவர்கள், அக் கோயிலின் திருப்பணி பற்றியும், சிற்பச் சிறப்புகள் பற்றியும், ஆளுநர் அவர்களுக்கு விளக்கிக் கூறுதல்.

தமிழக முதல்வர்-தமிழவேள்

மாண்புமிகு

திரு. டாக்டர் கலைஞர் அவர்கள்

நிகழ்த்திய

வெள்ளிவிழாப் பேருரை

[தருமையாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானம் திருவருள் திரு. கயிலைசுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நிறுவிய, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளி விழா, 26 ஆவது குருமகா சந்நிதானம் திருவருள் திரு. சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின்படி, அண்மையிற் சிறப்புறக் கொண்டாடப் பெற்றபோது, நமது தமிழக முதல்வர்—தமிழவேள்—மாண்புமிகு திரு. டாக்டர் கலைஞர் அவர்கள், வெள்ளிவிழாச் சிறப்புமலரை வெளியிட்டு நிகழ்த்திய வெள்ளிவிழாப் பேருரை, இங்குப் பெரிதும் போற்றி வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்]

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களே! தருமபுரம் ஆதீனகர்த்தர் அவர்களே! அறநிலைய அமைச்சர் அருமை நண்பர் கண்ணப்பன் அவர்களே! சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே! பெரியோர்களே! ஆசிரியப் பெருமக்களே! மாணவ - மாணவிகளே! இன்று இங்கே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவில் கலந்து கொள்வதில் உண்மையிலேயே பெருமை, ஆம் - மகிழ்ச்சியும் அடைகிறேன். ஆதீனகர்த்தர் அவர்கள் நான் இங்கே பலநாள் கழித்து வந்ததைக் குறிப்பிட்டு, இங்கே வர ஐயப்பாடு கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். படாதிபதிகள் அழைப்பினை ஏற்பதில் உள்ள ஐயப்பாட்டைவிட, மடாதிபதிகள் அழைப்பை ஏற்பதில் உள்ள ஐயப்பாடு குறைவானதுதான்.

இங்கே உரையாற்றிய ஆதீனகர்த்தர் அவர்கள், நான் ஆதீனக்குடிமகன் என்றும், என் தந்தையார் ஆதீனத்துக்குக் கட்டுப்பட்ட திருக்குவளைக் கோயில் பணிகளில் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் குறிப்பிட்டார்கள். அக்காலத்தில் அக்கோயிலில் நவக்கிரகங்களுக்கு மண்டபம் ஒன்றுகட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். அவ்வூரில் உள்ள நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் ஒரே திசை நோக்கியே அமைக்கப்பட்டிருக்கும். கும்பாபிஷேகங்களில் சுவாமி புறப்பாட்டுவந்து தட்டிசுற்றி

(திருஷ்டிசுற்றி) செய்வதற்கு முற்பட்ட நேரத்தில், நவக்கிரகங்களுக்குளனப் பாடல்கள் இல்லை என்ற பேச்சு வந்தது. உடனே அங்கிருந்த என்தந்தையார் "ஞாயிறு திங்கள் செவ்வாய், புதன் வியாழன் வெள்ளி, சனி பாம்பிரண்டு என்ற நவகோள்களும் நல்லன செய்திடும், வழிபட நலமாக முடிந்திடுமே" என்ற கருத்தமைத்து ஒரு பாடல் இயற்றிப் பாடினுர். தட்டி சுற்றி செய்து முடிந்தது.

இதேபோல உடனுக்குடன் கவிதை புனைந்து பாடும் அவருடைய ஆற்றலுக்குப் பல சான்றுகள் கூறமுடியும். அத்துடன் நகைச்சுவையாகக் கவிபாடுவதிலும் அவர் வன்மை பெற்றிருந்தார். இசைஞானம் நிரம்பப்பெற்றிருந்த அவர் விவசாயத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். திருக்குவளையில் எங்கள் வீட்டுக்கு அண்மையில் உள்ள நிலத்தில் என் தந்தை உழவுசெய்ய, என் தாய் நடவுநட விவசாயம் நடைபெற்ற நாட்கள் பசுமையாகவே என் நினைவில் நிற்கின்றன.

எனவே, என்னேடு கவிஞர்கள் யாரேனும் போட்டிக்கு வந்தால், கவிஞன் மகன் என்ற முறையில் எதிர்நிற்பேன். விவசாயிகள் போட்டியிட்டால், ஒரு விவசாயியின் மகன் என்ற முறையில் அவர்களைச்சந்திப்பேன். இசைவாணர்கள் போட்டிக்குவந்தால் நேரடியாக முடியாவிட்டாலும் என் தந்தையார் பெயரைச்சொல்லித் தப்பித்துக்கொள்வேன்.

தமிழும், தமிழ்க் கவிதைகளும் எங்கெங்கே பாராட்டப்படுகிறதோ, எங்கெங்கே பரப்பப்படுகிறதோ, அது சைவ மடமாக இருந்தாலும் சரி, சைவ, வைணவ, பௌத்த ஆலயங்களாக இருந்தாலும் சரி, சுயமரியாதைக் கழகமாயிருந்தாலும் சரி, அண்ணுவின்பெயரால் தழைத்தாலும் சரி, தமிழ் வளர்க்கப்படுமாளுல் அதனை என் இடமாகக்கொள்வேன். அங்கே செல்லத் தயக்கமே காட்டமாட்டேன். அந்த அடிப்படையில்தான் கல்லூரி வைத்துத் தமிழ் வளர்க்கும் இங்கே வந்துள்ளேன்.

தருமை ஆதீனகர்த்தர் அவர்கள் குளிர்ந்த தமிழில் எல்லாவற்றிற்கும் மேற்பட்ட சக்தி ஒன்று இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறேம். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகவே இருந்து வந்திருக்கிறது.

இங்கே பேசிய குன்றக்குடி, தருமை ஆதீனகர்த்தர்கள் தமிழர்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில், தமிழ் மக்களிடையே ஒற்றுமையை வளர்த்து, ஒற்றுமையின்மையைப்போக்க வேண்டுமென்பதினையும் வெளியிட்டார்கள். ஒவ்வோர் இனத்திற்கும் ஒரு சிறப்புண்டு. ஒற்றுமையின்மையே தமிழரினத்தின் சிறப்பு அடையாளமாக இருந்து வருகிறது. இவர்கள் இந்தச் சிறப்பை வேண்டாம் என்கிறர்களே! இது எனக்குப் புரியவில்லை. ஒற்றுமை உருவாகவேண்டுமென்பதிலே இரண்டு கருத்து இருக்கமுடியாது.

ஒருவர் என்னைப்பார்த்து "தமிழ் வேண்டுமா? தனித்தமிழன் வேண்டுமா" என்று கேட்டால், "தமிழ்தான் வேண்டும்" என்பேன், ஏனெனில் கோடானுகோடி தமிழர்களை உருவாக்கும் நிலை தமிழ்த்தாய்க்கு முடியும்.

இதற்குமுன் இருந்த ஆதீனகர்த்தரைப் பற்றி இங்கே கசிவோடு குறிப்பிட்டார்கள். பொன்வைத்த இடத்தில் பூவாவது வைக்க வேண்டுமென்பது பழமொழி. ஒருவர் இடத்தை இன்னெருவர் நிரப்ப முடியாவிடில் பலராக இணைந்து, பிறர் துணையோடாவது அதனை நிறைவித்தே ஆகவேண்டும். எரிந்துகொண்டிருந்த மின்விளக்குகள் திடீரென இங்கே அணைந்துபோனதை இப்போது கண்டீர்கள். உடனே சோர்ந்து உட்கார்ந்து விடவில்லை. இந்த பெட்ரோமாக்ஸ் விளக்குகளை ஏற்றி வைத்துக்கொண்டு நிகழ்ச்சிகளை நடத்துகின்றேம். கரெண்டின்மூலம் மின்சார விளக்குகள் எரியும். அதேபோல மின்விளக்காக இருந்தவர் எங்கள் அண்ணு. மின்சார விளக்கு இல்லாதபோது ஏற்றப்பட்ட பெட்ரோமாக்ஸ் விளக்குத்தான் நான். பெட்ரோமாக்ஸ் விளக்குக்கும் ஒளிதரும் தன்மை உண்டு. ஆனல் அதற்கு அடிக்கடி காற்று அடிக்கவேண்டும். அந்தக்காற்ருக நீங்கள் இருந்தால்தான் நான் ஒளி பெற முடியும்.

அந்த ஒளியின் ஒரு இடமாகத் தருமபுர ஆதீனம் இருக்கிறது. ஆகவேதான் இங்கு வந்தேன். தமிழ்ச்சுவை உண்டேன்.

இங்கே பயிலும் மாணவர்களது கடமை கண்ணியம்-கட்டுப்பாடு பற்றி ஆதீனகர்த்தர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இத்தகு நன்

நெறியை எல்லாமாணவர்களும் போற்றி வாழ்ந் தால் தமிழ்ச் சமுதாயம் உலகத்திற்கே வழி காட்டியாகத் திகழமுடியும். உங்கள் வாயிலாக மாணவர் சமுதாயத்திற்கு நான் குறிப்பிட விரும்புவது இதுவே.

இக்கல்லூரியில் பயின்று நாடறிய உயர்ந் தவர்களாக ஏழுஅல்லது எட்டுப்பேரைக் குறிப் பிட்டார்கள். இத்தொகை நீண்டு கொண்டே இருக்கவேண்டும். இக்கல்லூரி தோன்றியிருக் காவிட்டால் தமிழால் உணர்ச்சியூட்டி வரும் குன்றக்குடி அடிகளார் அவர்கள் மேலவையி லும், மேடைகளிலும் இந்த அளவுக்குச் சிறப் பாக உருவாகியிருக்க மாட்டார்.

இங்கே இருக்கும் ஆதீனகர்த்தர் அவர்கள் சென்னையில் இருக்கும்போது அவர்களை அடிக் கடி சந்திக்கும் வாய்ப்புக்களை நான்பெற்றிருந்த துண்டு. தற்போது இங்கேயே இருந்து தொண் டாற்ற வேண்டிய கடமை அவர்களுக்கு ஏற் பட்டிருக்கிறது. உலகத்தை நன்கு அறிந்த வர்கள். ஆதலால் காலத்திற்கேற்ற தொண்டு களில் அவர்கள் நாட்டம் செலுத்துவார்கள்.

வெள்ளிவிழா நினைவாக ரூபாய் 25ஆயிரம் அறக்கட்டளை நிறுவி, அதனையும் என்னை விட்டே உங்களுக்கு அறிவிக்கச்சொல்லியுள் ளார்கள். மகிழ்ச்சியோடு இதனை அறிவிக் கிறேன். 25 ஆவது ஆண்டு என்பதால் 25 ஆயிரம் வைத்துள்ளார்கள். இது பொன்விழா வாக இருந்தால் 50 ஆயிரம் வைத்திருப்பார் களே என எண்ணுகின்றேன்.

தமிழ்க்கல்வி சிறக்கவும், தமிழ் மாணுக்கர் மேன்மை பெறவும் வாழ்த்தி, இத்தகு வாய்ப் பினைத் தந்த குன்றக்குடி அடிகளார் அவர் களுக்கும், ஆதீனகர்த்தர் அவர்களுக்கும் மீண் டும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களின் சார்பில், ஆதீனத் தம்பிரான் சுவாமிகளில் ஒருவர், ஆளுநர் மேதகு திரு. கே. கே. ஷா அவர் களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்து, திருப்பெருந்துறைக் கோயி லில் வரவேற்றல்.

சிவபிரானின் திருவடையாளம்

இராவ்சாகிப் திரு நல். முருகேச முதலியார், பி.ஏ.,

"குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்! மனம் என்கொல் புகாததே?"

ஆராய்ச்சியறிஞர்கள் என்பவர்களில் ஒரு சிலர் "இலிங்க வழிபாடானது ஆண்பெண் பாலுறுப்பு (சிசினம்) பற்றிய தொடர்புடைய தென்றும், அஃது ஆரியர்களின் காலத்திற்கு முன்பிருந்தே நிகழ்ந்து வருவதென்றும், இலிங் கத்தைப் பற்றி இலிங்கபுராணம் முதலியவற்றிற் காணப்படும் பௌராணிக தத்துவ விளக்கங் களெல்லாம், சைவ சமயமும் சிசினவழிபாடும் ஒருங்கு கலந்துவிட்ட அருவருப்பினை மறைப் பதற்காகப் பிற்காலத்திற் செப்பனிடப் பெற் றவைகளேயாம்" என்றும், அவ்வப்போது குறிப்பிடுவதுண்டு.

வரலாற்றுக்கு முந்திய காலத்தைப் பொறுத்தவரையில் சிந்துவெளிப் புதைபொரு ளாராய்ச்சிகளாற் கண்டுபிடிக்கப் பெற்ற குவி கற்கள் சிசினத்தைக் குறிப்பன என்பதற்குப் போதுமான சான்று ஏதும் இல்லை. எகிப்து முதலிய நாடுகளில் அக்காலத்தில் சிசின வழி பாடு நிகழ்ந்து வந்த செய்தி குறிப்பால் அறியக் கிடக்கின்ற தாயினும், மிகச் சிறந்துயர்ந்த நாகரிகம் அடைந்திருந்த ஹாரப்பா நில மக்கள் சிசின வழிபாட்டுச் சடங்கு முறைகளைக் கைக் கொண்டிருந்தனர் என்று எண்ணுதற்கு இட னில்லை. மொகஞ்சதாரோவில் யோகநிலையில் அமர்ந்திருப்பவரும், பசு முதலிய உயிரினங் களாற் சூழப்பட்டிருப்பவரும் ஆகிய கடவுள் 'பசுபதி' என வழிபடப் பெற்றமை தெளிவாகத் தெரிகின்றது. சிசின வழிபாட்டை வலியுறுத் தும் வகையில் அறிஞர்கள் சிலர் காட்டி யுள்ளதும், இருக்கு வேதத்தில் வருவதும் ஆகிய 'சிசினதேவ' என்னும் தொடரினை முன் பெல்லாம் அறிஞர்கள் பெரிதுபடுத்திக் காட்டி வந்தனர். ஆனால் இப்பொழுது, அக் குறி யிடானது சிசின வழிபாட்டினரைக் குறிக்க வில்லை என அறிஞர்கள் ஓரளவு தெளிவு பெற் றுள்ளனர். முதன் முதலில் கெல்ட்னர் என்ப வர்தான் 'சிசினதேவ' என்பதனைப் பாலுறுப்பு வழிபாட்டினர் என்னும் கருத்தில் மொழி பெயர்த்தார். ஆனால் கிரிஃபெக்ஸ். ரோத் முதலியவர்கள், சாயனர் துர்க்காசாரியர் என் பவர்களின் பேருரைகளை ஆராய்ந்து பின்பற்றி, 'வேதச் சடங்குகள் நிகழும் இடங்களை அணுகு தற்குத் தகுதியற்றவராய்த் தூய்மையற்றுக் களித்து மயங்கும் வெறியாட் டியல்பினராய இழிமக்களை, அத்தொடர் குறிப்பிடுகின்றிலது' என உணர்ந்து கொண்டனர்.

இருக்கு வேதத்தினை ஆழ்ந்தாராய்ந்து பயின்றுணர்ந்த பேரறிஞர்களான திரு அரவிந் தர், பேராசிரியர் பி. வி. காணே முதலியவர் களும் இங்ஙனமே கருதுகின்றனர். 'சிசின தேவ' என்னும் இருக்கு வேதத் தொடரானது, பாலுறுப்பைக் கடவுளாகக் கொண்டு வழி படும் மக்களைக் குறித்தல் இயலாது எனப் பேராசிரியர் காணே அவர்கள், 'தரும சாத்தி ரங்களின் வரலாறு' என்னும் தமது நூலின் இரண்டாம் தொகுதியில், இரண்டாவது பிரி வின் 708-ஆம் பக்கத்தில் விளக்கிக் கூறு கின்றார்.

சிவலிங்க வழிபாட்டைப் பற்றிய புராணங் கள் சிலவற்றிற் கூறப்படும் கதைகளைப் பேரா சிரியர் விரிவாக மேற்கோள் காட்டியுள்ளார். எச். எச். வில்சன் என்பவர், தமது விஷ்ணு புராண மொழி பெயர்ப்பின் முன்னுரையில், "இந்தியாவில் நிகழும் இவ்வழிபாட்டின் தொடக்கம் எங்ஙனம் இருந்திருந்த போதிலும், அதன் அடிப்படையான கருத்துக்கள், ஐரோப் பிய நூலாசிரியர்களின் தூய்மையற்ற இழிந்த

கற்பனைகளின்படி, சைவ புராணங்களில் அமைந்திருத்தலை யாரும் காண்டல் அரிது'' என நன்கினிது முடித்துக் கூறுகின்றார்,

கர்னல் வான்ஸ் கென்னடி என்பவர்' ''இந்துக்களின் பழைய புராணக் கதைகள்'' என்னும் தமது நூலில், ''இலிங்கத்திற்கும் பாலுறுப்புக்கும் யாதோர் இயைபுமில்லை. எகிப்திலும் இந்தியாவிலும் இவ்வழிபாடு நிகழ்ந்தமைக்குரிய காரணங்கள் முதலில் ஒரேவகையாக அமைந்திருக்கக் கூடுமாயினும், கடவுட்பொருளைச் சுட்டிக் காட்டுதற்கெனவும் வழிபடுதற்கெனவும், எகிப்தியர்களாலும் இந்தியர்களாலும் கொள்ளப்பட்ட அடையாளப் பொருள்கள் தம்மிற் பெரிதும் வேறுபட்டனவாகும். இலிங்கமானது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவதில்லை. களிமயக்கம் வெறியாட்டம் என்பனவற்றால், அவ்வழிபாடு நிகழ்த்தப்படுவதன்று'' எனக் கூறுகின்றார்.

இலிங்க வழிபாடு பற்றிய மகாபாரதக் கதைகளைக் குறித்து, இ.வாஷ்பர்ட்டன் ஹாப்கின்ஸ் என்பவர், தம்முடைய 'இதிகாச புராணக் கதைகள்' என்னும் நூலில், 'துரோணபர்வத்தில் காணப்படும் நீண்ட பகுதியானது பிற்காலத்திற் சேர்க்கப்பட்ட இடைச் செருகலேயாம்' எனக் கூறுகின்றார். அதனால் இப்பகுதிகள் சான்றாகக் கொள்ளத்தக்கன அல்ல.

தூயதும் சிறந்ததும் ஆகிய இலிங்கபுராணம் முதலியவற்றிலும்கூட, அர்ச்சய மேத்ரா என்னும் தொடர் வருகிறதென்றும், அது சிசின வழிபாட்டுக் கருத்தை வலியுறுத்துகின்றதென்றும், ஒருசிலர் கட்டுரைக்கின்றனர். பிற தெய்வங்களின் அங்கபூசை மந்திரங்களிலும் கூட, ஏனைய அங்கங்களுடன் மேத்ரா அங்கம் குறிப்பிடப் பெறுகின்றது. வழிபடு தெய்வத்தின் ஒவ்வோர் உறுப்பினையும், தெய்வநலம் சிறந்ததாகவே வழிபடுவோர் தம் கருத்திற் கொள்ளுதலால், இதன்கண் ஏதும் இழிவுக் குறிப்பு இருப்பதாகக் கூறுதல் அமையாது.

இனி நாணயங்கள் சிலவற்றில் இலிங்கம் பொறிக்கப்பட்டுள்ள தொல்பொருட் சான்று பற்றி ஆராயுங்கால், வெளிநாட்டினின்று போந்த படையெடுப்பாளர்களாகிய குஷானர்கள் சிவபிரானைத் தம் கடவுளருள் ஒருவராக ஏற்றுக் கொண்டனர் என்பது யாவரும் அறிந்ததொன்று. நடு ஆசியாவில் நிலவி வந்த வழிபாட்டு முறையினைப் பின்பற்றி, இலிங்கமாகிய உருளை வடிவினைச் சிசினத்தோடு இயைபுடையதொன்றாக, அவர்கள் ஒருகால் பிறழ உணர்ந்துகொண்டிருக்கக்கூடும். இலிங்கத்தின் பக்கத்தில் காற்சட்டை யணிந்துள்ள நிலையில், மதுரா நகர்ப் பொருட்காட்சிச் சாலையிலுள்ளனவெனப் பேராசிரியர் குறிப்பிடும் வடிவங்கள், இக்கருத்துக்குச் சான்று பகரும்.

148704

ஏ. எல். பாஷாம் என்பவர், சாகர்—குஷானர்களின் படையெடுப்புக்களின் போதுதான், காற்சட்டையானது இந்தியாவிற் கொணர்ந்து அறிமுகப் படுத்தப்பட்டதென்றும், அரச வகுப்பினரினிடையே குப்தர்காலம் வரையில் அது வழக்கத்தில் இருந்து வந்தது என்றும் கூறுகின்றார். எனவே. அயல்நாட்டுப் படையெடுப்பாளர்களாலேயே, இப் பாலுறுப்புக் கூறு பிற்றை நாளிற் புகுத்தப் பெற்றதாதல் வேண்டும். அஃது ஆரியர்க்கு முற்பட்ட, சிந்து சமவெளியினர்க்குரிய வழிபாட்டு முறையின் ஓர் எச்சப் பகுதியன்று. உருளைவடிவக் கல்லாலாகிய இலிங்கத்திற்கும் சிசினத்திற்கும் இடையேயுள்ள வடிவ வொப்புமையாலும், வடமொழியில் 'லிங்கம்' என்னும் சொல் ஆண்குறிக்கும் ஒரு பெயராக அமைந்து கிடத்தலாலும், இப்பெருங் குழப்பமும் மயக்கமும் விளைந்திருக்கக் கூடும். சிவபிரான் அலிங்கம் எனவும், ஸ்திரலிங்கம் எனவும் கூறப்படுதல் கொண்டு, இவ்வுண்மை தெளியப்படும். வேறு வகையான விளக்கங்கள் கூற முற்படுதல் பெரிதும் பிழை பாடுடைத்தே யாகும்.

குடிமல்லம் சிலைபற்றித் திரு டி. ஏ. கோபிநாதராவ் அவர்கள் கூறுவது பொருந்துவதன்று. சிவபிரானைப் பரசுராமன் போன்ற நிலையில் அமைப்பதற்குச் சமய நூல்களிலோ சிற்ப நூல்களிலோ ஆதாரம் இல்லை. திரு சி. வி. நாராயண ஐயர் அவர்கள், ''தென்னிந்தியாவிற் சைவத்தின் தொடக்கமும் முதல்நிலை வரலாறும்' என்னும் நூலில், சிவலிங்கம் பற்றிய பகுதியில், இதுபற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இந்தியாவிற் சில இடங்களிற் காணப்படும் முகலிங்கங்கள், சிவபிரானின் அகோரம் தற்புருஷம் வாமதேவம் சத்தியோசாதம் ஈசானம் என்னும் முகங்களைக் குறிக்கின்றன. இதுபற்றிய விரிவான ஆராய்ச்சிக்குத் திரு எம்.

ஆர். சகாரேயின் 'இலிங்க தாரண சந்திரிகை' என்னும் நூலை (பக்கங்கள் 303-324) யாவரும் ஆராய்ந்து காணலாம். அதன்கண் அவர், "சிவலிங்க வழிபாடானது, அதர்வண வேத சம்மிதையிற் பிரமப் பொருளைக் குறிப்பதாகப் பாடப்பெற்ற யூபஸ்தம்பம் (வேள்வித்தூண்) ஆகிய புகழ்மிகுந்த இலிங்கத்தினின்றே தோன்றியது" எனத் திரு சுவாமி விவேகானந்தர் அவர்கள் திறுவியுள்ளதனை நன்கினிது எடுத்துக் காட்டியுள்ளார்.

சர் சார்லஸ் எலியட் என்பவர் "இந்துமதமும் புத்தமதமும்" என்னும் நூலில், "இலிங்கமானது பரம்பொருளின் படைப்பாற்றலையுணர்த்தும் ஓர் அடையாளமேயாகும். இலிங்க வழிபாடு இழிந்த சடங்குகளோடு கூடியதன்று. மிகத் தூய்மையும் ஒழுக்கமும் வாய்ந்த இலிங்காயத வகுப்பினராற் கடைப்பிடிக்கப் படுதலொன்றே, இலிங்க வழிபாடானது அதன் தொடக்க நிலையிலும் கூடக் குறியியல் பற்றியதாக நிகழவில்லை" என்னும் உண்மையை வலியுறுத்துகின்றன என ஆராய்ந்து கூறியுள்ளார்.

பதினெண் புராணங்கள் எத்துணைப் பழமை யுடையனவோ, அத்துணைப் பழமையிற் சிறிதும் குறையாத தமிழ்ச் சைவமும் தமிழ் இலக்கியங்களும் பொறுத்த வரையில், இலிங்கமானது சிவபிரானின் குறியியல் நிலையில் வைத்து வழிபடப் பெறுவதென்னும் கருத்து, யாண்டும் ஒரு சிறிதேனும் குறிப்பாகவாதல் பெறப்படவில்லை. இலிங்கமானது, சிவபிரானின் அருவுருவத் திருமேனியாகவே போற்றப் படுகின்றது.

"காணாத அருவினுக்கும்,
உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாம் சிவலிங்கம்"

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. தேவார ஆசிரியர்கள் சிவபிரான் சோதி வடிவில் உலகுக்குப் பெருந்தூணாகத் தோன்றியருளினர் எனவே விதந்து வியந்து பாடியருளியிருக்கின்றனர்.

எனவே, "தற்கால இந்துக்களின் உள்ளத்திலும் கோயிற் சடங்குகளிலும், இலிங்கத்தினையும் யோனியினையும் இயைத்தெண்ணும் நிலை பொதுவாகப் பரவியிருக்கின்றது" என அறிஞர்கள் சிலர் கூறுதற்கு ஆதாரம் எதுவும் கிடையாது. அவர்கள் எதனை அங்ஙனம் குறிப்பிடுகின்றனர் என்பது தெளிவாகப் புலப்படவில்லை. இவ்வாற்றால்,' "தத்துவத் தொடர்பின்றிச் சமயங்களின் தொல்பொருளாராய்ச்சியைப் பிழையறத் திருத்தமும் செம்மையும் அமைய ஆராய்ந்தறிதல் இயலாது" என்னும் உண்மையே செவ்விதிற் றெளியப படுகின்றது.



திருவாவடுதுறைக் கோமுக்தீசுவரசுவாமிகோயிலில் நடைபெற்ற திருக்குட முழுக்கு விழாவின் போது கலந்து கொண்டு சிறப்பித்த ஆதீனகுருமகா சந்நிதானங்கள்.

சிரிக்கும் திறம்

மாட்சிமிகு திரு. எஸ். மகராஜன் அவர்கள், B.Sc., B.L.,

நீதிபதி, உயர்நீதிமன்றம், சென்னை.

பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள்ளே போய்க் கவனித்தால், ஒரு சுவையான உண்மை துலங்கும். அங்குள்ள நோயாளிகள் பலர் நம்மைப் பார்த்துப் 'பைத்தியமே' என்று அழைப்பார்கள். நாம் பைத்தியமில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், அந்தப் பைத்தியக்காரர்களோ நாம் எல்லோரும் பைத்தியம் பிடித்தவர்கள் என்று உறுதியாக நம்புகிறார்கள். அவர்களுடைய உறுதிப்பாட்டை எளிதில் அசைக்க முடியாது. எப்போது அந்த உறுதிப்பாடு தளர்கிறதோ, எப்போது அந்த நோயாளிகள் தமக்கு உள்ளத்தில் நோய் நோய் பிடித்திருக்கிறது என்று எண்ணத் தொடங்குகிறார்களோ, அப்போதுதான் அவர்களுடைய நோய் குணப்பட்டு வருகிறது என்று வைத்தியர்கள் சொல்லுவார்கள்!

தலைமயிரைப் பிய்த்துக்கொண்டும், கட்டியிருக்கும் வேட்டியைக் கிழித் தெறிந்து கொண்டுமிருக்கிற பைத்தியக்காரன், தலையலங்காரம் செய்து, சீருடையணிந்து காரண காரியத்தொடர்போடு சிந்திக்கும் வல்லமை பெற்ற நம்மைப் பார்த்து, "அட பைத்தியமே" என்று அழைக்கும்போது, நமக்குச் சிரிப்பு வருகிறது. பைத்தியம் நமக்கில்லை; அவனுக்குத் தான் என்ற தெளிவிலிருந்து வருகிறது நம்முடைய சிரிப்பு.

நாம் பைத்தியக்காரர்கள் அல்லர் என்பதை யறிந்து பெருமைப்பட வேண்டியதுதான். ஆனாலும், நம்முடைய சிந்தை நோயற்றது என்று சொல்லமுடியாது. அதற்குள்ளே எத்தனையோ திருகல்கள், கோணல்கள். பித்த மயக்கத்தால் ஒன்றை மற்றொன்றாகக் காணுகிறோம். ஆணவ மயக்கத்தால், எல்லாம் நம்முடைய செயல் என்று நாம் நம்புகிறோம்; உறுதியாகவே நம்புகிறோம். அந்த ஆஸ்பத்திரிக்குள் பார்த்தோமே, அவர்களுடைய உறுதிப்பாடு நமக்கும் இருக்கிறது. இந்த உறுதிப்பாடு எப்போது தளர்கிறதோ, நமக்கும் பித்தமயக்கம் இருக்கிறது என்று எப்போது நாம் உணரத் தொடங்குகிறோமோ, அப்போதுதான் நமக்கு நோய் குணப்பட்டு வருகிறது என்று ஞான வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

பித்தத்திலிருந்து தெளிந்தவர்கள் ஞானிகள். "எல்லாம் இறைவன் செயல்" என்பதை சுவானுபவத்தில் உணர்ந்தவர்கள் அவர்கள். ஆனால், நாம் அவர்களைப் பார்த்து, "நீங்கள் பித்தர்கள்" என்று சொல்லுகிறோம். பித்தம் இருப்பது நம்மிடத்தில்தான் என்று தெளிந்தவர்கள் ஞானிகள். அந்தத் தெளிவிலிருந்து பிறக்கிறது அவர்களது தெய்வீகச் சிரிப்பு.

மாணிக்கவாசகர் சிறந்த ஞானி; பித்த மயக்கத்திலிருந்து விடுபட்டவர்; இறைவனுடைய திருமேனியைக் கண்டு பேரானந்தம் அடைந்தவர். ஆனந்தக் களிப்பிலே அவர் தம்முடைய அனுபவங்களை உலகத்தாருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். என்ன சொன்னார்?

"இறைவன் எனக்குக் காட்சி கொடுக்கிறான்; பாறுங்கல் போன்ற என் இதயத்தைப் பிசைந்து உருக்கிவிட்டான்; 'இதைச் செய், அதைச் செய்' என்று கட்டளையிடுகிறான். அவனுக்குப் பணிசெய்வதிலே எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது" என்றெல்லாம் சொல்லி வந்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அண்டை வீட்டுக்காரர்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். அவர் வாக்குமூலத்தை அவர்கள் நம்பவில்லை. "விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் தென்படாத கடவுள் இந்த மாணிக்கவாசகனிடத்திலே வந்து வந்து பேசுகிறாராம், இவன் உள்ளத்தை உருக்கிவிட்டாராம், இவனைப் பணிகொள்ளுகிறாராம்! பேஷ்! பேஷ்! பித்தம் தலைக்கேறி விட்டது இவனுக்கு" என்று ஊரார் சிரிக்கத் தொடங்கினார்கள்.

இந்தச் சிரிப்பை நினைந்து நினைந்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர். பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே உள்ளவன் நம்மைப் பார்த்துப் பைத்தியம் என்று சொல்லிச் சிரித்தானே, அதை எப்படி நாம் அனுபவித்தோம், அதைப் போலவே நம்முடைய அசட்டுச் சிரிப்பைப் பார்த்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர்:

> அரிக்கும் பிரமற்கும்
> அல்லாத தேவர்கட்கும்
> தெரிக்கும் படித்தன்றி
> நின்றசிவம் வந்து, நம்மை
> உருக்கும், பணிகொள்ளும்,
> என்பது கேட்டு, உலகர் எல்லாம்
> சிரிக்கும் திறம் பாடித்
> தெள்ளேணம் கொட்டாமோ.

பித்தர்கள் சூழ்ந்த இவ்வுலகத்திலே, நமக்குப் பித்தம் தெளியும்படி செய்து விட்டானே அந்த அருளாளன் என்று தெரிந்ததும்,

"அடி, முழக்கு, தெள்ளேணம் கொட்டு" என்று மாணிக்கவாசகர் ஆர்ப்பரிக்கிறார். நன்றியும், பக்தியும், ஹாஸ்யமும் கலந்த பாடல் இது. அபூர்வமான பாடல். ★

சிவ பூசை

சிவயோகி திரு. மா. இரத்தினசபாபதிபிள்ளை அவர்கள்,

திருவாரூர்.

முன்னுரை:

பிரமஞதி ஐவரையும் சைவத்தில் சிவம் என்று உபசாரத்தில் வழங்குவது பற்றி சதாசிவ வழிபாட்டைச் சிவ வழிபாடென்று சிவ பூசகர் கூறுகின்றனர். உண்மை அறிந்தோர்க்கு இது விளங்கும், ஞானிகள் அகத்தே தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணமான தமது ஆத்ம லிங்கத்தை வழிபடுகின்றனர். புறத்தே சிவ பூசை செய்வோர் தம்மில் காணும் தகுதியில்லாதபடியால் பாவனையால் தமது ஆத்மாவைப் புறத்தே கொண்டு வந்து வழிபட்டு மீண்டும் ஆத்மாவில் ஐக்கியம் செய்து திருப்தி அடைகின்றனர்.

ஆகமவாதிகள் தேசத்தில் உள்ள சத்தி நிலையங்களை மாற்றுவதினுல் தேகத்தின் ஆற்றலும்மாறுகின்றது என்ற உண்மையை வெகு நாளைக்கு முன்னரே அறிந்து, பரார்த்த பூசையையும் ஆன்மார்த்த பூசையையும் வைத்துள்ளனர்.

எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்த வுரைத்து முறைசொல்லின் ஞானமாஞ்
சந்தித் திருந்த விடம் பெருங் கண்ணியை
உந்தியின் மேல் வைத்துகந் திருந்தானே — திருமந்திரம் — 1770

சத்தி சிவன் விளை யாட்டாம் உயிராகி
ஒத்த இருமாயா கூட்டத் திடையூட்டிச்
சுத்தம தாகும் துரியம் பிறிவித்துச்
சித்தம் புகுந்து சிவ மகமாக்குமே — ஷை — 1772

சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமுமாஞ் சிவன் சத்தியுமாகுஞ்
சத்தி சிவ மன்றித் தாபரம் வேறில்லை
சத்திதான் என்றுஞ் சமைந்துரு வாகுமே — ஷை — 1772

அமாத்திரா பிரணவம்:

தேகத்தில் இறங்கி வந்துள்ள சத்திக்குத் தேகம் அல்லாத ஒரு நிலையம் உண்டு. அது சுத்த நிலையென்ற சிவ தத்துவம் என்ற பெயர் பெறும். தேகத்தில் வந்துள்ள சத்தி அசுத்த மாயையாகும். அது தேகம் பற்றினபோது ஆன்மதத்துவம் என்றும், தேகத்திற்கு அறிவை அறிய உதவுவதால் வித்தியா தத்துவம் என்றும் பெயர் பெறும்— சிவம் ஒன்றே ஜகத் காரணம் என்ற போது அவனினின்றும் பிரியாத ஆற்றல் என்ற பெயுரையுடைய பராசத்தியும் ஒன்றேதான். அந்த ஒரே சத்தி ஜீவர்களின் அறிவு பின்னமான நாஞரூப, நாம, பேதங்களைப் பற்றிய போது நாஞ வகையாகப் பெயரும் பெறுகின்றது. சீவர்களின் அறிவு சொற்களாலும்; அவைகளினுல் விளங்கும் கருத்தினுலும், ஒருவருக்கொருவர் மாறுபட்டு விளங்குகின்றனர். அதே போல பல உருவங்களைத் தங்கள் கண்களினுல் சாயையாகப் பெற்றுப் பதித்து வைத்துள்ளபடியால் காட்சிக்குரிய இவ்வுலகைக் கருத்தில் இருத்திக் கொண்டு மாறுபட்டு விளங்குகின்றனர். இந்த இருநிலையையும் கொண்டு ஆராய்ந்து முடிவுக்கு வந்த ஞானிகள் பேதமில்லாத ஒரு உலகம் உண்டென்பதைக் கண்டு, அதைஅடையத் தங்கள் சீவித காலத்தைச் செலவிட்டுப் பயனும், கண்டனர். உலகில் உள்ள சொல்லோசை முடிந்த விடத்தைப் பரவாக்கு என்றும், அது ஒரு தேஜோ மண்டலம் என்பதை அறிந்து அதைப் பரவிந்து என்றும் பெயர் வைத்தனர்.

எல்லாச் சொற்களும் முடிந்த ஓசையைத்தான் பிரணவவோசை என்று குறிப்பிட்டனர். பிரணவம் அங்காத்தலையும் ஓசை நிலைபெறுவதையும் ஓசை முடிவுறுவதையும் குறிப்பால் உணர்த்தப்பட்ட ஒரு எழுத்தேயாகும். பிரணவத்தின் ஒலியினால் சிரசில் அமையும் அர்த்த மாத்திரையே ஞானிகளின் லட்சியமாயிற்று. அதற்கு அமாத்திரா பிரணவம் என்று வேதங்கள் கூறும்.

பட்டினத்தடிகளைத் தமிழ்நாடு நன்கறியும். அவர் கூறிய சிவபூசையைக் கொண்டு விளக்கம் கூறுகிறேன்.

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புஷ்பம் இறையாத தீர்த்தம் இனிது முடிந்து
கட்டாத லிங்கம் கருதாத நெஞ்சம் கருத்தினுள்ளே
முட்டாத பூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே.

1. வெட்டாத சக்கரம்

புறத்தே பூசை செய்பவர்கள், ஒரு யந்திரம் அல்லது ஒரு பிரதிமை, அல்லது ஒரு குறிக்கேற்ற லிங்கம் வைத்துப் புறத்தே பூசை செய்வர். இங்குக் கூறப்பட்டது யாராலும் ஒரு தகட்டில் பொறிக்கப்படாத சக்கரம். இது சீவர்களின் சிரசிலுள்ள சகஸ்ரதளமாகும். இந்த சகஸ்ரதளத்தில் சீவன் பெறவேண்டிய சக்திகள் பொறிக்காது. சூக்குமமாய்ப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த சக்கரத்தை அறிந்து வழிபட்டவர்க்கு பரவாக்கு உதித்து பரவிந்து உதித்துவிடும். அதுவே சிவத்தையடையச் செய்யும் சத்தி வழிபாடாகும்.

பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி,
புராந்தகி, த்ரியம்பகி, எழில்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி, மனாதீத நாயகி, குணாதீத
நாதாந்த சத்தி, என்றுன்
நாமமே உச்சரித்திடும் அடியவர், நாமமே
நானுச்சரிக்க வசமோ?
ஆரணி சடைக் கடவுள் ஆரணி எனப்புகழ்
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே,
வாரணியும் இருகொங்கை மாதர் மகிழ் கங்கை புகழ்
வளமருவு தேவை யரசே,
வரைராசனுக் கிருகண்மணியாய் உதித்தமலை
வளர் காதலிப் பெண்ணுமையே.

—தாயுமானவர் பாடல்.

அகண்ட சத்தியைத் தேகத்தில் உள்ள அநாகத சக்கரத்தில் வழிபடில் தேகம் அழிந்துவிடும். அதனாலேதான் உருவ வழிபாட்டிற்கு அதை யிடமாக்கினர். சிரசேதான் அகண்ட வழிபாட்டிற்கு உரிய இடமாகும். இது ஞானிகளின் பூசைத்தானமாகும்.

குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்
அருவுரு வாவது அந்த அருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்
உருவரு வாவதும் உமையவள் தானே

—திருமந்திரம் 2762.

திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவே
உருவரு வாவது முற்றுணர்ந் தோர்க்கு
அருள்வழி யாவதும் அவ்வழி தானே

மேற்படி—2763

நீடும் சிரசிடைப் பன்னிரண் டங்குலம்
ஓடும் உயிரெழுந்து தோங்கி யுதித்திட
நாடுமின் நாதாந்த நம் பெருமான் உகந்
தாடும் இடந்திரு வம்பலந் தானே — மேற்படி — 276

2. பேசாதமந்திரம்

பேசாத மந்திரம் என்பது பிரணவத்திற்குப் பெயர். அமாத்திரைப் பிரணவம் சிரசில் விளங்குவது. இதை ஸ்பந்தம் நாதம், உணர்வு என்ற பேரால் வழங்குவர். பிரணவசித்தி பெற்ற ஒரு குருவால்தான் சீடனுக்கு இதை உணர்த்த முடியும். இது யாதொரு புறக்கிரியையுமற்றது. தகுதியுள்ள சீடரிடம் மறைந்து கிடந்த ஒரு சத்தியைச் சீடனுக்குப் புலப்படுத்தி அதன் வழியாகச் சீடனைச் சிவ பூசை செய்ய அநுக்கிரகம் செய்து தயார் படுத்திவிடலாகும். இதற்குச் சத்தியோ நிருவாண தீட்சை என்று பெயர். குருவின் சுதந்திர ஆற்றலால் நினைத்தவுடன் சீடனுக்குச் செய்யும் உபகாரமாகும். இதில் மந்திரம் குண்டம், மண்டலம், யக்ஞம் முதலிய புறக்கிரியை யாதும் இல்லை என்பதை அறியவும்.

"சத்தியோ நிருவாணம் சஞ்சிதமாம் வினைகள்
தம்முடனே பிராரத்த வினைகள் தனுவாதி
அத்தனையும் ஒழித்தருளி அகண்டா காரதையாய்,
அளவிறந்த ஆனந்த மாகிக் சுத்த
சித்துருவாய், நித்தமாய்ச் சித்தாகிப் பெரிதாய்
திகழும் ஒளியாய் மனத்தாற் சிந்திக் கொணு
நித்தனுடன் வேறறவே நிறுத்த லென்றே
நிகழ்த்தியிடுஞ் சித்தாந்த முத்தியிந்த நிலையே" — சிவ நெறிப் பிரகாசம்

மந்திரங்கள் மருந்துகள் ஓர் தொழில்களின்றி
வாய்த்திடவே கருட பாவனை மனத்தினலே
சிந்த விடமானது தான் நீர்க்கும் பார்வைச்
செயலெனவே சிவஞானத் தேசிகன் தான்
பந்தமறுத்து ஆணவத்தின் பாசம் நீங்கப்
பார்த்தருளிப் பரிசத்தால் மாயையறப் பார்த்தே
முந்து வினைகலைகள் சோதனையாற் போக
முனைக்கும் வினையொழித்தற்கு மூல மனுமொழிவான் — சிவ நெறிப் பிரகாசம்

குறிப்பு : — மூலமனு—சொல்லாமற் சொல்லும் பிரணவ உபதேசம். இதை உணர்த்துவதால் சீடனின் கீழியல்புகெடும். இத்ற்குச் சாம்பவ தீட்சை என்று பெயர்— சம்புவினிடம் சீடனைச் சேர்க்கும் உபாயமாகும். இதுவே வேதாந்தம் சித்தாந்தம் கூறும் முடிவான ஞான நிலையை அறிய உணர்த்தும் முறையாகும்.

தூலப் பிரணவஞ் சொருபானந்தப் பேருரை
பாலித்த சூக்கும மேலைச் சொருபப் பெண்
ஆலித்த முத்திரை யாங்கதிற் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே — திருமந்திரம் — 2675

இதன் ஆற்றலால் பரவாக்கு உதித்துவிடும். இது தொடர்ந்து சிரசில் விளங்கும் சீவனின் அறிவு நிலையாகும். இதை அறிந்தவர் அந்நிலையிலே நிலைபெற்றுவிடுவதால் அவர்களை மௌனி என்றே அழைத்தனர். அதனல் "சும்மா" இருப்பவராயினர்.

பிறியாத தண்ணருட் சிவஞானியாய் வந்து,
பேசரிய வாசியாலே
பேரின்ப வுண்மையை யளித்தனை; யென் மனதறப்
பேரம்பலக் கடவுளாய்

அறிவா யிருந்திடும் நாதவொலி காட்டியே
அமிர்தப் பிரவாக சித்தி
அருளினை; யலாது திருவம் பலமுமாகியென
ஆண்டனை; பின்எய்தி நெறியாய்க்
குறிதா னளித்தனை; நன்மரவுரி கொளந்தணக்
கோலமாய் அசபாநலங்
கூறினபின் மௌனியாய்ச் சும்மா இருக்கநெறி
கூட்டினை; யெலாமிருக்கச்
சிறியேன் மயங்கிமிக வறிவின்மை யாவனோ?
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. —தாயுமானவர் பாடல்

ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறியோமே —திருமந்திரம் 2158

குறிப்பு—ஊமையெழுத்து அர்த்த மாத்திரைப் பிரணவமாகும். அதை அறிந்தவர்க்கு ஞானேந்திரியம் ஐந்தும் ஆமையின் உறுப்புப் போல உள்ளுக்கு இழுக்கப்பட்டு விடும், அது ஒளி மயமானது. அகங்கார மற்றவர்க்கு விளங்குவது. அதுவே பிரணவமாகும்.

3. வேறொருவர்க்கு எட்டாத புஷ்பம்

வேறொருவர்க் கெட்டாத புஷ்பம் என்பதனுல், தனக்கு மாத்திரம் எட்டக் கூடிய புஷ்பம் என்ற குறிப்பு. இது புறத்தே பூசையில் உபயோகிக்கப்படும் கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ; நீர்ப்பூ அல்ல. உபாசிப்பவனது கண்மலர்களே தான்.

எண்ணு யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணுர் அமுதினைக் கண்டறிவா ரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினுற்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே. —திருமந்திரம் 603

கண் நாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம் பொருள் ஒன்றுண்டு
அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளி காட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே —மேற்படி 599

குரு காட்டும் நெறியில் நின்று தனது நேத்திரங்களின் ஒளியை ஒன்றுவித்து அவ்வொளியில் நிற்பதே சைவம் கண்ட இராசவித்தையாகும். அண்மையில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகளின் திருவாக்கையும் அறிக.

சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற் காட்டா நேராக— நேத்திரங்கள்
சிற்றம் பலவன் திருவருட்சீர் வண்ணமென்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து.

இதுவே விசேட பூசைக்குரிய ஆலயத்தின் கொடி மரத்தின் நிலையாகும்,

முச்சுடர் வட்டமே சக்கரமானது
மூக்கு நுனியிற் சுழுமுனையாம்

அச்சுடர் வட்டத்திருந்தவனே குரு
ஆனந்த நந்தியாம் ஞானப் பெண்ணே!
நந்தியிருந்த வன்னி வட்டமதில் நாட்டம்
புருவ மத்தியான திட்டம்
சந்திரனுங்கதிர் சூரியனும் அந்தத்
தலத்தினில் நின்றனர் ஞானப் பெண்ணே!
நாதவிந்தல்லவோ நால் யோனி தசநாத
விந்தல்லவோ எழுதோற்றம்
நாதவிந்தால் உடலும் உயிரும் பரம்
நந்தியைப் போற்றடி ஞானப் பெண்ணே!
விந்து இருந்த தலந்தனிலே குரு நந்தி
யிருந்தார் கொலுவாகி
சிந்தை தெளிந்து மகாரம் வைத்தால்
அந்தச் சீமானைக் காணலாம் ஞானப் பெண்ணே!
சீமான் கிட்ட அடுத்தக்கால் மேலைச் சீமை
நமக்குக் குடியாச்சு
ஆமாமென்று கும்மி பாடியருள
ஆனந்தஞ் சேரடி ஞானப் பெண்ணே!
ஆனந்தமான தலந்தானே அது
அத்து விதமாந் தலந்தானே
தானந்தமான சதா சிவத்தைப் போற்றித்
தாண்டிக் கும்மியடியுங்கடி!
ஞானமாம் ஆயிரத்தெட்டிதழ்ப்
பிடம் நாட்டமாஞ் சந்திரனுர் வீடு
மோனம் இருந்த மகா மவுனத்தை
மூட்டிக் கும்மியடியுங்கடி!
குண்டலி வாசி அகாரமடி, பிடரிக்
கண்டமதிலே உகாரமடி
உண்டு சுழியில் மகாரம் வைத்தால்
சிவலோகமிது வல்லவோ ஞானப் பெண்ணே!
ஓங்காரமான பிரணவந்தான் எங்கும்
உயர்ந்த சோமகலை நிறத்தாள்
ரீங்காரமான பராசக்தியை நீங்கள்
சேர்ந்து கும்மியடியுங்கடி

—வாலையானந்தர் ஞானக்கும்மி

சிந்தனை நின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக்காக்கி ஐம்புலன்க ளார
வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே

திருச்சதகம்—திருவாசகம்

4. இறையாத தீர்த்தம்

உலகில் உள்ள நீர் கையினாலோ ஒரு பாத்திரத்தாலோ முகந்து இடம் மாற்றலாம். இங்குக் கூறப்பட்ட பூசைக்குகந்த நீர், வேறு எந்த விதத்தாலும் முகந்து வைக்க முடியாதது என்பதை அறியவும்.

இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக் கென்றெண்ணி
மலர் தொட்டுக் கொண்டேன் வரும் புனல் காணேன்
தலைதொட்ட நூல்கண்டு தாழ்ந்ததென் உள்ளம்
தலைதொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே — திருமந்திரம் 1640

உள்ளத்தின் உள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே —மேற்படி 509

கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
உடலுற்றுத் தேடுவார் தம்மை யொப்பாரிலர்
திடமுற்ற நந்தி திருவருளா லேசென்
றுடலிற் புகுந்தமை ஒன்றறி யாரே —மேற்படி 513

இந்நீர் மூலாதாரம் தொட்டு சிரசு முடிய ஓடும் சந்திரகலை ஓட்டத்தால் அமையும் உணர்வு நிலையாகும். இது சிரசைக் கடந்து சந்திரமண்டல ஒளியாக அமைகிறது. இதுவே தான் நாதமாகவும் அமைவது. இதை சிவ மூர்த்தங்களில் பிறைச்சந்திரனாகவும் ஆகாயகங்கை யாகவும் வைத்துக் காட்டியுள்ளனர்.

இந்த வித்தையைத் தென்னாடு வந்து தாம் விளக்க முற்பட்டதாகத் திருமூலர் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார்.

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்கின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே திருமந்திரம் 84

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே மேற்படி 85

மாலாங்கனே யிங்குயான் வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே மேற்படி 77

திருமூலர் கூறும் சிவபூசையை அறியாதவர்கள் அத்தலைப்பில் வரும் மந்திரத்திற்குப் புறத்தே உள்ள நீரையும் பூவையும் கொண்டு விளக்கிப் பொருள் கூறுவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அத் தலைப்பில் ''சிவன் - சிவலிங்கம்'' என்று கண்டிருக்கிறதையும் மாறுபட்ட பொருள் கொண்டு விளக்கி மகிழ்கின்றனர்.

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே மேற்படி 1828

5-இனிது முடிந்து கட்டாத லிங்கம்

வீரசைவர்கள் சிவ சிந்தனை நிலைபெற லிங்கத்தை அங்கத்தில் கட்டிக் கொள்ளுகின்றனர். அதுவும் தன்னிலும் வேறான ஒரு பொருள்தான். எவ்விதத்தாலும் பொன், வெள்ளி கவசம் கொண்டு கட்டிக்கொள்ளாத லிங்கம் என்பதை உணர்த்தினர்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காள மணிவிளக்கே —மேற்படி 1823

உள்ளம் என்பதை இரத்தாசயமாகத் தவறுதலாகப் பொருள் கொள்ளுவதனால் வருகின்ற தவறுதலைப் புறப்பூசை செய்பவர் உணராததே இப் பிழைக்குக் காரணம்.

அவ்வுடனுவ்வு மவ்வுமனம் புத்தியகங்காரங்கள்
செவ்விய வீந்து நாதஞ்சித்த மோடுள்ளமாகும்

ஒவ்வெனு மெழுத்தா மைந்து முணர்வுதித் தொடுங்குமாறும்
பவ்வமுந் திரையும் போலும் பார்க்கிலிப் பண்புந் தோன்றும் —சிவஞானசித்தியார்

அயனரியரனு மீசர் சதாசிவ மதிதெய்வங்கள்
உயவரு மவ்வோ டுவ்வு மவ்விந்து நாதங்கட்குப்
பயனுறு மஞ்சி லான்மாப் பரவிடி லசித்தாம் பார்க்கிற்
சயமுறு வளியிரண்டுந்தவீர்த்து நிற்றனுந் தோன்றும், —சிவஞான சித்தியார்

இவ் வித்தையால் அறியப்படுபவர் நேரே சதாசிவராவர். அவரே காணப்படும் பேத உலகத்திற்கும், காண அரிய சூக்கும உலகத்திற்கும் தலைவராவர். அவரை அறியும் வழிநேரே நாதோபாசனைதான்.

"அல்லல் களைந்தே அருள் ஒளி காட்டி
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி" —விநாயகரகவல்.

உள்ளுதலைச் செய்வதும் செய்யாமலிருப்பதும் மூளையின் தொழிலேயாகும். உள்ளுதலைச் செய்யும் மனம் இந்திரியங்களின் வழிச் செல்லாது சிரசின் மேலுள்ள சகஸ்ரதளத்தில் பதிவுறுவதில் மனதின் ஓட்டமறும். அதன் வழிபற்றிய இந்திரியங்களின் தொழிலும் முடிவுறும். சகஸ்ரதள ஞானம் என்பது விந்து நாதமேதான்.

காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்த சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே —திருமந்திரம் 2425

தலையடி யாவ தறியார் காயத்தில்
தலையடி யுச்சியில் உள்ளது மூலந்
தலையடி யான அறிவை யறிந்தோர்
தலையடி யாகவே தானிருந் தாரே —திருமந்திரம் 2426

சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை யறிய கிலானுகில
எந்தையை யானும் அறியகி லேனே மேற்படி 2428

இவ்வுண்மையைச் சைவாகமம் இந்திகையாதி சிவகலைகள் பத்து என்றும், நிவர்த்தியாதி சத்தி கலைகள் ஐந்தையும் சிரசின் மேல் காணும்படியும் அவைகளே சாதாக்கிய புவனவாசிகளுக்கு சூக்குமதேகம் என்றும் கூறிற்று. இவைகளை அறிய மந்திர ராஜஜன ஈசான மூர்த்தியின் தியானம் சிரசின்மேல் அமையவேண்டும்.

பான்மொழி பாகன் பராபரன் தானுகும்
ஆன சதாசிவன் தன்னையா வாகித்து
மேன்முகம் ஈசான மாகவே கைக் கொண்டு
சீன்முகஞ் செய்யச் சிவனவ னுகுமே திருமந்திரம் 1825

குறிப்பு:—சீர்முகம் என்பது எதுகை நோக்கிச் சீன்முகம் என்றுயிற்று. சீர் —ஒலி. நாத ரிசனத்தில் வெளிப்படுபவன்.

கருடக்கொடியோன் காணமாட்டாக்
கழற்சேவடியென்னும்
பொருளைத் தந்திங்கென்னையாண்ட
பொல்லாமணியேயோ
இருளைத்துரந்திட்டிங்கே வாவென்
றங்கே கூவும்
அருளைப்பெறுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே
மொய்ப்பால் நரம்பு கயிறுக மூளை
என்புதோல் போர்த்த
குப்பா யம்புக் கிருக்க கில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பால வர்க்கும் அப்பாலாம் என்
ஆரமு தேயோ

அப்பா காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. —ஆசைப்பத்து திருவாசகம்.

6. கருதாத நெஞ்சம்:

மனிதன் விழிப்பு நிலையில் எதையாவது எண்ணிக் கொண்டிருப்பதே இயற்கை நிலையாகும். மனம் உருவங்கடந்த பரமாகாய மண்டலத்தை அடைந்த போது அதன் எண்ணும் ஆற்றலை விட்டு ஒரு குழந்தை பார்த்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு சுகநிலையை அடைந்து விடும்.

இரவும் பகலும் இலாத விடத்தே
குரவஞ் செய்கின்ற குழலியை நாடி
அரவஞ் செய்யாமல் அருளுடன் தூங்கப்
பருவஞ் செய்யாத தோர்பால னுமாமே. — திருமந்திரம் 1134.

பாலனு மாகும் பரா சத்தி தன்னுெடு
மேலனு காவிந்து நாதங்கள் விட்டிட
மூலம தாமெனும் முத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரந் தானே. 1135

நின்ற பராசத்தி நீள்பரன் தன்னொடு
நின்றறி ஞானமும் இச்சையுமாய் நிற்கும்
நன்றறியுங் கிரியா சத்தி நண்ணவே
மன்றன வற்றுள் மருவிடுந் தானே. 1136

இந்தச் சுகநிலையில் ஆடவர் மகளிர் உடல் சேர்க்கையில் இன்ப நிலையை நினைந்து நிற்பது போன்று, சீவன் சிவத்துடன் இணைந்து நிற்பதில் ஆணவ மலம் அகன்று ஆனந்த மயனாக நின்று விடுகிறான். சிவத்தை சத்திசித்து ஆனந்த வடிவினன் என்று கண்டனுபவித்த ஞானிகள் சத்து உருவாகவும், சித்து உருவாகவும் ஆனந்த வடிவமாகவும் அமைந்து நிற்பர்.

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாய்ந்துவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண் ணீறணிவித்துத் தூநெறியே சேரும்வண்ணம்
அண்ணல் எனக்கருளிய வாருர்பெறு வாரச்சோவே.—அச்சோப்பதிகம், திருவாசகம்

நீரின்ப வெள்ளத் துள்நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப் பரி
மேற்கொண்ட பாண்டி யனார்
ஓரின்ப வெள்ளத்து ருக்கொண்டு
தொண்டரை உள்ளங் கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழலே
சென்று பேணுமினே. — திருப்பாண்டிப்பதிகம், திருவாசகம்

7. கருத்தினுள்ளே முட்டாத பூசை:

மேலே சொல்லிய ஆறுவகையும் சாதகர் உள்ளத்தில் நிலைபெற்றால், எப்போதும் நிலைபெற்ற சிவபூசையாகும். இவை புறப்பொருள் பற்றாதவைகளாகையால் மூட்டாத பூசையாயிற்று.

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்; கர்ம
துட்ட தேவதைக ளில்லை;
துரிய நிறைசாந்த தேவதையாம் உனக்கே
தொழும்பன் ; அன்பபிடேகநீர்
உள்ளுறையி லென்னாவி நைவேத்தியம் ; ப்ராணன்
ஓங்கு மதி தூப தீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையா
வொப்புவித் தேன்; கருணை கூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்விய ரசமியாவும் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ள மௌன வெளியாய்க்
கலக்க வருநல்ல வுறவே

கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவுளே.

— தாயுமானவர் பாடல்:

இந்த ஏழு உண்மைகள் என்றும் மாருதவைகளாகும். இது சைவம் கண்ட நாதாந்த நெறியாகும். இது தொன்று தொட்டு வருவதால் பட்டினத்தடிகள், அவர் குருநாதனை இறைவன் தனக்கு உணர்த்தியதாகக் கூறினர்.

இறைவன் எண்ணற்ற குணங்களுடன் கூடினவனுயிருந்தும், அந்தக் குணங்களால் பாதிக்கப்படாதவனுயிருந்து உயிர்களுக்கு வேண்டியவாறு குணங்களில் செலுத்துபவனுயும் அவற்றினின்று மீட்பவனுகவும் உள்ளான். உயிர் பிரபஞ்சத்தை விட்டு அகண்ட சொரூபம் அடைய வேண்டும் என்ற விருப்பம் அதிகமானபோது அதற்கேற்ற முறையில் உயிரினிடம் அடங்கியிருக்கும் சத்திகளைத் தூண்டி விரைவில் அகண்ட சொரூபனுக விளங்கச் சிவம் உதவுகிறது. அகண்ட சொரூபத்தையும் எல்லைக்குட்பட்ட சொரூபத்தையும் ஒருவனே வகிக்க முடியும்எனச் சித்த தருமம் கூறுகிறது. அவ்விதம் தேகத்தை மாற்றிக் கொண்டு வாழலாம் என்று அண்மையில் பறைசாற்றியவர் இராமலிங்க சுவாமிகளாகும்.

ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்கமது வொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த வுருவது வாமே.

—திருமந்திரம் 1545

மாதவர் எல்லாம் மாதேவர் பிரான்என்பர்
நாதம தாக அறியப்படு நந்தி
பேதஞ்செய் யாதே பிரான்என்று கைதொழில்
ஆதியும் அந்நெறி யாகி நின்ருனே.

—1542

மனிதனிடம் மனிதன் தெய்வமாகவேண்டிய சத்தி நிலையங்கள் கருவாக உள்ளன. அவற்றை அறிந்து சாதகம் செய்தால் அவை யாவருக்கும் பலன் அளிக்கக் கூடியதேயாகும் என்பதே திருமூலர் காட்டிய ஞானத்தின் தத்துவமாகும். இந்த உண்மையை அறியப் புராணங்களைத் தத்துவக் கண்கொண்டு பார்க்க உண்மை விளங்கும் என்பதையே திருமூலர் இரண்டாந் தந்திரத்தில் விளக்கியுள்ளார். வாசகர்கள் சிந்தனைக்கு சதாசிவலிங்கத்தில் உள்ள ஒரு செய்யுளுக்கு விளக்கம் கீழே கொடுக்கப்படுகிறது.

எண்ணில் இதயம் இறைஞான சத்தியாம்
விண்ணிற் பரைசிர மிக்க சிகையாதி
வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணுங் கிரியை பரநேத் திரத்திலே.

—திருமந்திரம், 1744

(இ.ள்) இதயம் என்பது ஆத்மாவின் ஞானசத்தியுள்ள நிலையமாகும். "சத்தி தன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்"—சிவஞானசித்தியார். சிலந்திப்பூச்சி அதன் வலையில். எங்கு அசைவு காணிலும் அதை அறிந்து செயல்படும். அதுபோல ஆன்மா தனது ஐங்கோசத்தில் நடப்பவைகளை அதன் அசைவுகளைக் (ஸ்பந்தத்தைக்) கொண்டு அறிந்து கொள்ளும் ஆற்றலுடையது. இந்த ஐங்கோசங்களின் வியாபக எல்லையைப் பிரணவம் என்ற பேரால் வழங்கியுள்ளனர். பிரணவம் தேகமாகவும் தேகங்கடந்தும் ஆகாயக்கூறில் செயல்படுவதாகும். கேவல நிலையில் கருவி, கரணங்களோடு கூடாது அறிவில்லாது இருப்பதும் அப்பிரணவமேயாகும். சுத்த நிலையில் கருவி அகன்ருலும் அறிவுடன் வாழுவது அப்பிரணவமேதான். அறிவுடன் வாழும் சுத்த தேசிகனைப் பிரணவதேசிகன் என்றனர். இப்பிரணவம் ஆகாயக் கூருலாயது. காணப்படும் ஆகாயம் பூதாகாயம், குணமயஆகாயம், குணரசிதஆகாயம், சூரியாகாயம், சித்து ஆகாயம் என ஐம்பிரிவுகளாக உள்ளது. அவைகளின் தன்மையைப் பொறுத்து ஐங்கோசம் அமைந்துள்ளது. அறிவு உலகமயமானுல் பூதாகாயம், குணமய ஆகாயம் சிறப்புற்று ஏனையவை சொற்ப விளக்கத்துடன் உள்ளது. ஞானிகளுக்கு அகண்டமான சிவசக்தி பதிவுறுவதில் குணமயம் பூதாகாயம் சிறப்பின்றியதாகி குணரசித ஆகாயம் சிறப்புப் பொருந்தி, சூரிய ஆகாயம் சித்தாகாயம் சிறப்புற்றுப் பிரணவத்தில், ஆகாயக் கூறு வலுவடைந்து விடுகிறது. ஆத்மாவின் ஞானம் ஒருமைப் புள்ளியன்ஙியில் தனது இச்சை ஞானம், கிரியை செல்லுமிடமெல்லாம் தொழில் பெறும் ஆற்றலைப் பெறுகிறது. கடைந்த வெண்ணெய் தனது மாற்ற நிலையை அடையாததுபோல், ஞானிகள் தேகத்துடனிருந்தாலும் அகண்ட ஞானம் பெற்று நிலைபெறுகின்றனர். இதைத் திருமந்திரம் சீவன் என்ற தலைப்புக்கொண்டறிய, அநேககோடி அறிவணுக்களின் கூட்டமே சீவனின் நிலையென்பது விளங்கும்.

அத்தகைய ஆத்மாவின் பிரணவத்தில் இறைவனும் அவனது ஞானசத்தியும் பொருந்தியுள்ளார்கள். அது பரை என்ற பேருடன் ஆகாயமயமாய் உயர்ந்து விளங்கும். ஆதிசத்தி சிரத்திலும் சிகையிலும் பொருந்தியுள்ளாள். அதாவது சாமானியர்க்குப் பந்தத்தைச் செய்யும்

போது சிரசிலும் ஞானிகளுக்கு சிரசைக் கடந்த சிகைப் பிரதேசத்திலும் உள்ளாள். திருமூலர் சிரசிலுள்ள பகுதியான சகஸ்ர தளத்தைக் கவிழ்ந்த சகஸ்ரதளம் என்றும், சிகைப் பகுதியிலுள்ளதை ஊர்த்துவ சகஸ்ரதளம் என்றும் பிரித்துக் காட்டினர்.

இச்சா சத்தி பல வண்ணஒளியாகத் தேகத்தைச் சூழக் கவசம் போலுள்ளது. மேலான நேத்திரத்தில் விளங்கும் ஒளி சத்தியைக் கொண்டு கிரியையான சிவபூசையைச் செய்யுங்கள் என்ருர். ஞானிகளின் சிவபூசை நேரே நிராதாரம் செல்லும் வழியாகும். உலகினர் செய்யும் சதாசிவ வழிபாட்டில் தேக அடிப்படையில் பூசை நடைபெறுகிறது. இவை இரண்டு அடிப் படையில் வித்தியாசம் உடையது. அதனுல்தான் திருமூலர் சதாசிவலிங்கம் விளக்கின பிறகு ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் விளக்கியுள்ளார். சிவலிங்கம் தூலப்பிலுள்ள மந்திரங் களைக் கூர்ந்து கவனிக்க விளங்கும்.

மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே. — திருமந்திரம் 1776

மேவி யெழுகின்ற செஞ்சுட ரூடுசென்று
ஆவி எழுமள வன்றே உடலுற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
சாவித் தடக்கிற் பரகதி தானே. ,, ,,

எல்லா சீவகோடிகளிலும் இறைவனின் ஞானம் கருவாக உள்ளது. அத்தகைய சிவ ஞானத்தை சிறப்புறக் கண்டு சிவத்தை வழிபட்டுச் சிவத்துக்கு அங்கமாய் விளங்குதலேயே சிவபூசையின் குறிக்கோள் என்று சைவாகமம் கூறியுள்ளது,

---



சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில், திருவருள் திரு கயிலைக்குருமணி அவர்களின் முதலாம் ஆண்டுக் குருபூசைத்திரு நாள், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசுவாமி ரெட்டியார், B. A., B. L. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தபொழுது, யாழ்ப்பாண நல்லூர்த் தவத் திரு. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் உரை நிகழ்த்துதல். (29-10-72).

படிமப் பாதம் வைத்த அப் பரிசு

திரு. டி. என். அருணுசலம் பிள்ளை, B.A.,B.L.,
திருவிடைமருதூர்

இடைமருது அதனில் மணிவாசகர்க்குப் படிமப் பாதம் வைத்த பரிசு

எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும் அப்பரிசு அதனுல் ஆண்டு கொண்டு அருள் கிருன் இறைவன் என்பது மாணிக்கவாசகரது திருவாக்கு. அந்த முறையில், தமக்கும் அடியார் சிலருக்கும் இறைவன் அளித்த பேறுகள் பற்றித் திருவாசகத்தில், கீர்த்தித் திருவகவலில் அடிகள் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று, இடைமருது அதனில் இறைவன் ஈண்ட இருந்து படிமப்பாதம் வைத்து அருளியதாம்.

இடைமருதென்பது திருவிடைமருதூர். திருவிடைமருது என்று கருவூர்த்தேவராலும், இடைமருது என்று ஏனைய திருமுறை ஆசிரியர்களாலும் குறிப்பிடப் பட்டது. திருவிடைமருது என்ற பெயர், வழக்கில் திருவிடைமருதூர் எனத் திரிந்துள்ளது என்பது வெளிப்படை.

இடைமருதில் இப்பேற்றைப் பெற்றது மணிவாசகர்தான் என்பது பல்லோர் கொள்வது. கீர்த்தித்திருவகவலில் 'எந்தமை ஆண்ட பரிசது பகரின்' என்று அடிகள் தனித்துக் கூறிய பகுதியில் இந்நிகழ்ச்சியினைப் பற்றிய குறிப்பு இடம் பெருமல், தாமும் ஏனைய சிலரும் பெற்ற பேறுகளைப் பொதுப்பட அவர் கூறுமிடத்துக் காணப்படுவதால், இப்பேற்றினைப் பெற்றது பிறிதோர் அடியவராக இருந்திருக்கலாமோ என்ற ஐயம் சிலர் கொள்ளலாம். எனவே, இப்பொருள் சிந்தனைக் குரியதாகின்றது.

இறைவனுல் திருவடி சூட்டப்பெறும் பேறு பெருஞ் சிறப்புடையது என்றும், அப்பேற்றினைப் பெற்ற பெரியோர் ஒரு சிலரே என்றும் அறிவோம். ஆகவே, ஒரு தலத்தில் இப்பெரு நிகழ்ச்சி நடந்தது என்று கொண்டால், அந்நிகழ்ச்சிக் குரிய பெரியார் யாரென்று அக்காலத்தோர் தெரிந்திருத்தலும், பிற்காலத்தோர் வழிவழி அச்செய்தியைச் செவி வழிப் பெறுவதும் இயல்பாம். இடைமருதில் மணிவாசகர்தாம் அப்பேற்றினைப் பெற்ருர் என்று மரபு பேசுகின்றது. எதிர்மறையில் நோக்குமிடத்து, இத்தலத்தே இறைவன் பிறிதோர் அடியவர்க்கு அப்பேற்றினை அருளினுன் என்ற பேச்சே இல்லை என்பது கருதற்பாலது.

தன்னுல் திருவடி சூட்டப்பெறும் பேரருளினை, அப்பர் பெருமானுக்குத் திருக்குடந்தைக்கு அருகில் உள்ள நல்லூரில் நல்கினுன் இறைவன். 'இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானுர் நல்லவாறே' என்பது அப்பர் பெருமானே தரும் அகச்சான்று. இப்பேற்றினைப் பெற விழைந்தாராம் அப்பெருமான். ஆகவே, 'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்ருேம்' என்று அவர் தம் சென்னிமிசைப் பாதமலர் சூட்டினுன் சிவபெருமான் என்று அப்பரது அவ்விழைவைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் சேக்கிழார் பெருமான்.

மணிவாசகரும் இப்பேற்றினைப் பெற மிக மிக விழைந்தார் என அவர்தம் வாக்குகளாலேயே அறிகிருேம். தில்லைக்கு வரு முன்னர், தென்பாண்டி நாட்டிலே, திருப்பெருந்துறையிலும் உத்தரகோசமங்கையிலும் அவர் அருளிய பாடல்களின் பல பகுதிகள் இவ்விழைவைத் தெரிவிப்பன. அடிகள் திருவாரூரில் அருளிய திருப்புலம்பல் என்ற பதிகத்தின் சில பகுதிகளும் இவ்வகையில் சிந்திக்கற்பாலன.

குருபரனுகி அருளிய இறைவனது திருவடி இணையைப் பிரிவினை அறியா நிழலது போல முன் பின்னுகி, முனியாது, சாயா அன்பினேடு நாடொறும் போற்றினுர் மணிவாசகர். பூங்

கழற்கு இணை துணை மலர் கொண்டு தொழுதார். நற்செறிகழல் தாள் இணைகளை விருப்பொடு காட்டுமாறு தேவனை இடையருது வேண்டினார் –(20–1, 3)*. காதல் பெருகக் கருணை காட்டித் தன் கழல் காட்டினன் இறைவன். (43–9). பொய்யெலாம் விடத் திருவருள் தந்து பொன்னடியிணை காட்டினன். தையல் நல்லாரொடும் தலைதடுமாறுமே பொற்கழல் இணை காட்டினன். வெம்தொழில் வீட்டிட மென்மலர்க் கழல் காட்டினன். இச்சையாயின ஏழையர்க்கே செய்து அவரொடு இணங்கியே திரிந்த நிலை மாற எல்லையில்லாத தன் இணை மலர்க் கழல் காட்டி அறிவு தந்து ஆண்டு கொண்டான் –(41–1, 2, 5, 9, 10). கோதுமாட்டிக் குறிக் கொள்க என்று குரை கழல் காட்டித் தன் தொண்டரிற் கூட்டினன் (23–9).

கண்ணார் நுதலோன் கழலிணைகளைக் கண்கள் களிகூரக் கண்டார் அடிகள் (33–9). இப்படிக் களி வந்த சிந்தையொடு இறைவன் கழல் கண்டும் கலந்தருள வெளி வந்திலேன் என்பார் அவர் (6–15). ஆக, அவர்பால் மண்ணினில் மாயை மதித்து வகுத்த மயக்கு அருது மடந்தையர் சிந்தை திளைப்பது தொடர்ந்து நிகழ்ந்தது போலும். கழல் காணும் கதி கிடைத்தும் ஊன் கழியா விதி குறுக்கிட்டது என்பார் அவர் (6–42). எனவே, இறைவனைக் காணாத, அவன் அருட்கழல்களைக் காண இயலாத, காலம் வந்து தொடர்ந்தது என்றும், இதனால் அடிகள் துயருற்று அலந்து போனார் எனவும், அவன் கழல்களைத் திரும்பக் காண வேண்டும் என்ற ஆர்வத்தில் ஆழ்ந்தார் எனவும் அறிகிறோம்.

விரைமலர்த்தாள் பண்டு தந்தாற்போல் பணித்துப் பணி செய அழைக்குமாறும் (6–33) 'இன்னும் காட்டு கண்டாய் நின் புலன் கழலே' (6–27) என்றும், 'ஏது கொண்டு நான் ஏது செய்யினும் வல்லையே எனக்கு இன்னும் உன் கழல் காட்டி மீட்கவும்' (6–94) என்றும் இறையருள் வேண்டி வருந்தினார்.

இருந்து தன்னை ஆண்ட இறைவனது இணை அடியே சிந்தித்தார் (47–10) அடிகள். இரவும் பகலும் கண்ணார் நுதலோன் கழலிணைகள் அல்லாது வேறு எதையும் எண்ணுதல் அவன் அடிமையாகிய தனக்கு முறையன்றெனத் துணிந்தார் (33–9). கழற் சேவடிகளைக் கையால் தொழுது, கழுமத்தழுவிக் கொண்டு, எய்யாது தன் தலைமேல் வைத்து அழல்சேர் மெழுகொப்ப எம்பெருமான் பெருமான் என்று வாயால் அரற்ற ஆசைப்பட்டார் (25–9). கடிமலரால் புணையப் பெறுவதும், பெருந்தேன் பில்கப் பாதப்போது ஆய்ந்து அணைவதும் அவற்றைப் பாடிப் பணிந்து அணைவதும் என்று கொல்லோ என ஏங்கினார் (27–7, 9, 10). 'இறைதாள் பூண்டேன், புறம்போகேன், புறம் போகலொட்டேனே' (34–7) என்ற தம் உறுதியிற் பிறந்த ஆர்வத்தில் திளைத்தார்.

மீண்டும் ஆண்டவனது பெருங்கருணைக்கு இலக்கானார் அடிகள். தன் கழல்களைக் காட்டியதோடு அதன் கரும்புதரு சுவையினையும் அவருக்கு நல்கினான் இறைவன். மருவ இனிய மலர்ப்பாதம் அடிகளது மனத்தில் வளர்ந்தது. நயந்து உள் உருகினார். அனுகூலமாய் மெய் விதிர்த்துத் தெருவுதொறும் அலைந்து, அவன் கழல் நினைந்து வியந்து, மிக அலறினார். 'சிவபெருமான்' என ஆர்வங்கூர அவனை அழைத்து ஏத்தினார். 'இடைமருதே இடங் கொண்ட அம்மானே' என விளித்து, அவனது பரங்கருணைத் தடங்கடலிற் படிவமாறு தனக்கு அருளுமாறு வேண்டினார் (38–1, 9).

அதுபோது திருப்பெருந்துறையில் இருந்த அடிகள், தான் விழைந்த பேரருளினை அளிக்குமாறு பாண்டிப்பிரானை அழைக்காது, இடைமருதனை விளித்துப் போற்றுவானேன்? இதற்குக் காரணம் இருக்க வேண்டுமே. அடிகள் இடைமருதை மிக ஏற்றமுடைய தலமாகக் கொண்டிருந்தார் என அவரது வாக்குகளால் அறிகிறோம். ஏற்றமுடைய தலங்களைக் குறிப்பிடுங்கால் இறைவன் அங்கு உறைகின்றான், தங்குகிறான், இடங்கொண்டான் எனச் சிறப்பித்துச் சொல்லுவார் அவர். 'இடைமருதுறையும் எந்தாய்' என நான்காம் திருவகவலில் போற்றியுள்ளார். 'கோன் தங்கு இடைமருது' என வரும் குறிப்பைத் திருப்பொன்னூசலின் இரண்டாவது பாடலிற் காணலாம். 'இடைமருதே இடங்கொண்ட அம்மானே' என்றது திருவேசறவு என்ற திருப்பதிகத்தில் 'மருவினிய' எனத் தொடங்கும் ஒன்பதாவது பாடலில் வருவதாகும்.

உத்தரகோசமங்கையில் கோயில் கொண்ட இறைவனை, அடிகள், தம் ஆன்மார்த்த மூர்த்தியாக வழிபட்டார் என அறிவோம். திருத்தசாங்கத்தில், 'பெருந்துறைக் கோனது நாடு தென்பாண்டிநாடே என்றும்' அவர் ஊர் பார்மேற் சிவபுரம் போற் கொண்டாடப்படும் உத்தரகோசமங்கை என்றுமல்லவா ஏரார் இளங்கிளி பேசுகின்றது. கீர்த்தித்திருவகவலில் 'மீண்டு வாராவழி அருள் புரிபவன் பாண்டிநாடே பழம்பதியாகவும், பத்தி செய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன் உத்தரகோசமங்கை ஊராகவும்' கொண்டான் என்று அடிகள் கூறியிருப்பதையும் ஈண்டு நாம் கருத்திற் கொள்ளலாம்.

மேலே குறிப்பிடப் பட்ட திருப்பொன்னூசல் என்ற திருப்பதிகம் தில்லையில் பாடப்பட்டதாகக் குறிக்கப்பட்டுளது. இப்பதிகத்தைப் பாடுங்கால் அடிகளது மனம் முழுமையுமே தன் ஆன்மார்த்த மூர்த்தியின் நினைவில் திளைத்து லயித்திருந்தது போலும். பதிகத்திலுள்ள ஒன்பது பாடலிலுமே பாட்டுடைத் தலைவனைப் போற்றப் படுபவன் உத்தரகோசமங்கை மன்

(*எண்கள் முறையே திருவாசகப் பதிக, பாடல் எண்களைக் குறிப்பன)

னனே. தில்லையில் பாடப் பட்ட பதிகத்தில் தில்லைப்பிரான் இடம்பெருதது வியப்புக் குரியதே. அதனினும் வியப்பிற்குரிய ஒன்று நம் சிந்தனைக் குரியதாகின்றது.

மணிபுனைந்த அணி ஒன்றினைச் செய்யும் பொற்கொல்லன் மிகச்சிறந்ததெனத் தான் கருதும் ஒருமணியைக் காணுவோர் கருத்தை ஈர்க்கும் வகையில் அவ்வணியில் பொருத்தி மகிழ்கின்ருன். அதுபோல, ஏற்றமுடைய தலமாகத் தான் கருதும் இடைமருதினை இப்பதிகத்தில் ஏற்றமானதொரு அமைப்பில் அமைத்துப் போற்றி மகிழ்கின்ருர் மணிவாசகர். பாட்டுடைத் தலைவனுகிய உத்தரகோசமங்கைக் கோன் தங்கும் இடம் இடைமருது என்று இரண்டாவது பாடலில் சொல்கின்ருர். ஈண்டு 'தங்குதல்' என்ற அடிகளது சொல்லாட்சியின் சிறப்பு நம் கவனத்திற்குரியது. மேலும், (திருத்தசாங்கத்தில் காணுவது போல) பெருந்துறைக் கோனது ஊர் உத்தரகோசமங்கை தான் என்றதாலும், அந்த உத்தாகோசமங்கைக் கோன் தங்குமிடம் இடைமருது என்றதாலும், அடிகள் இடைமருதனைத் தனது குருநாதனும், ஆன்மநாதனும் ஒருங்கே அமைந்த மூர்த்தமாகக் கொண்டார் என்ற சிறப்பினையும் காண்கின்ரேம்.

தாம் இயற்றிய திருக்கோவையாரினும் மணிவாசகர் இடைமருதினைச் சிறப்பித்திருக்கும் முறைமை அறிந்து இன்புறற் பாலது. அந்நூலில், (இறைவனுகிய) தலைவியின் திருவினைச் சொல்லுமிடத்து, அவனைத் 'தில்லையன்னுள், கோழம்பமன்னுள் என்பன போன்று பெருந்தலங்களோடு ஒப்பிட்டுப் பேசுவார் அடிகள். அந்த முறையிலே அமைந்தது இடைமருதினைப் பற்றிய குறிப்புள்ள பாடல். 'வரைபொருட் பிரிதல்' என்ற பிரிவில் 'குன்றங்கிடையும்' எனத் தொடங்குவன. தலைவியைத் தான் அடைதற் பொருட்டுத் தோழி கூறிய பொருளைத் தான் சென்று தேடிக் கொணர்வேன் என்றும், தான் திரும்பும் வரையில் தலைவி தன் பிரிவால் வாடாதிருக்க அவளை ஆற்றுவிப்பாயாக எனத் தலைவன் தோழியிடம் வேண்டுவதாகவும் கூறும் பாடல் அது. இப்பாடலில் தலைவி 'அம்பலம்சேர் மன் தங்கு இடைமருது, ஏகம்பம், வாஞ்சியம் அன்ன பொன்'. எனத் தலைவனுல் சிறப்பிக்கப் படுகிருள். ஒரு பொருளோடு உவமிக்கப் படும் பொருட்கள் பலவாயின் அவற்றுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவதை முன் மொழிதல் மரபு. ஆனதாலே, ஈண்டு அடிகள் இடைமருதினை முன் வைத்து மொழிந்தமை அத்தலத்தின் தனிச் சிறப்பினை உணர்த்துதற் பொருட்டேயாம் என்ருல் அது மிகையாகாது. திருவாசகத்தில், கீர்த்தித்திருவகவலிலும் (75—80 வரிகள்) இந்த வகையிலேயே அடிகள் இம்மூன்று தலங்களையும் முறைப்படுத்திக் குறிப்பிட்டிருப்பது இக்கருத்தினை வலியுறுத்துவதாகும்.

குறிப்பிடப் பட்ட திருக்கோவையார் பாடலில், மேலும் ஒரு சிறப்பினையும் நாம் காணலாம். திருவாசகத்தில், திருப்பொன்னூசலில், முன் குறித்த இரண்டாவது பாடலில், உத்தரகோசமங்கைக் கோன் தங்குமிடம் இடைமருது எனச் சொல்லியதை அறிந்தோம். சொல்லப் பட்ட கோவைப் பாடலில் அம்பலம்சேர் மன் பெருவிருப்போடு 'தங்குமிடமும் இடைமருதே. தல்லைத் தொடர்பினுலே அந்தக் கோன்தான் அம்பலம் சேர் மன் எனப்படுகின்ருன் அவ்வளவே. மேலும், 'தங்குதல்' என்ற சொல்லாட்சியின் ஒற்றுமையும், ஈண்டு நாம் சிந்தித்து இன்புறற்பாலது.

இடங் கொள்ளுதல் என்ற சொற்களை மணிவாசகர் ஆளும் முறைமையும் நம் சிந்தனைக் குரியதே. கோயில் திருப்பதிகத்தில், ஐந்தாவது பாடலில், 'இறைவனே' நீ என் உடல் இடம் கொண்டாய், இனி உன்னை என் இரக்கேனே' என்கின்ருர் அடிகள். அதே பதிகத்தின் பத்தாவது பாடலில், 'எந்தையே, ஈசா, உடல் இடம் கொண்டாய், யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே 'என்கின்ருர். ஆக, 'ஒழிவற நிறைந்த யோகமே' என்றும், 'வள்ளல் வர வர வந்தொழிந்தான்' என்றும், 'ஒழிவற நிறைந்தான்' என்றும் அவனது குறைவிலா நிறைவை, முழுமையை, உணர்த்துமுகத்தான் பிற இடங்களிற் சொல்லி உணர்த்தியதே போன்று 'இடங் கொள்ளுதல்' என்ற சொற்களாலும் இறைவன் கொண்ட முழுமையான நிலையை, வியாபகத்தை, அடிகள் உணர்த்துகின்ருர் என அறியலாம். இறைவன் உடலிடங் கொண்ட வகையில் முழுமை இன்றெனின், மேலும் இரத்தற்கு இடமிருந்திருக்குமன்ரே? இல்லை என்பது தான் அடிகளது கருத்தாயிற்றே!

திருவாசகத்தில், இறைவன் இடங்கொண்டான் என்று சிறப்பிக்கப்படும் தலங்கள் இரண்டே. ஒன்று இடைமருதெனக் கண்டோம். மற்ருென்று ஏகம்பம். திருப்பூவல்லியில், அடிகள், இறைவனை 'இங்கு இடமாகக் கொண்டிருந்த ஏகம்பம்மேய பிரான்' எனப் போற்றுகின்ருர். திருப்பொற்சுண்ணத்தில் 'ஏகம்பத்தைத் தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற்கோயில்' என்று சிறப்பித்துள்ளார். ஆயினும், ஏகம்பத்தினும் இடைமருது அடிகளது உள்ளத்தைச் சற்றே மிகையாகக் கவர்ந்தது போலும். முற்கூறிய திருக்கோவையார் பாடலிலும், கீர்த்தித்திருவகவலின் 75-78 வரிகளிலும் இடைமருதை முதலிலும், ஏகம்பத்தை அடுத்தும் முறைப்படுத்தி அடிகள் கூறியது இக்கருத்திற்குச் சான்ருகும். மேலும், 'மருவினிய மலர்ப்பாதம்' எனத் தொடங்கும் திருவாசகப் பாடலில் இறைவனை 'இங்கு இடைமருதே இடங்கொண்ட அம்மானே' எனத் தேற்றேகாரத்துடன் அடிகள் சொல்லியிருப்பதூம் இக்கருத்தினைத் தெளிவுறுத்தும். 'இங்கு' என்ற சொல்லை அடிகள் பல்வேறிடங்களில் ஆண்ட முறைமையினைப் பயில்வோர்க்கு அச்

சொல் ‘இப்பூதலத்தே’ என்று பொருள் தருமெனப் புலப்படும்.

அப்பரடிகளும் இடைமருதினை இம்முறையிலேயே சிறப்பித்துப் போற்றியுள்ளார். ‘இணையிலா இடை மா மருது’ என்று இத்தலத்தைப் பெரிதும் புகழ்ந்தவரல்லவா அவர். திருவிடைமருதூரில் அவர் அருளிய இரண்டு திருத்தாண்டகங்களில் ஒன்றின் பத்துப்பாடல்களுமே ‘இடைமருது மேவி இடங்கொண்டாரே’ என முடிவதைக் காண்கிறோம். பிறிதோர் இடத்திலும், தன்னை இந்நாள் ஆட்கொண்ட இறைவர் இடைமருதைப் பண்டே இடமாக்கிக் கொண்டாரென அப்பரடிகள் பாடியிருப்பதும் கருதற்பாலது.

ஆக, மணிவாசகர் தாம் விழைந்த பெரும்பேற்றை அருளுமாறு இப்பூதலத்து இடைமருதே இடங்கொண்ட அம்மானை விளித்து வேண்டியது இயல்பாகவும் முறையாகவும் நிகழ்ந்த தொன்றும்.

அடிகள் திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டுத் தில்லைக்குப் போகு முன்னர், திருவாரூருக்கும், அங்கிருந்து இடைமருதுக்கும் வருகை தந்திருக்க வேண்டுமென ஊகிக்கலாம். திருவாரூரில் அடிகள் அருளிய திருப்புலம்பல் என்ற பதிகத்தில் (39-1, -), தான் வேண்டுவதெல்லாம் இறைவனது பூங்கழல்களும், அவைகளை அடைதற்கேதுவாகக் கற்றுவின் மனம் போன்று கசிந்துருகும் உள்ளமுமே என்று அவர் பாடியிருப்பது நம் கவனத்துக்குரியது. ஆக, இடைமருதை அடைய முன்னதாக அடிகள் இறைவனது இணையார் திருவடிகளையே ஒருமுகமாக எண்ணினர், நாடினர், நினைந்து உருகினர் என அறிகிறோம்.

மதுரைப் பெருநன் மாநகருக்கும் அடிகளுக்கும் இருந்த தொடர்பு நீண்டது, நெருங்கியது. புகழுடையது. இருந்தும், அவர், திருவாசகத்தில், அங்குக்கோயில் கொண்ட இறைவனைக் குறித்துத் தனிப் பதிகங்களை இயற்றியதாகத் தெரியவில்லை. எனினும், அப்பதியினைப் பற்றிய குறிப்புகள் திருவாசகத்தில் பரவலாக விரவியுள்ளன. அதுபோல, இடைமருதினைப் பற்றியே, அல்லது இடைமருதில் இருந்தே, அடிகள் தனிப்பதிகம் ஒன்றும் இயற்றவில்லை எனலாம். எனினும், இடைமருதினைப் பற்றி அவர் பாடிய மூன்று தனிப்பாடல்கள் உள்ளன. ஒன்று, முன்னே குறிப்பிடப்பட்டதும், ‘மருவினிய மலர்ப்பாதம் ’எனத் தொடங்குவதும் ஆகப் திருவேசறவு என்ற திருப்பதிகத்தில் உள்ள ஒன்பதாவது பாடல். இரண்டாவது, திருப்பூவல்லியில், ‘எந்தை எந்தாய்’ எனத்தொடங்கும் இரண்டாவது பாடல். மூன்றாவது, திருப்பொன்னூசலில், ‘மூன்றங்கு இலங்கு நயனத்தன்’ எனத் தொடங்கும் மூன்றாவது பாடல். இந்த மூன்று பாடல்களுமே இனியன தேனூறு வாசகங்கள் என்ற திருவாசகத்தின் அடைமொழிக்கு எடுத்துக்காட்டு போன்றன. இப்பாடல்கள் அல்லாது, முன் குறிப்பிட்டபடி, கீர்த்தித்திருவகவலிலும் போற்றித்திருவகவலிலும் இடைமருதினைப் பற்றிய சிறந்த குறிப்புகள் உள்ளன. இந்த குறிப்புகள், தனிப்பாடல்கள், மற்றும் சில தொடர்புள்ள பாடல்களினின்றும் இடைமருதில் இறைவன் மணிவாசகருக்கு அருளிய பேற்றினைப்பற்றி அறிய முடிகின்றது,

திருப்பூவல்லி என்ற பதிகம் தில்லையில் அருளியது. அது அடிகள் இடைமருதினின்றும் புறப்பட்டுத் தில்லையை அடைந்த பின்னர்ப் பாடியது எனலாம், இப்பதிகத்தின் முதற் பாடலை ஈண்டுச் சிந்திப்போம்.

“இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்
தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ”.

என்பது அப்பாடல். இப்பாடலின் முதல் இரண்டு அடிகளில் மணிவாசகர் தன் சென்னிமிசை இறைவன் பாதமலர் சூட்டியதையும் அப்படிச் சூட்டியதனால் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் கூறுவதைக் காண்கின்றோம். இதைச் சொல்லும்போதே அடிகளுக்குத் தான் பெற்ற அப்பேறு எங்கு நிகழ்ந்த தென்பது இயல்பாக நினைவுக்கு வந்திருக்க வேண்டுமே. வரத் தான் செய்தது என இரண்டாவது பாடலில் தெரிகிறது. அப்பாடல் வருமாறு:

“எந்தை எந்தாய் சுற்றம் மற்று மெல்லாம்
என்னுடைய
பந்தம் அறுத்து என்னை ஆண்டுகொண்ட
பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ.”



திருவிடைமருதூரில் உள்ளதும், மணிவாசகருக்குச் சிவபெருமான் படிமப்பாதம் வைத்தருளியதும் ஆகிய ஆளுடையா கோயில்.

முதற்பாடலில், திருவடி சூட்டப் பெற்றதின் பயனாகத் துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன் என்றார். மேற்சொன்ன அடுத்த பாடலில், சுற்றம் என்ற பந்தமட்டு மன்று, தாய் தந்தையரென்ற பந்தமும் அறுபட்டது என்கின்றார். பெற்ற அனுபவத்தினை அடிகள் இரண்டாவது பாடலில் தொடர்ந்து கூறியதால், அதற்கும் முதற்பாடலிற்கும் உள்ள இயல்பான தொடர்பினை நாம் அறிய முடிகின்றது. மேலும், இணையார் திருவடிகளைத் தன் சென்னி மிசைச் சூட்டி இந்த அனுபவங்களைக் கொடுத்தவன் ஆனந்த மயமாக, பொந்துத் தேனாக, இடைமருதில் இருக்கும் பாண்டிப் பிரான் எனச் சொல்கின்றார். பாண்டிப்பிரான் என்று இடைமருதனைச் சொல்லுவானேன் என்ற கேள்வி பிறக்கலாமே? இதற்குரிய விடையைத் திருப்பொன்னூசலில், இடைமருதுக்குரியதான இரண்டாவது பாடலில் காணலாம். அப்பாடலில், அடிகள், இடைமருதில் தங்கியிருப்பவன் உத்தரகோசமங்கைக் கோன் எனப் பேசுவதை முன்னமே குறிப்பிட்டுள்ளேன். உத்தரகோசமங்கையில் உள்ளவன் திருப்பெருந்துறைக் கோனே என்ற அடிகளது கூற்றையும், அவர் இடைமருதனைத் தன் குரு நாதனாகிய பெருந்துறைக் கோனும் தன் ஆன்மார்த்தக் கடவுளாகிய உத்தரகோசமங்கைக் கோனும் ஒருங்கே அமைந்த மூர்த்தமாகக் கருதினார் என்றதையும் முன்னமேயே விளக்கியுள்ளேன். எனவே, அவர் இடைமருதனைப் பாண்டிப் பிரான் என்றே குறிப்பிட்டதில் முரண்பாடு ஒன்றும் இல்லை எனலாம்.

திருப்பூவல்லி என்ற பதிகம் தில்லையில் பாடப்பட்டதாலும், அத்தலத்தினின்றும் இடைமருதுள்ள சேய்மையினைக் கருதி 'அந்த இடைமருது' என்று அடிகள் சுட்டிக் கூறியுள்ளார் என்க.

இணையார் திருவடிகளைத் தன் தலைமேல் வைத்ததினால் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி மேலும் சொல்லுவார் அடிகள். திருப்பூவல்லியிலேயே, பத்தாவது பாடலில், ''பேராசையாம் இந்தப் பிண்டமறப் பெருந்துறையான் சீரார் திருவடி என் தலைமேல் வைத்த பிரான்'' என்றமையும், குலாப்பத்தில், ஏழாவது பாடலில், ''மதிக்கும் திறலுடைய வல்லரக்கன் தோள் நெரிய மிதிக்கும் திருவடி என் தலைமேல் வீற்றிருப்பக் கதிக்கும் பசுபாசம் ஒன்றும் இலோம்'' என்றமையும் திருப்பூவல்லியில் முதல் இரண்டு பாடல்களில் சொல்லப்பட்ட அனுபவ உண்மையை வலியுறுத்துவன.

பசுபாச நீக்கம் என்ற அனுபவத்தோடு அல்லாது, இடைமருதன் ஆனந்தத் தேன் கொண்ட மூலபண்டாரத்தையே வழங்கினான் என்பார் அடிகள். மீண்டும் மீண்டும் குறையாது நல்கும் திறன் விளங்கவும், பெறும் ஆனந்தத்தின் தனிச்சுவை விளங்கவும் இடைமருதனை ஆனந்தத் தேனிருந்த பொந்து எனச் சிறப்பித்தார் போலும். 'ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்' என்று திருச்சாழலின் பத்தாவது பாடலிலும், 'ஊன் வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து தேன் வந்து அமுதின் தெளிவின் ஒளி வந்த வான்வந்த வார்கழல்' என்று திருவம்மானையின் நான்காவது பாடலிலும், வான்தாங்கு தேவர்களும் காணாத மலரடிகளை உடையவனும், இடைமருதில் தங்குபவனுமான உத்தரகோசமங்கைக்கோன் 'தேன் தங்கித் தித்தித்து அமுதூறித் தான் தெளிந்து அங்கு ஊன் தங்கி நின்றுருக்கும்' என்று திருப்பொன்னூசலில் இக்கருத்தினை மேலும் தெளிவுறுத்தும். இங்கும் மேல் பத்தியிலும் குறிப்பிடப்பட்ட ஐந்து பதிகங்களில் திருவம்மானை தவிர்த்து மற்ற நான்கும் தில்லையிலும், திருவம்மானை திருவண்ணாமலையிலும் (அடிகள் இடைமருதினின்றும் சென்ற பின்னர்) அருளப்பெற்றவை என்ற உண்மையைக் கருத்திற் கொள்வது இக்கட்டுரையின் மையக் கருத்தினை நன்குணரத் துணை செய்யும்.

அடிகளுக்கு இடைமருதின்பாலிருந்த ஈடுபாட்டினையும். இடைமருதன் திருவடி சூட்டிய நிகழ்ச்சியினையும் விளக்குமோர் அமைப்பு போற்றித் திருவகவலில் காணக் கிடக்கின்றது. அப்பகுதி பின் வருமாறு:

''என்னையும் ஒருவனாக்கி இருங்கழல்
(வரி-129)
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி.
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி''
(வரி-145)

இருங்கழல் சென்னியில் வைத்தமை பற்றி இங்கு சொல்லப்படுவதும், இணையார் திருவடி தலைமேல் வைத்தமை பற்றித் திருப்பூவல்லியில் சொல்லப்படுவதும் ஒரு நிகழ்ச்சி பற்றியே என அறிவோம். இங்கு, துன்பத்தை இறைவன் துடைக்கின்றான் எனவும், ஆனந்தவாரியாக இருக்கின்றான் எனவும், அடிகள் போற்றியுள்ளது திருப்பூவல்லியில். அவன் இணையார் திருவடிகளைத் தன் தலைமேல் வைத்ததனால் தன் சுற்றத் தொடர்வு அறுதலும் பசுபாச நீக்கமும் நிகழ்ந்தன என்று சொன்னமையையும், அங்கு இறைவனை ஆனந்தத் தேனிருந்த பொந்து என்று போற்றியுள்ளமையையும் நினைவுறுத்துவன. ஆக, இப்பகுதியின் முதல் மூன்று வரிகளில் அடிகள் சொல்லியவை, அவர் இடைமருதில் தான் பெற்ற பேற்றினை நினைந்தே எனக் கருதலாம். மேலும், இந்நிகழ்ச்சியினைப் பற்றிய அடிகளது நினைவின் தொடர்பே இப்பகுதியின் கடை மூன்று வரிகளிலும் காணப்படுவது என்றும் கருதலாம்.

திருவாசகத்தில், 'கனவிலும்' என்ற சொல் ஈரிடங்களிலும், அச்சொல்லே, சற்றே திரிந்து, 'கனாவிலும்' என்ற உருவில் ஓரிடத்தும் வருகின்றது. முதலிடம், இந்தப் போற்றித்திருவக

வழியிலேயே உள்ளது. அது, அடிகள் மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது, குருபரன் ஆகி இறைவன் அருளிய பெருமையைச் சிறுமை என்று இகழாது, அவன் திருவடி இணையைப் பற்றியது பற்றிக் கூறுமிடம் (4, 74-81). இரண்டாம் இடம், மேலே குறிப்பிட்ட 'கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி' என்ற வரியில் உள்ளது. மூன்றும் இடம், 'தேவர் கனவிலும் கண்டறியாச் செம்மலர்ப் பாதங்கள் காட்டும் .. சிவபெருமான்'' என்று திருப்பொற்சுண்ணத்தில் பதினொருவது பாடலில் வருவது. ஆக, மேற்சொன்ன இரண்டாம் இடத்திலே வரும் 'அருளிணை' என்ற சொல், இயல்பாக, 'இணை அடிகளை அருளினாய்' என்றுதானே பொருள் படும். மேலும், 'அருளிணை' என்று அடிகள் விளித்துச் சொன்னபோதே அவர் மன நினைவில், அவர் விழைந்த அருளிணை அருளிய இடைமருதன் எதிர் நின்றிருப்பானன்றோ! ஆகவேதான், அடுத்த வரியிலேயே இடைமருதுறையும் எந்தையை அடிகள் இயல்பாகப் போற்றினார் எனக் கருதலாம்.

இதுவரை, இடைமருதிலேதான் இறைவன் மணிவாசகருக்கு இணையார் திருவடிகளைச் சூட்டினான் என்ற கருத்தை வலியுறுத்துவதும், திருவாசகத்திலேயே காணப்படுவதுமான அகச்சான்றுகளைப் பற்றிச் சிந்தித்தோம். இது பற்றி ஒரு தக்க புறச்சான்றும் உளதாலே அதனையும் ஈண்டுச் சிந்திக்கலாம்.

புறச்சான்று:

திருவிடைமருதூரில் இடைமருதர் திருக்கோயிலுக்குத் தென்பால், ஓங்கு தென்மதிலை ஒட்டினாற் போன்று ஓர் பழங்கோயில் உளது. சுற்றிலும் புதரும், செடிகளும், மரங்களும் சூழ்ந்து மறைந்த சூழலிலே காணப்படுகின்றது. இதை இரண்டாண்டுகளுக்கு முன் முதன் முதலாக நான் பார்த்தபோது ஏதோவொரு பழங் கோயில் என்று எண்ணிய அளவிலே வாளா இருந்து விட்டேன். ஓரிரு மாதங்களுக்கு முன், மீண்டும் இக்கோயிலைப் பற்றிச் சிந்திக்க நேர்ந்தது. இதற்கிடையே, சில மாதங்களாக என்னையும் அறியாமல் என் உள்ளத்தே ஓர் எண்ணம் எழுந்து ஊடாடியதுண்டு. மணிவாசக அடிகள் இத்தலத்துக்கு வந்து இடைமருதனின் பேரருளுக்கு இலக்கானார் என்ற நம்பிக்கையில் ஊன்றியிருக்கும் எனக்கு, சிதில நிலையிலுள்ள இந்தக் கோயிலுக்கும் நம் அடிகளுக்கும் தொடர்பிருந்திருக்கலாமோ என்றிருந்த ஐயம்தான் அது. இந்தச் சிந்தனை ஊக்குவிக்க, இக்கோயிலைப் பற்றிய விபரங்களைத் தெரிந்தறிய முற்பட்ட எனக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. இக்கோயிலின் பெயர் ஆளுடையார்கோயில் என அறிந்தேன் அறிந்ததும் திரை விலகுவது போன்ற உணர்வினைப் பெற்றேன். ஓர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வரை இக்கோயிலைத் தாங்கள் பராமரித்து வந்ததாகக் கோயில் அருகில் வசிக்கும் சில சைவ ஆச்சாரிய குடும்பத்தினர் சொன்னார்கள். இக்குடும்பங்களைச் சேர்ந்த ஒருவரால் 1941-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருவிடைமருதூர்த் தலபுராண வசனத்தில், இக் இக்கோயிலின் பெயர் ஆளுடையார்கோயில் என்றும், அதன் பக்கலில் உள்ள திருக்குளம் அத்தலபுராணத்தில் புனிதமானதெனச் சிறப்பிக்கப் பட்டதொரு தீர்த்தமென்றும், அதன் அருகே, இடைமருதராகிய மகாலிங்கப்பெருமான் ஆண்டுதோறும் சிவராத்திரி தினத்தன்று எழுந்தருளித் தீர்த்தம் கொடுப்பாரென்றும் கொடுத்துள்ள சிறு குறிப்புகளையும் கண்டேன். (இவ்விழா இப்போது வழக்கில் இல்லை). மணிவாசகர் இடைமருதுக்கு வந்தபோது இக் கோயில் உள்ள இடத்தில்தான் தங்கியிருந்தாரென்றும், அங்கு இறைவன் அவருக்குக் காட்சி தந்தான் என்றும் இது தாங்கள் தங்கள் முன்னோரிடமிருந்து பெற்ற செவி வழிச் செய்தி என்றும் அந்த சைவ ஆச்சாரியர்கள் சொன்னார்கள். இச்செய்தியை அறிஞருலகம் ஏற்குமா என்ற மலைப்பிலாழ்ந்த எனக்கு மேலும் சில சொல்லி ஆதாரங்களும் காட்டினார்கள். அச் செய்தியைக் கேட்டதும், மறைந்த திரை முழுதுமே விலகியது போன்று உணர்ந்தேன். இந்தக் கோயிலின் பராமரிப்பைப் பல நூற்றாண்டுகளாகக் கவனித்து வந்தவர்களும் ஐந்து கொத்தாரென அழைக்கப்படுபவர்களுமான சைவ ஆச்சாரிய குடும்பத்தினருக்குப் ''படிமப்பாதம் வைத்தோர்'' என்ற பட்டப்பெயர் பரம்பரை பரம்பரையாக வருவதொன்றும். இப்பட்டப் பெயரை அவர்கள் பூசா காலங்களில் தங்கள் கோத்திரப் பெயரோடு இணைத்துச் சொல்லுதல் வழக்கமாம். இந்த ஐந்து கொத்தாரைப்பற்றிய ஒரு குறிப்பு 1932-ஆம் ஆண்டில் சைவசித்தாந்த மகா சமாசத்தினரால் வெளியிடப்பட்ட 8, 9-ஆம் திருமுறைகளின் பதிப்பில், திருவாரூர்ச் சோமசுந்தர தேசிகர் எழுதிய திருவிசைப்பா பற்றிய முன்னுரையில் காணப்படுகிறது. 1961-ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீனத்தால் வெளியிடப்பட்ட துறைசைப் புராண வசனத்

தின் முன்னுரையில் காணப்படும் நூலாராய்ச்சிக் குறிப்பில், " படிமப்பாதம் வைத்தோர்" என்பவர்கள் திருவிடைமருதூரில் உள்ள ஐந்து கொத்தினரில் ஒரு பிரிவினர் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே, இறைவன் இடைமருதனில் படிமப்பாதம் வைத்த அப்பெரு நிகழ்ச்சிக்கும் மணிவாசக அடிகளுக்கும் உள்ள தொடர்பிணையும், மேலும், நம் அடிகளுக்கும் மிகப் பழமையானது எனத் தோற்றும் இச்சிறு கோயிலுக்கும் உள்ள தொடர்பிணையும் இவ் விபரங்கள் காட்டுவன எனக் கொள்ளலாம்.

இக்கோயிலைப் பற்றி நான் மேலும் தெரிந்து கொண்ட விபரங்கள் சில உண்டு. இருபத்தைந்து ஆண்டுகளாக இக்கோயிலில் பூசை கிடையாது. பல ஆண்டுகளாக முன்னர் இக் கோயிலில் இருந்த மணிவாசகரது அழகான கற்சிலை களவு போய் விட்டதாம். அண்மையில் இக்கோயிலின் பராமரிப்பை அரசினர் ஏற்றுள்ளார்கள். அறநிலைய ஆணையர் திரு கே எஸ். நரசிம்மன், B.A.,B.L., I.A.S. அவர்கள், 17–11–72 அன்று, இக் கோயிலின் திருப்பணியைத் துவக்கி வைத்துள்ளார்கள். இச்செய்தி திருவாசகப் பற்றுடையார்க்கு மகிழ்ச்சி தருவதாகும்.

முடிவாக, இறைவன் இடைமருதில் படிமப் பாதம் வைத்து அப்பரிசினை அளித்தது மணிவாசகருக்குத்தான் என்றதில் ஐயத்திற்கு இடமில்லை என்ற மன நிலையில் இக்கட்டுரையை முடிக்கின்றேன்.



சென்னை அருணாசலேசுவரர் — வரதராசப்பெருமாள் கோயிலில், நவக்கிரகங்களின் தோத்திரக் கல்வெட்டுத் திறப்புவிழா, துணையாணையர் திரு. ஏ. வேங்கடாசலம் B.sc., B. L. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தபொழுது கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள்.

148704

JL
Q2m24,N59TK
N72·14·15·3

—o—o—



திருவேற்காடு தேவிகருமாரியம்மன் கோயில் திருப்பணிகள் துவக்கவிழாவில், நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு பேராசிரியர் திரு. க. அன்பழகன், M. A. அவர்கள் உரையாற்றுதல். (4-11-72).





திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயில் திருப்பணிகள் துவக்கவிழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்த அமைச்சர்கள் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் திரு. ஒ. பி. இராமன், பேராசிரியர் திரு. க. அன்பழகன், திரு. சாதிக்பாட்சா ஆகியவர்களுடன், அருட்டிரு சுவாமி இராமதாசர் அவர்கள்.

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயில் திருப்பணிகள் துவக்கவிழாவில், ஷெ கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. மணிவண்ணன் அவர்கள், வரவேற்புரை நிகழ்த்துதல்.